www.padippakam.com

16-30 ஏப்ரல் 2001 ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்

## அரசியல் அவலத்தில் தேர்தல் கூட்டணிகள்




## நாடு உலகமயம் ஊழல் தேசியமயம்

படிப்பகம்

www.padippakam.com

# நாடு முன்னேறுகிறதா? வேலையின்மை முன்னேறுகிறதா?

கடந்த பத்தாண்டுகளாகத் தொடரும் தனியார்மய - தாராளமயக் கொள்கையைச் செயல்படுத்திய வேகம் போதாது என்று மேலும் தீவிரப்படுத்தக் கிளம்பியுள்ளது, பா.ஜ.க. அரசு. இதை புதிய தலைமுறை சீர்திருத்தம் என்றும் பெருமையாகக் குறிப்பிடுகிறது. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் தனியார்மயமும் தாராளமயமும் சாதித்தது என்ன? வறுமையும் வேலையின்மையும், ஆலை மூடலும் ஆட்குறைப்பும், விலையேற்றமும் கட்டண உயர்வும், அந்நிய மூலதனக் கொள்ளையும் நாடு மீண்டும் அடிமையாக்கப்படுவதும்தான் தீவிரமாகியுள்ளது.

தனியார்மய - தாராளமயக் கொள்கையால் புதிய தொழில்களும் வேலை வாய்ப்பும் பெருகி நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறும் என்று முதலாளித்துவப் பொருளாதாரச் சூரப்புலிகள் ஆரூடம் சொன்னார்கள். ஆண்டுக்கு ஒரு கோடிப் பேருக்கு வேலை வாய்ப்பளிப்போம் என்று தேர்தல் வாக்குறுதி அளித்தது பாரதீய ஜனதா கட்சி. ஆனால், இவையெல்லாம் எவ்வளவு பெரிய மோசடி என்பதை அண்மையில் வெளியாகியுள்ள தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் (NSS) புள்ளி விபரங்களே அம்பலப்படுத்திக் காட்டிவிட்டன.

55-ஆவது சுற்று தேசிய மாதிரிக் கணக்கெடுப்பின் புள்ளி விபரங்களின்படி, தனியார்மயம் - தாராளமயம் செயல்படுத்தப்பட்ட கடந்த பத்தாண்டுகளில் வறுமையும் வேலையின்மையும் தீவிரமாகியுள்ளது. 1970-களிலும் 1980-களிலும் சாதிக்கப்பட்ட அளவுக்குக்கூட 1990-களில் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கப் புள்ளி விபரக் கணக்குப்படி இன்று 26 கோடிப் பேர் வறுமையில் பரிதவிக்கின்றனர். 1990-களில் வறுமை அதிகரித்துள்ள போதிலும், அதை மூடி மறைக்க மாதம் ரூ. 1000-க்கும் குறைவாக வருமானம் பெறுபவர்களே வறியவர்கள் என்ற அளவுகோலை வைத்தும், மக்கள் தொகையின் விகிதப்படி பார்த்தால் வறியவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் ஆட்சியாளர்கள் பொய்க் கணக்கு காட்டுகின்றனர்.

தனியார்மயம் - தாராளமயக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டபோது, வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் கிராமப் புறங்களில் 1.73% எனவும் நகரங்களில் 1.84% எனவும் இலக்கு தீர்மானிக்கப்பட்டது. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் கிராமங்களில் 0.67% ஆகவும், நகரங்களில் 1.34% ஆகவும் சுருங்கி, இலக்கைக்கூட எட்ட முடியவில்லை.

அதேசமயம், தனியார்மய - தாராளமயக் கொள்கைக்கு முந்தைய காலத்தில் - அதாவது 1980-களில் வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் கிராமப்புறங்களில் 2.03% ஆகவும், நகர்ப்புறங்களில் 3.39% ஆகவும் இருந்துள்ளது. புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக கடந்த பத்தாண்டுகளில் முந்தைய தலைமுறையின் அளவைக் கூட எட்ட முடியாமல் போனதோடு, அதில் மூன்றில் ஒரு பங்காக வேலை வாய்ப்பு வளர்ச்சி விகிதம் சுருங்கிப் போய்விட்டது. இது 1947-க்குப் பிறகு உள்ள வேலை வாய்ப்பு வளர்ச்சியில் மிகக் குறைந்த புள்ளி விபரம் என்ற புதிய 'சாதனை'யையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த இலட்சணத்தில் கேடுகெட்ட தனியார்மய - தாராளமயக் கொள்கையை இன்னும் தீவிரமாக்கக் கிளம்பியுள்ளது பா.ஜ.க. அரசு. அதன் விளைவாக நாடு முன்னேறும்! - வறியவர்கள், வேலையில்லாதவர்கள் எண்ணிக்கையில் உலகில் முதலிடம் வகிக்கும் நாடு என்ற வகையில்!

''ஹை-டெக்'' முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆளும் ஆந்திராவில் வேலை தேடி அலையும் விவசாயக் கூலிப் பெண்கள்




## இப்போது விற்பனையில்...

**புரட்சியில் இளைஞர்கள்** — விலை ரூ. 12.00

— மாபெரும் ரசிய புரட்சியில் பங்கு பெற்ற வீரமிக்க இளம் போராளிகளின் உரை, கடிதம் மற்றும் நாட்குறிப்பு

**இந்திய இடதுசாரிப் போக்கு - ஒரு கண்ணோட்டம்** — விலை ரூ. 3.00

— தலைமையின் துரோகமும் அணிகளின் தியாகமும் நிரம்பிய இந்தியக் கம்யூனிச இயக்க வரலாற்றின் சுருக்கமான தொகுப்பு

கீழைக்காற்று பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்.
நூல்களை அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ. 5 கூடுதலாக அனுப்பவும்.

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.




படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 10-11**

1 ஏப். 2001 - 30 ஏப். 2001

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


# சாதி—மதவெறி, ஊழல்—கிரிமினல் கும்பல்களின் கூட்டணி

அமீபா - ஒரு செல் உயிரி. அதற்கென்று நிலைத்த உருவம் கிடையாது, வடிவம் கிடையாது. எந்தவொரு அமீபாவும் தொடர்ந்து தன் உருவத்தை, வடிவத்தை மாற்றிக் கொண்டே இருக்கும். மேலும், அது இரண்டு இரண்டாகப் பிரிந்து கொண்டே போகும்.

அமீபாவைப் போலத்தான் ஓட்டுக் கட்சிகளும், அவற்றின் கூட்டணிகளும். புதுப்புது உருவத்தை - வடிவத்தை எடுக்கின்றன; பிளவுபட்டுக் கொண்டே போகின்றன. இந்த இதழ் உங்கள் கைகளில் கிடைக்கும்போது, இந்தத் தேர்தல்களுக்காவது ஒருவேளை கூட்டணிகளும், கட்சிகளும் இறுதி முடிவெடுத்திருக்கலாம். அதுவும் கூட, வேட்பு மனுவை விலக்கிக் கொள்வதற்கு இறுதிக் கெடு ஒன்றிருப்பதால், அந்த நிர்ப்பந்தம் காரணமாகத்தான் இந்தத் தற்காலிக நிலைமை.

ஒவ்வொரு பொதுத் தேர்தல்கள் முடிந்ததும், அது ஜனநாயகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்று கொண்டாடுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு முறையும் இந்த ஜனநாயக முறையின் அவலங்கள் மக்களுக்குத் தெரிகின்றன; பல உண்மைகள் விளங்குகின்றன . இந்த முறை வெளிப்படும் உண்மை, அரசியல் கட்சிகள் அனைத்தும் தம்மீதும் சரி, மக்கள் மீதும் சரி முற்றாக நம்பிக்கை இழந்து விட்டதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளும் வகையில் நடந்து கொள்வதுதான்!

தமிழ்நாட்டில் அனைத்துத் தொகுதிகளிலும் போட்டியிட்டு மக்களைச் சந்திக்கும் நம்பிக்கையை அனைத்துக் கட்சிகளும் இழந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. கடந்த ஐம்பதாண்டுகளில் ஏதாவது ஒரு கட்சிக்கே தமிழ்நாட்டு மக்கள் அறுதிப் பெரும்பான்மை கொடுத்து ஆட்சிக்கு வரவைத்தார்கள். கூட்டணி ஆட்சி அமையும் நிலை தமிழ்நாட்டில் உருவானதில்லை. இருந்தபோதும், தனித்த அறுதிப் பெரும்பான்மையைப் பெரும் நம்பிக்கை இந்த முறை எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லாமற் போய்விட்டது. எனவேதான் தனித்துப் பெரும்பான்மை பெறும் அளவுக்கு எந்தவொரு கட்சியும் வேட்பாளர்களை நிறுத்தத் துணியவில்லை. குறிப்பாக, தமிழ்நாட்டின் இரண்டு பெரிய கட்சிகளும் 150 தொகுதிகளில் கூடப் போட்டியிடத் துணியவில்லை. எண்பது சதவீத வெற்றியைப் பெற்றால்தான் அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடிக்க முடியும் என்ற சிரமமான இலக்கை முன்வைத்துப் போட்டியிடுகின்றன.

அதுமட்டுமல்ல; கடந்த முறை வெற்றி பெற்ற எண்ணிக்கை அளவுகூடப் போட்டியிடவும் முடியவில்லை. அவ்வாறு வெற்றி பெற்ற தொகுதிகளில் மீண்டும் போட்டியிடவும் அவை விரும்பவில்லை. மொத்தத்தில், பெரிய அரசியல் கட்சிகள் எல்லாமே மிரண்டு போயிருக்கின்றன. மிகப்பெரிய கூச்சல்போட்டு சவாலடிக்கும் சாதிக் கட்சிகளும் கூட, கிடைத்தவரை இலாபமென்றும், பெரிய கட்சிகளின் மிரட்சியிலும்தான் ஆதாயம் அடைந்துள்ளன.

சாதி - மதவெறி சக்திகளும், இலஞ்ச ஊழல் - கிரிமினல் குற்றவாளிகளும் அரசியலின் தவிர்க்க முடியாத அங்கம் என்பதை அங்கீகரிக்கும்படி ஓட்டுமொத்த சமூகமே இத்தேர்தல்கள் மூலம் நிர்ப்பந்தப்பட்டிருக்கிறது. காங்கிரசு, திராவிடக் கட்சிகள், போலி கம்யூனிஸ்டுகள் ஆகிய பாரம்பரிய அரசியல் கட்சிகள் மீது மக்கள் அவநம்பிக்கையுற்று ஒதுக்கிவிடும் நிலையில், சாதிக் கட்சிகள் புற்றீசல்களைப் போலக் கிளம்பியுள்ளன. முதலில், இந்துமதவெறி பாசிச பாரதீய ஜனதா தீண்டத்தகாத கட்சியல்ல என்று ஏற்கப்பட்டது. தி.மு.க., அ.தி.மு.க., ஜனதா பிரிவுகள் முதலிய அரசியல் கட்சிகள் அதனுடன் சந்தர்ப்பவாதக் கூட்டுச் சேர்ந்ததால், அது ஆட்சிக்கு வர முடிந்தது.

இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள், உல்லாச - ஊதாரிகளின் உறைவிடம் என்பது அம்பலப்பட்டுப்போய், தமிழக மக்களால் அடியோடு நிராகரிக்கப்பட்டது ஜெயா - சசி கும்பலின் தலைமையிலான அ.தி.மு.க. அதனுடன் அரசியல் கூட்டும், மத்தியில் அதிகாரப் பகிர்வும் செய்து கொண்டு மறுவாழ்வு கொடுத்தது, மதவெறி பாசிச பா.ஜ.க. அதோடு போட்டி போட்டுக் கொண்டு ஜெயா - சசி கும்பலுடன் கரம்கோர்த்த காங்கிரசும், போலி கம்யூனிஸ்டுகளும் ஒருபடி மேலே போய் இலஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் பிரச்சினையே கிடையாது; இயல்பானவை, ஏற்கக்கூடியவைதான் என்று பேசி சித்தாந்த நியாயம் கற்பித்தனர்.

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் ஆகியவை ஆளும் வர்க்கங்களின் அதிகாரபூர்வ புதிய பொருளாதாரக் கொள்கை ஆகிவிட்டதால், எந்தவொரு ஆளும் அரசியல் கட்சியும், கூட்டணியும், மக்கள் விரோதப் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டே தீர வேண்டியிருக்கிறது. மக்களின் தேவைகளை அவற்றால் நிறைவேற்றவே முடியாது. இந்த நிலையில் ஆளுவோரை எதிர்த்து வாக்களிப்பது பொதுப்போக்காகி விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



மூப்பனாரை அவரது வீட்டில் போய்ப் பார்த்துக் குசலம் விசாரிக்கும் ஜெயா-சசி: கொள்கைக் கூட்டணியா? நாற்காலி கூட்டணியா?

இதைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் ஆட்சிக்கு வந்துவிட முடியும் என்று ஜெயலலிதா நம்புகிறார். இல்லையானாலும், அத்தகைய கருத்து ஜெயா - சசி கும்பலைச் சூழ்ந்துள்ள கூட்டாளிகளாலும், செய்தி ஊடகத்தாலும் உருவாக்கப்படுகிறது.

அது மட்டுமல்ல; தற்போது ஆட்சிக்கு வரும் வாய்ப்பைத் தவறவிட்டால், அரசியல் மற்றும் சொந்த வாழ்க்கையே ஆபத்தாகிவிடும் என்று ஜெயா - சசி கும்பல் அஞ்சுகிறது. அதேசமயம், கருணாநிதி ஆட்சிக்கு மாற்றான அமைப்பாக எந்தக் கட்சியும் பலம் பெற்றிருக்கவில்லை. எனவே, தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியாவிட்டாலும், தனது தலைமையில் முடிந்த வரை எல்லா எதிர்க்கட்சிகளையும் அணி சேர்த்துப் போட்டியிட்டு, அதிகபட்சம் சாத்தியமான தொகுதிகளைப் பிடிக்க ஜெயா - சசி கும்பல் எத்தணிக்கிறது. இதனால், மத்தியில் முன்பு பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இருந்ததைப் போன்று, தனது தயவின்றி தமிழ்நாட்டில் எந்த ஆட்சியும் அமையாதவாறு செய்வதுதான் ஜெயா - சசி கும்பலின் இப்போதைய இலட்சியமாக உள்ளது.

காங்கிரசு - த.மா.கா. மற்றும் போலி கம்யூனிச கட்சிகளுக்கு ஜெயா - சசி தலைமையைவிட்டால் வேறு கதி கிடையாது. பா.ஜ.க. - தி.மு.க. பங்கேற்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியை எதிர்ப்பது மட்டுமல்ல, சட்டமன்ற நாற்காலிகளையும் பிடித்தாக வேண்டும். மூன்றாவது அணியானது காப்புத் தொகையையும் பறிகொடுக்கும் வழி என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த நிலையில் எல்லா அவமானங்களையும் தாங்கிக் கொண்டு ஜெயா - சசி கும்பல் போடும் பிச்சையைப் பெற்றுக் கொள்கின்றன.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகிய பா.ம.க. நிறுவனக் குடும்பத் தலைவர் இராமதாசு, ஜெயலலிதா - சசிகலா கும்பலுடன் கைகோர்த்துக் கொண்டதைத் தொடர்ந்து, த.மா.கா. - காங்கிரசு மற்றும் போலி கம்யூனிஸ்டு கட்சிகள் கதி கலங்கிப் போனதை நாடே அறியும். அதேபோல, எந்தெந்தத் தொகுதிகளில் யார், யார் போட்டியிடுவது என்பதையும் ஜெயா - சசி கும்பலே ஒருதலைப்பட்சமாக முடிவு செய்து அறிவித்ததையும் இந்தக் கட்சிகள் முணுமுணுப்போடு ஏற்க வேண்டியதாகிவிட்டது. கூட்டணிக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் யாருக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்கள் என்பதை மதிப்பீடு செய்து, தொகுதிகளைக் கொடுப்பது அல்லது பறிப்பது என்ற ஜெயா - சசி கும்பலின் அடாவடித்தனத்தையும் இந்தக் கட்சிகள் தாங்கிக் கொண்டன.

இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டதற்கு சொல்லப்பட்ட காரணமும், இந்தக் கூட்டணிக்கு வைக்கப்பட்ட பெயரான மதச்சார்பின்மை என்பதற்கும், தொகுதிப் பங்கீட்டிற்காகவும் ஒதுக்கீட்டிற்காகவும் நடக்கும் நாய்ச் சண்டைக்கும் ஏதாவது சம்பந்தமிருக்கிறதா, பாருங்கள்!

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்று பெயர் வைத்துக் கொண்டு, மாற்று அணியில் நடக்கும் கூத்துகளை இரசித்து வந்த ஆளும் கூட்டணியில் தொகுதிப் பங்கீடு, ஒதுக்கீடு தொடங்கியதும் இவர்களின் யோக்கியதையும் வெளிச்சத்துக்கு வந்துவிட்டது. திருமாவளவன், கண்ணப்பன், கிருஷ்ணசாமி ஆகிய புதிய வரவுகளுக்காக, வைக்கோ, வாழப்பாடி, திருநாவுக்கரசு ஆகிய பழைய முகங்களைக் கழட்டிவிடும் வேலையில் தி.மு.க. இறங்கியது. வீம்புக்குக் கத்தியை விழுங்கியவன் கதியாக, தனித்துப் போட்டியிடும் வைக்கோ கட்சி காப்புத் தொகையையும் பறிகொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. சுப்பிரமணிய சாமி வழியில் வாழப்பாடியும் அரசியல் அனாதையானார். அந்த நிலை தனக்கு வரக் கூடாது என்று தனக்கு வீசப்பட்டதைக் கவ்விக் கொண்டார் திருநாவுக்கரசு. பரிவாரங்களை இழந்துவிட்டுத் தேர்தல் களத்தில் குதித்திருக்கும் பா.ஜ.க. - தி.மு.க. கூட்டணி கலங்கிப் போயிருக்கிறது என்பதுதான் உண்மை.



'சமூக நீதி'க்காகவா பிறந்தது புதிய தமிழகம் - திமுக உறவு?

பிழைப்புவாதத்தில் மூழ்கிப் போய்விட்ட அணிகளைக் கொண்டு, தலைவர்கள் மட்டத்தில் பேரங்கள் நடத்தித் தொகுதிகளை மட்டுமல்ல; ஆட்சியையும், ஆட்சிக் காலத்தையும் கூடப் பங்கு போட்டுக் கொள்வதன் மூலம் இந்தக் கட்சிகள் எல்லாமே வாக்காளர்களைத்தான் அவமதிக்கின்றன.

தமது சொந்த பலம், மக்கள் ஆதரவு மீது நம்பிக்கை இழந்துவிட்ட இந்தக் கூட்டணிகள், ஏற்கனவே கூறியபடி சாதி - மதவெறிச் சக்திகள் மற்றும் இலஞ்ச - ஊழல் கிரிமினல் தலைவர்களை நம்பியே அமைந்துள்ளன.

முழுக்க முழுக்க முக்குலோத்தோரின் கட்டுப்பாட்டில் உள்ள அ.தி.மு.க., இராமதாசின் பா.ம.க.வோடு கூட்டுச் சேருவதன் மூலம் முக்குலத்தோர் - வன்னியர் கூட்டணியைத்தான் அமைத்துள்ளது. இதற்கு மாற்றாக தாழ்த்தப்பட்டவர் - யாதவர் - முதலியார் - வெள்ளாளக் கவுண்டர் போன்ற சாதிகளின் கூட்டணியை அமைக்க தி.மு.க. முயலுகிறது. அந்தந்த சாதிகளின் சங்கங்கள், கட்சிகளை உருவாக்கி, அதன் தலைவர்க

**சாதி - மதவெறி சக்திகளும், இலஞ்ச ஊழல் - கிரிமினல் குற்றவாளிகளும் அரசியலின் தவிர்க்க முடியாத அங்கம் என்பதை அங்கீகரிக்கும்படி ஒட்டுமொத்த சமூகமே இத்தேர்தல்கள் மூலம் நிர்ப்பந்தப்பட்டிருக்கிறது.**

www.padippakam.com



சிதம்பரம் நகர கிரிமினல் பேர்வழிகளான வாண்டையார் சகோதரர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கும் ஜெயா.

நாட்டின் அரசியல் இவ்வாறு இழிவான நிலைக்குப் போயிருப்பது தனித் தலைவர்களின், கட்சிகளின் சீரழிவு; பழைய தலைவர்களைப் போன்ற தியாக சீலர்கள், ஒழுக்கத் திலகங்கள் இப்போது இல்லை; மற்றபடி, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் எவ்விதக் குறைபாடும் கிடையாது என்ற கருத்துத் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது. இதற்காக, அரசியல்வாதிகளைக் கேலி கிண்டல் செய்வது முதல் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்துவது வரை நடக்கிறது.

அரசியல் கட்சிகள் என்பவை நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பிரிக்க முடியாத ஓர் அங்கம். தகுதியான அரசியல் கட்சிகளை உருவாக்க வேண்டியது நாடாளுமன்ற ஜனநாயக வாதிகளின் கடமை. அவ்வாறின்றி, ளுடன் பேரங்கள் பேசி விலைக்கு வாங்கி விடுவதுதான் பெரிய கட்சிகளின் தேர்தல் உத்தியாக உள்ளது.

இன்னொரு அரசியல் கேவலம் என்னவென்றால், கருப்புப் பண அரசியல்வாதிகளின் செல்வாக்கு கூட்டணி அரசியலில் பெருகி வருவதுதான். புதிய நீதிக்கட்சி ஏ.சி. சண்முகம், எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. திருநாவுக்கரசு, எம்.ஜி.ஆர். கழக வீரப்பன், மக்கள் தமிழ் தேசம் கண்ணப்பன், தமிழர் பூமி கு.ப. கிருஷ்ணன், இந்திய முசுலீம் ஜமாத் பேரவை ஆருண், ராஜீவ் காங்கிரசு வாழப்பாடி - இப்படிக் கருப்புப் பண ஆசாமிகள் ஒவ்வொருவரின் தலைமையிலும் ஓர் அரசியல் கட்சி. அவர்களின் மேடைச் சவடால்கள், கூட்டணி பேரங்கள், சாதிப் பேரணிகள், கார் பவனிகள் முதலியன நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இன்னொரு அவலம்தான்.

இந்தக் கருப்புப் பண அரசியல்வாதிகள் பெரும்பாலும் எம்.ஜி.ஆர். - ஜெயா ஆட்சியில் கோடி கோடியாகக் கொள்ளையடித்தவர்கள். பல கோடி சொத்துக்களைப் பாதுகாத்துக் கொள்ள சில கோடிகளை வாரி இறைக்கிறார்கள். எந்த அரசியல் கொள்கை — இலட்சியத்துக்காகவும் இவர்கள் கட்சி ஆரம்பித்து நடத்தவில்லை. பெரிய கட்சிகளும் இவர்களுடைய தொண்டர் பலம், மக்கள் ஆதரவை வைத்துக் கூட்டு வைத்துக் கொள்வதில்லை. இவர்களுக்கு ஓரிரு தொகுதி ஒதுக்கீடு செய்வதுகூட, உண்மையில் விலைபேசி விற்கப்படுவதும் வாங்கப்படுவதும்தான். 30 நாட்களே பதவியில் இருந்த வி.என். ஜானகி ஆட்சியின் போது, அரசு நிலத்தைத் தனியாருக்கு விற்று பல கோடி பணம் சுருட்டிய திருநாவுக்கரசு முதல் நிலக்கரி இறக்குமதி ஊழல் கண்ணப்பன் வரை, கருப்புப் பணம் தவிர வேறெந்த ஆதாரத்தைக் கொண்டு கட்சி நடத்துகிறார்கள்? ஒரு சுவரொட்டி அச்சிடுவதற்கு, ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதற்கு குறைந்தது எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்பதை விசாரித்துப் பாருங்கள். இந்தத் தனி மனிதர்களால் எந்த நோக்கத்துக்கு, என்ன காரணத்துக்கு, எப்படிக் கட்சி வைத்து நடத்த முடிகிறது?



கருப்புப் பண அரசியல் பேர்வழியான ஏ.சி. சண்முகத்தோடு (வலமிருந்து இரண்டாவது) கூட்டணி காணும் கருணாநிதி.

இத்தகைய அரசியல் கிரிமினல்களின் வளர்ச்சியைக் கொண்டு உற்சாகமும், ஊக்கமும் பெற்று கிரிமினல் குற்றக் கும்பல் தலைவர்கள் நெல்லை, சென்னை, ஈரோடு போன்ற இடங்களில் தனித்தனிக் கட்சி வைக்கத் தொடங்கிவிட்டார்கள். இவர்களும் கூட அங்கீகரிக்கப்பட்டு, கூட்டணி அரசியலில் உள்வாங்கப்பட்டு விடுவார்கள்.

**அரசியல் கட்சிகள், தலைவர்கள்தாம் சீரழிந்து போய் விட்டார்கள்; நாடாளுமன்ற ஜனநாயக முறை சரியாகத்தான் இருக்கிறது என்ற வாதம் — உடலின் ஓர் அங்கம் அழுகிச் சிதைந்து போனாலும், உயிர் இருக்கிறதல்லவா என்று வாதிடுவதைப் போலத்தான்.**

அரசியல் கட்சிகள், தலைவர்கள்தாம் சீரழிந்து போய்விட்டார்கள்; நாடாளுமன்ற ஜனநாயக முறை சரியாகத்தான் இருக்கிறது என்ற வாதம் — உடலின் ஓர் அங்கம் அழுகிச் சிதைந்து போனாலும், உயிர் இருக்கிறதல்லவா என்று வாதிடுவதைப் போலத் தான். இவ்வாறு அழுகிக் கொண்டே போனால், அழுகிய பகுதியை வெட்டி வீசுவதைத்தவிர, வேறு வழியில்லை. அப்படி வெட்டி வீசுவதுதான் பாசிச சர்வாதிகாரப் பிரகடனம்.

தற்போதைய அரசியல் கேலிக் கூத்துகள், அசிங்கங்களுக்கு இராணுவ ஆட்சியோ, சர்வாதிகாரமோ பரவாயில்லை என்ற கருத்தையே அனைத்து அரசியல் கட்சிகளும் வளர்க்கின்றன. இதனால் எல்லாம் பாதிக்கப்படுவது அரசியல் கட்சிகளும் தலைவர்களும் அல்ல. கிரிமினல் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை பெற்ற ஜெயலலிதா, நரசிம்ம ராவ் கூட கருப்புப் பூனை பாதுகாப்புடன்தான் பவனி வருகிறார்கள். கேடுகெட்ட அரசியல் தலைவர்களும், கட்சிகளும் செழித்து வளரும் விளை நிலமாக நாடாளுமன்ற ஜனநாயகம் இருப்பதால்தான் இது சாத்தியமாகிறது. இதற்கு மாற்று இராணுவ, பாசிச சர்வாதிகாரமல்ல. மக்களே அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் தான்!

www.padippakam.com

# ஊழல் 'தேசிய'ங்களின் போட்டா போட்டி

★ இந்துவெறி பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.-ம் பா.ஜ.க. உள்ளிட்ட அதன் பரிவாரங்களும் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நாட்டுப்பற்றும் கொண்டவர்கள் அல்ல. பாசிச காங்கிரசைப் போலவே இலஞ்ச ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு நாட்டையே காட்டிக் கொடுக்கும் துரோகக் கூட்டம்தான்!

★இந்திய இராணுவம் தேசத்தைப் பாதுகாப்பதற்கானது, புனிதமானது, கேள்விக்கோ சந்தேகத்திற்கோ அப்பாற்பட்டது, நாட்டுப் பற்றும் விசுவாசமும் கொண்டது என்பதெல்லாம் வெறும் மாயை. ஒரு புட்டி சீமைச் சாராயத்துக்கும் ஒருசில லட்சங்களுக்கும் சோரம் போகக் கூடிய, இலஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளில் சிக்கியுள்ள அமைப்புதான் அது.

★ நாட்டின் அடிப்படையான அரசியலமைப்பு முறையே இலஞ்ச ஊழல் - கிரிமினல் - விபச்சாரத்தனமானது. இத்தகைய மக்கள் விரோதிகளின் நலன்களுக்காகவே அது உருவாக்கப்பட்டுள்ளது. உழைக்கும் மக்களுக்கும் நாட்டு நலனுக்கும் இந்த அரசியலமைப்பு முறை முற்றிலும் எதிரானது.

— இந்த உண்மைகளை தெகல்கா.காம் அம்பலப்படுத்திய இராணுவ பேர ஊழல் விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டிவிட்டது.

தெகல்கா.காம் — இது கணினி திரைகளில் மட்டுமே படிக்கக்கூடிய ஒரு இணைய (இன்டர் நெட்) இதழ். கடந்த ஆண்டில் கிரிக்கெட் சூதாட்டத்தைப் பற்றி ரகசிய ஒளிநாடாவில் பதிவு செய்து அம்பலப்படுத்தியதன் மூலம் இந்த இணைய இதழ் பிரபலமானது. இப்போது இராணுவத் துறையில் நடந்து வரும் இலஞ்ச ஊழல் மோசடி - பேரங்கள் - தரகர்கள் பற்றி ரகசிய கேமிரா மூலம் பதிவு செய்து, ஆளும் பா.ஜ.க. கும்பலின் முகமூடியைத் திரைகிழித்துக் காட்டியுள்ளது.

தெகல்கா.காம் இணைய பத்திரிகையாளர்கள் இராணுவத் துக்குத் தேவையான உபகரணங்களை விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றை ''வெஸ்ட் எண்ட் இன்டர் நேஷனல்'' என்ற பெயரில் போலியாக உருவாக்கிக் கொண்டார்கள். இந்நிறுவனத்தின் தலைமையகம் லண்டனில் உள்ளதாகவும் தாங்கள் அதன் விற்பனைப் பிரதிநிதிகள் என்றும் ''லெட்டர் பேடு'' - அடையாள அட்டைகளைத் தயாரித்துக் கொண்டனர். நிருபர்களான அனிருத்த பெகல், மாத்யூ, சாமுவேல் ஆகியோர் தங்களது கைப்பெட்டியில் சக்திவாய்ந்த காமிராவும் - ஒலி வாங்கியும் பொருத்திக் கொண்டு, இராணுவத் துறை அதிகாரிகளுக்கு இலஞ்ச வலை விரித்து காட்சிகளையும் வாக்குமூலங்களையும் வீடியோவில் பதிவு செய்துள்ளனர்.

இராணுவ அமைச்சக அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், ஓட்டுக் கட்சித் தலைவர்கள், தரகர்கள் என பலதரப்பட்டவர்களிடம் தமது நிறுவனத்தின் தொலைதூரக் கண்ணாடி சாதனங்களை (பைனாக்குலர்) விற்க சிபாரிசு செய்யுமாறு கோரி, அவர்களுக்கு மொத்தம் 11 லட்ச ரூபாய் இலஞ்சம் கொடுத்து அவர்கள் பெற்றுக் கொண்ட காட்சிகளையும், அவர்களது உரையாடல்களையும் வீடியோவில் ரகசியமாகப் பதிவு செய்துள்ளனர். ஏறத்தாழ எட்டு மாதங்களாகத் தொடர்ந்து இந்நடவடிக்கைகளை இரகசியமாக மேற்கொண்டு, மொத்தம் நாற்பத்திரண்டு மணி நேரம் ஓடுகிற அளவுக்கு வீடியோ ஒளி-ஒலி நாடாவில் பதிவு செய்துள்ள இவர்கள், இதை நாலுமணிநேர அளவுக்கு சுருக்கித் தொகுத்து, கடந்த மார்ச் மாதத்தில் தமது இணைய பத்திரிகை மூலம் அம்பலப்படுத்தியுள்ளனர்.

இதில் சிக்கிய முக்கிய பிரமுகர், ஒழுங்கும் கட்டுப்பாடுமிக்க, ஊழலற்ற - நாட்டுநலன்மிக்க கட்சியாக சித்தரிக்கப்படும் பாரதீய ஜனதா கட்சியின் தலைவரான பங்காரு லட்சுமணன். இவர் கத்தை கத்தையாக ஒரு லட்ச ரூபாயை லஞ்சமாக வாங்கி தனது மேசை டிராயரில் பதுக்குவதை இன்று எல்லா தொலைக்காட்சிகளின் வாயிலாக இந்திய நாடே பார்த்து காறித் துப்புகிறது. இந்த ஆயுத பேரத்தில், மேலும் முப்பதாயிரம் டாலர்கள் வேண்டுமென்று பங்காரு லட்சுமணன் கூச்சமின்றி கேட்டுள்ளார். ரூபாயாக உங்களால் இந்தியாவுக்குக் கொண்டு வருவதில் சிக்கல் இருந்தால் டாலராகவே என்னிடம் தரலாம் என்கிறார். இவையனைத்தும் ரகசியமாக எடுக்கப்பட்ட வீடியோவில் தெளிவாகவே பதிவாகியுள்ளது.

மற்றொரு முக்கியப் பிரமுகர், இராணுவ அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டசின் சமதா கட்சித் தலைவியான ஜெயா ஜெட்லி. இராணுவ அமைச்சரான ஜார்ஜ் பெர்னாண்டசின் பங்களாவிலேயே இலஞ்ச பேரமும் பேச்சு வார்த்தைகளும் நடந்துள்ளன. ரூ. 2 லட்சத்தை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட ஜெயா ஜெட்லி, பெர்னாண்டசிடம் தான் சொல்வதாகவும், நீங்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமல் போகலாம் என்றும் நன்றியோடு வழியனுப்புகிறார். சிறிது நேரத்தில் தெகல்கா.காம் குழுவினரை செல்போனில் அழைத்த ஜெயா, தனது சமதா கட்சியின் பொருளாளரான ஆர்.கே. ஜெயினை சந்தித்து, அடுத்தகட்ட நடவடிக்கைகள் பற்றி பேசும்படியும் கூறுகிறார்.

அதன்படி ஆர்.கே. ஜெயினுடன் சந்திப்பு நடக்கிறது. தன்னை முக்கிய தரகராகக் காட்டிக் கொண்ட ஆர்.கே. ஜெயின் தனது சாத





படிப்பகம்

www.padippakam.com

னைகளைப் பெருமை யாகப் பட்டியல் போடுகிறார். 1998-இல் பெர்னாண்டஸ் இராணுவ அமைச்சராக ஆனதிலிருந்து, தனது வழியாக நடந்த பேரங்களின் மூலம் சமதா கட்சி ரூ. 50 கோடிக்கு மேல் சேர்த்துள்ளதாகவும், தான் மட்டும் ரூ. 10 கோடிக்கு மேலாக சம்பாதித்துள்ளதாகவும் பெருமை பொங்கக் கூறியுள்ளார்.

அரசியல் கட்சித் தலைவர்கள், அவர்களின் நெருங்கிய கூட்டாளிகளைச் சந்தித்து இலஞ்சம் கொடுத்து அதை வீடியோவில் பதிவு செய்யும் முன், தெகல்கா குழுவினர் இராணுவத் துறையிலுள்ள பல உயர் அதிகாரிகளைச் சந்தித்துள்ளனர். அவர்களிடமும் இலஞ்ச வலை விரித்து வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். இராணுவத் தளவாடங்கள் விநியோகத் துறை தலைமை இயக்குநர் லெப்டினென்ட் ஜெனரல் மஞ்சித்சிங் அலுவாலியா, ஆயுதங்கள் மற்றும் இயந்திரத் துறையின் கூடுதல் இயக்குனர் மேஜர் ஜெனரல் பி.எஸ்.கே. சௌத்திரி, இராணுவ உயர்மட்ட அதிகாரிகளான பிரிகேடியர் அனில் செகால், இக்பால்சிங்; ஓய்வு பெற்ற இராணுவ கூடுதல் தலைமை இயக்குநர் மேஜர் ஜெனரல் முர்காய், ஆயுதக் கொள்முதல் தரகர் லெப்டினென்ட் கர்னல் சாயல், இராணுவ அமைச்சக துணைச்செயலர் எச்.சி. பந்த், அத்துறையின் மூத்த அதிகாரி சசி மேனன், நிதித்துறை ஆலோசகர் நரேந்திர சிங் ஆகியோர் பேரம் பேசுவதும் இலஞ்சப் பணத்தைப் பெறுவதும் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

அனில் செகால், ஐந்து நட்சத்திர ஓட்டலில் விருந்து வைத்து தன்னைக் குஷிப்படுத்த வேண்டும் என்று பேரம் பேசுகிறார். இராணுவத் துறையில் என்னென்ன சாதனங்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளன என்ற இரகசிய பட்டியலை பகிரங்கமாக அறிவிக்கிறார். யார் யாருக்கெல்லாம்




**ஜெயா ஜெட்லி, ஜார்ஜ் பெர்னாண்டசு போல முகமூடி அணிந்து கொண்டு, இளைஞர் காங்கிரசு நடத்திய தேசிய ஜனநாயக அரசின் போலி சவ ஊர்வலம்: ஈயத்தைப் பார்த்து இளிக்கும் பித்தளை.**

# "ஊழல்பாய்" அரசின் புதிய விசுவாசிகள்

**"தெகல்கா - தகிடுதத்தம்; அரசியல்சதி: பழைய வில்லனான காங்கிரஸ் - 'ஆகவே ஆட்சி எனக்குத்தான்' என்று ஆர்ப்பாட்டம் செய்வதனால் இந்தப் பரபரப்பான நாடகத்தின் ஆசிரியர், இயக்குநர், தயாரிப்பாளர் யார் என்பதில் சந்தேகம் எழுகிறது... இந்தச் சமூக அமைப்பை அல்லது ஆட்சியின் அவலத்தை அம்பலப்படுத்துவதில் தெகல்காவுக்கு என்ன இத்தனை அக்கறை? இந்த நாடகத்தைத் தொடர்ந்து காங்கிரஸ் ஆர்ப்பாட்டம் செய்கிறதே, அது எப்படி? பரபரப்பாளர்கள் (தெகல்கா) காங்கிரஸ் கட்சியின் கூலியாட்களே. சோனியாவின் சாம்ராஜ்யக் கனவை அரங்கேற்றுவதற்கான அரசியல் சதிவேலைக்கு அமர்த்தப்பட்ட வாடகை மனிதர்களே என்பதை நிரூபித்து விடுவது ஒன்றும் சிரமமான காரியமல்ல... சோனியா இப்போது பரபரப்பு நாடகத்தைத் திரைப்பட நடத்தியிருக்கிறார் என்பதைத் தேசிய ஜனநாயக முன்னணி அரசு அம்பலப்படுத்த வேண்டும்... பத்தரை மணிநேர ஒளிநாடாவை நான்கு மணியளவுக்கு வெட்டி ஒட்டித் 'தயாரிக்கப்பட்ட' ஒரு நாடகத்தைக் காட்டி ஒப்பாரி வைப்பதும் நாடாளுமன்றத்தை நடத்த விடாமல் தடுப்பதும் 'ரௌடிகள்' செய்கிற காரியம்... தெகல்கா நிருபர்களைக் கைது செய்து விசாரணை நடத்தி உண்மைக் குற்றவாளிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வா. லஞ்சம் கொடுத்து அரசைக் கவிழ்க்க முயன்ற நாசக்காரர்களைக் கூண்டிலேற்று என்று நாடெங்கும் முழக்கம் கேட்கட்டும்"**

**இவையெல்லாம் ஆயுதபேர ஊழல் அம்பலப்பட்ட ஆத்திரத்தில் அத்வானியும், வாஜ்பாயியும் வாரியிறைத்த வாதங்கள் அல்ல; இந்துவெறியர்களின் கூட்டணியிலுள்ள தமிழினத் துரோகிகள் அவிழ்த்து விட்ட சவடால்களும் அல்ல!**

**இவையெல்லாம், தமிழினத்தின் விடியலுக்காகப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் "வள்ளல்", "ஐயா" தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிறுவனர் "ஆனாரூனா" எனப்படும் நா. அருணாசலத்தின் உணர்ச்சிக் குமுறல்கள். அவரது "நந்தன் வழி" இதழில் நெஞ்சின் அலைகள் எனும் அவருக்கான பக்கங்களில் 'அவரே' எழுதியுள்ள அரசியல் ஆய்வுக் கட்டுரையில் உள்ளவையே இவை.**

**அரசை கவிழ்க்க முயன்ற நாசக்காரர்களைக் கூண்டிலேற்று என்று முழங்குகிறார் ஆனா ரூனா. நடப்பது என்ன பொற்கால ஆட்சியா? அது கவிழ்ந்தால் தமிழனுக்கும் உழைக்கும் மக்களுக்கும் அப்படி என்ன ஆபத்து வந்துவிடப் போகிறது? அதற்கு முட்டுக் கொடுத்து ஆதரிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? தெகல்கா நிருபர்கள் காங்கிரசின் கூலியாட்கள் என்றும் அரசியல் சதி வேலைக்கு அமர்த்தப்பட்ட வாடகை மனிதர்கள் என்றும் இந்து வெறி ஆட்சியாளர்களே வியக்குமளவுக்கு அவசரமாக அவதூறு செய்து முத்திரை குத்துவது ஏன்? நாடாளுமன்றத்தை நடத்தவிடாமல் தடுக்கும் எதிர்க்கட்சியினரை 'ரௌடிகள்' என்று கீழ்த்தரமாக வசைபாடக் காரணம் என்ன? இக்கேடு கெட்ட நாடாளுமன்றம் முறையாகச் செயல்பட்டால் மட்டும் ஊழலும் கொள்ளையும் ஒழிந்துவிடுமா என்ன?**

**வாஜ்பாய் அரசு கவிழ்ந்தால் தி.மு.க., ம.தி.மு.க. முதலான பிழைப்புவாதக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களின் பதவி பறிபோய் விடுமே என்ற 'தமிழின உணர்வின்' ஆதங்கமா? அல்லது விடுதலைப் புலிகளின் செயல்தந்திர உத்தியின்படி, வாஜ்பாய் அரசைத் தாஜா செய்ய வேண்டும் என்ற நிர்பந்தமா? 'அனைத்தும் அறிந்த' ஆனா ரூனாவின் தலைமையை ஏற்கும் தமிழ்ச் சான்றோர்களுக்கே வெளிச்சம்!**

www.padippakam.com

எவ்வளவு கமிசன் தரவேண்டும் என்று விளக்குகிறார். சீமைச் சாராய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டு இக்பால்சிங் முதல் தவணையாக நன்கொடை பெறுகிறார் நரேந்திரசிங் இலஞ்சப் பணத்தை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்கிறார். ஆயுதபேரக் கமிசன் மூலம் ஜெனரல் சவுத்திரி எங்கெல்லாம் வீட்டு மனை வாங்கியுள்ளார் என்பதைப் பெருமையாக அவிழ்த்து விடுகிறார் பந்த்.

இதன் இறுதிக் கட்டமாக, நாட்டுப் பற்றுமிக்க ஒழுக்க சீலர்களைக் கொண்ட அமைப்பாக சித்தரிக்கப்படும் இந்துவெறி பாசிச அமைப்பான ஆர்.எஸ்.எஸ்.இன் அறங்காவலர்களில் ஒருவரான ஆர்.கே. குப்தாவும், அவரது மகன் தீபக் குப்தாவும் தங்கள் மூலமாகவே கமிசன் தொகை மேலிடத்துக்கு அனுப்பப்படுவதாகவும், பிரதமர் அலுவலகச் செயலாளர் பஜ்ரேஷ் மிஸ்ரா அல்லது பிரதமரின் வளர்ப்பு மகளின் கணவரான ரஞ்சன் பட்டாச்சார்யா மூலமாக காரியத்தை முடித்துவிடலாம் என்றும் ஒரு சினிமா கதை போல விளக்கியுள்ளனர். ஆர்.கே. குப்தா, பிரதமருக்கும் உள்துறை அமைச்சர் அத்வானிக்கும் தான் மிக நெருக்கமானவன் என்றும், கோடிக் கணக்கில் தரகுத் தொகை பெற்று பலருக்குக் கொடுத்துள்ளதாகவும் பெருமையாக கூறியுள்ளார்.

இவை தவிர, கார்கில் போரைச் சாதகமாக்கி கொண்டு அதிக விலைக்கு வெடிமருந்துகள் கொள்முதல் செய்த வகையில் மட்டும் ரூ. 100 கோடிக்கு மேல் இராணுவ உயர் அதிகாரிகள் கையூட்டாகப் பெற்றுள்ளனர் என்றும், ஒவ்வொரு உள்நாட்டுக் கொள்முதலுக்கு 7% கமிசனும், வெளிநாட்டுக் கொள்முதலுக்கு 14 முதல் 17% கமிசனும் பெறுவது வாடிக்கை என்றும் இராணுவ அதிகாரிகள் மற்றும் தரகர்களுடன் தெகல்கா குழுவினர் பேரம் நடத்தியபோது வாக்குமூலங்களாகப் பதிவாகியுள்ளது.

இப்படி தெகல்கா பத்திரிகையாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவ அதிகாரிகள், தரகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், அவர்களது உதவியாளர்களைச் சந்தித்து அவர்கள் வாயாலேயே இராணுவத் துறையில் நடக்கும் இலஞ்ச ஊழல்களைப் பற்றிப் பேச வைத்து, அதைத் தொகுத்து வெளியிட்டதும் நாடே அதிர்ச்சியடைந்தது. பா.ஜ.க. தலைவர்களின் முகத்திரையும் கிழிந்தது.

இராணுவ பேர ஊழல் விவகாரம் அம்பலமானதும் பீதியடைந்த ஆர்.எஸ்.எஸ். தலைமையின் நிர்ப்பந்தத்தால், பா.ஜ.க. தலைவர் பதவியிலிருந்து பங்காரு லட்சுமணன் நீக்கப்பட்டுள்ளார். ''நான் ஒரு ''தலித்'' என்பதால் என்னைப் பழிவாங்க மேல்சாதியினர் செய்த சதியே இது!'' என்று அவர் அப்பாவியாக நாடகமாடுகிறார். ''கட்சிக்குத்தான் நன்கொடை பெற்றேன்; இலஞ்சமாகப் பெறவில்லை'' என்று நியாயவாதம் பேசுகிறார். இவரைப் போலவே சமதா கட்சித் தலைவி ஜெயா ஜெட்லியும்




**திருச்சியில் நடந்த தேசிய ஜனநாயக முன்னணியின் ''தெகல்கா'' விளக்கப் பொதுக் கூட்டத்தில் தமிழினப் பிழைப்புவாதிகளுடன் அத்வானி (இடமிருந்து மூன்றாவது) மற்றும் ஜார்ஜ் பெர்னாண்டஸ் (வலமிருந்து இரண்டாவது).**

கட்சிக்கு நன்கொடை கேட்டதாகவும் அதை உடனே அமைச்சர் சீனிவாச பிரசாதாவிடம் கொடுக்கச்சொன்னதாகவும் இப்போது புரட்டுகிறார்.

மே. வங்க சட்டமன்றத் தேர்தலில் இந்த ஊழல் விவகாரம் தமது கட்சியின் தேர்தல் வெற்றியைப் பாதிக்கும் என்பதால், பா.ஜ.க. கூட்டணியிலுள்ள திரிணாமுல் காங்கிரசுத் தலைவி மம்தா பானர்ஜியும், அஜித்குமார் பாஞ்சாவும் மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகி ஊழல் எதிர்ப்பு நாடகமாடுகின்றனர். அதைத் தொடர்ந்து ''என் மீது எந்த ஊழல் கறையும் கிடையாது; விசாரணைக்கு எப்போதும் நான் தயார்'' என்று இராணுவ அமைச்சரான ஜார்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகி யோக்கிய சிகாமணியாக நாடகமாடுகிறார். அவரது சமதா கட்சியின் மத்திய அமைச்சர்களும் பதவி விலகியுள்ளனர். பா.ஜ.க. அரசும், ஊழலில் சிக்கி அம்பலமான நான்கு இராணுவ உயரதிகாரிகளைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்து, பரிசுத்த நாடகமாடுகிறது.

நேரு காலத்து முந்திரா ஊழல், இந்திராவின் நகர்வாலா ஊழல், ராஜீவின் போபர்ஸ் ஊழல், நரசிம்மராவின் அர்சத் மேத்தா ஊழல், ஊறுகாய் வியாபாரி மோசடி ஊழல், சர்க்கரை ஊழல், டெலிகாம் ஊழல், யூரியா ஊழல், ஜார்கந்து கட்சி எம்.பி.களுக்கு இலஞ்சம் கொடுத்த ஊழல் - என இலஞ்ச ஊழலின் மொத்தக் குத்தகைதாரர்களான காங்கிரசுக் கயவாளிகள், தற்போதைய இராணுவ பேர ஊழல் விவகாரத்தைத் தொடர்ந்து ''பா.ஜ.க. அரசே பதவி விலகு!'' என்று கூப்பாடு போடுகின்றனர். அவர்களோடு போலி கம்யூனிஸ்டுகளும் எதிர்க்கட்சியினரும் சேர்ந்து கொண்டு நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் செய்து பட்ஜெட் கூட்டத்தைத் தொடர விடாமல் முடக்கியுள்ளனர். அம்பலப்பட்டுக் கிடக்கும் பா.ஜ.க. அரசோ, இந்த ஊழல் விவகாரம் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கவும் விசாரணைக்கும் தயாராக உள்ளதாகவும், எதிர்க்கட்சிகள் குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க முயற்சிப்பதாகவும் சாடுகிறது. நீ மட்டும் யோக்கியமா? என்று சோனியாவின் உதவியாளர் வின்சென்ட் ஜார்ஜின் நிதி மோசடி - ஊழல்களை அவிழ்த்து விட்டு லாவணிக்கு சூடேற்றுகிறது.

இலஞ்ச ஊழலில் சிக்கியுள்ள கிரிமினல் கும்பலான பா.ஜ.க.வைத் தண்டிப்பது விவகாரத்தின் ஒரு பகுதிதான். அதை விட முக்கியமானது, இந்த நாட்டின் ஒட்டு மொத்த அரசியலமைப்பு முறையே இலஞ்ச ஊழல் - மோசடி - அதிகார முறைகேடுகளால் அழுகி நாறுகிறது. சோரம் போனது ஒரு சில தனிப்பட்ட நபர்கள் மட்டுமல்ல; அரசியல்வாதிகள், அரசாங்கம், இராணுவம் உள்ளிட்டு முழுமையாக இந்த அரசியலமைப்பு முறையே விபச்சார - கொள்ளைக்காரத்தனமானது என்பதையே, பானை சோற்றைப் பதம்பார்த்தாற்போல இராணுவ பேர ஊழல் விவகாரம் நிரூபித்துக் காட்டியுள்ளது. இன்றைய நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையானது சுரண்டல் கொள்ளையர்கள், பாசிசக் கொடுங்கோலர்கள், சாதி - மத - இன வெறியர்கள், ஊழல் பெருச்சாளிகள் முதலான மக்கள் விரோதிகளின் நலன்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது. இதை உழைக்கும் மக்கள் புரிந்து கொண்டு இன்றைய அரசியலமைப்பு முறையைத் தூக்கியெறியும் புரட்சிகரப் போராட்டங்களில் இறங்கிவிடக் கூடாது என்பதற்காகவே ஓட்டுப் பொறுக்கிகள் அனைவரும் பெருங்கூச்சல் போடுகிறார்கள்; புழுதியைக் கிளப்புகிறார்கள். இலஞ்சம், ஊழல், மோசடி, பகற் கொள்ளை, அராஜகம், அடக்குமுறை முதலானவற்றால் மரணப் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் இன்றைய நாடாளுமன்ற அரசியலமைப்பு முறையோ, மக்கள் புரட்சியில் உயிர் விடுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# யார் ஆக்கிரமிப்பாளர்கள்?

## தரைக்கடை வியாபாரிகளா? பெரு வணிக நிறுவனங்களா?

ஆக்கிரமிப்பு வரி! இப்படியொரு விநோதமான வரியை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

குலேபகாவலி என்ற பழைய திரைப்படத்தில், திண்ணையில் சிறிது நேரம் உட்கார்ந்தால் 'திண்ணை வரி' வசூல் செய்யும் மன்னன் ஆட்சி செய்வதாக ஒரு நகைச்சுவை காட்சி உண்டு. இப்போது ஆக்கிரமிப்பு வரி வசூலிப்பது மன்னராட்சி அல்ல; மாநகராட்சி!

மலைக்கோட்டை மாநகரத்துத் தெப்பக்குளத்தின் கரையோரத்திலும், சாக்கடைகளின் மேலும் இரண்டடி, மூன்றடி அகலப் பரப்பளவில் பூவும் பழமும் துணியும் பொம்மையும் பிளாஸ்டிக் பொருட்களும் விற்கும் 'ஆக்கிரமிப்பாளர்கள்' மீதுதான் இந்த வரியை விதித்திருக்கிறது, திருச்சி மாநகராட்சி.

'ஆக்கிரமிப்பாளர்'களை அப்புறப்படுத்திவிட்டு நகரை அழகுபடுத்திட வேண்டும் என்றுதான் அரசு முனைந்தது. ஆனால் தரைக்கடை வியாபாரிகளின் போராட்டம் காரணமாக அவர்களை விரட்டியடிக்க முடியவில்லை. நகரை அழகுபடுத்தவும் முடியவில்லை. எனவேதான் இந்த வரி!

இந்த வரியின் மூலம் திருச்சி மாநகராட்சிக்கு இலட்சக் கணக்கில் வருவாய் கிடைக்கப் போகிறதா? நிச்சயமாக இல்லை. அப்புறம் எதற்காக இந்த வரி? தரைக்கடை வியாபாரிகள் அனைவரும் ஆக்கிரமிப்பாளர்கள்; தாங்கள் அன்றாடம் அமர்ந்து விற்பனை செய்யும் இடத்தின் மீது எவ்வித உரிமையும் இல்லாதவர்கள்; எனவே அவர்கள் சட்ட விரோத மானவர்கள் என்பதை எழுத்துப் பூர்வமாக அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்குத்தான் இந்த வரி!

அதுமட்டுமல்ல, சாலைகளை ஆக்கிரமிப்பதால் அவர்கள் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கிறார்கள்; நடைபாதைகளை ஆக்கிரமிப்பதால் பாதசாரிகளுக்கு இடையூறாக இருக்கிறார்கள்; கடை வீதிகளை ஆக்கிரமிப்பதால் வர்த்தகர்களுக்கு இடையூறாக இருக்கிறார்கள். மொத்தத்தில் நகரத்தையும் அழகையும் பொலிவையும் கெடுக்கிறார்கள் என்பது அரசின் குற்றச்சாட்டு.

நகரின் மையத்தில் பிரம்மாண்டமான ஒரு அடுக்குமாடிக் கட்டிடத்தை நாம் அண்ணாந்து பார்க்கும்போது, அதன் வாயிற்புற நீரூற்றுகளும் வண்ண விளக்குகளும், நம் முகத்தைப் பிரதிபலிக்கும் அதன் கண்ணாடிச் சுவர்களும் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன. சாலை முழுவதையும் ஆக்கிரமிக்கும் அதன் நிழல், மனதுக்கு இதமாகவும் இருக்கிறது.

இருப்பினும் நகரின் மையமான பகுதியில் பல்லாயிரம் சதுர அடி நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு நிற்கும் அந்தக் கட்டிடத்தில் என்ன தொழில் நடக்கிறது; பல இலட்ச ரூபாய் மதிப்புடைய கண்ணாடிச் சுவர் பளபளக்கும் அளவுக்கு அதில் எப்படி இலாபம் வருகிறது; நெருக்கடி மிகுந்த நகரின் மையமான பகுதியில்தான் அந்தக் கட்டிடம் இருக்க வேண்டும் என்பதற்கு என்ன அவசியம் இருக்கிறது - என்றெல்லாம் நாம் சிந்திப்பதில்லை. எனினும் அது நமக்கு அழகாகத் தெரிகிறது - ஒரு நடிகையைப் போல.

நமக்குப் பயன்படாத கண்ணாடி மாளிகைகளைப் பற்றி மட்டுமல்ல; நமக்குப் பயன்படுகிற மனிதர்களைப் பற்றியும் நாம் சிந்திப்பதில்லை.

நடந்து செல்லும் போது செருப்பு அறுந்து போனால், அந்த இடத்திலேயே தைப்பதற்கு நமக்கு ஒருவர் வேண்டும். சைக்கிள் பஞ்சரானால் ஒட்டித் தருவதற்கு ஒருவர் வேண்டும். தாகமெடுத்தால் இளநீர், கரும்பு ஜூஸ் கடை வேண்டும். கோயில் வாசலில் பூக்கடை வேண்டும். மருத்துவமனையின் வாயிலில் பழ வண்டிக்காரர் வேண்டும்.

இவர்கள் எல்லோரும் நமக்குத் தேவைப்படும் இடங்களில், சேவை செய்யத் தயாராக இருக்கிறார்கள். இவர்கள் யார், எங்கிருந்து வருகிறார்கள் என்று நாம் சிந்திப்பதில்லை.

இவர்கள், விவசாயம் பொய்த்துப் போனதால் பிழைப்பைத் தேடி நகரங்களுக்கு வந்தவர்கள்; ஆலை மூடலால் வாழ்விழந்து தெருவுக்கு வந்த தொழிலாளர்கள்; வேலை தேடி சலித்துப் போய் வேறு வழியின்றி இந்தத் தொழிலை நம்பிப் பிழைத்து வரும் வேலையில்லா இளைஞர்கள்; பிச்சையெடுக்கவோ, சமூக விரோதத் தொழில்களிலோ ஈடுபடாமல் தன்மானத்துடன் வாழ விரும்பும் இவர்கள் - தரைக்கடை வியாபாரிகள். கடந்த 40 ஆண்டுகளாக திருச்சி என்.எஸ்.பி. ரோடு, தெப்பக் குளம், பெரிய கடை வீதி, தேரடி பஜார், நந்தி கோயில் தெரு முதலான பகுதிகளில் தரைக் கடை வியாபாரம் செய்து வருபவர்கள்.

தமக்கு வேலை வாய்ப்பும் வாழ்வும் கிடைக்க இவர்கள் கேடுகெட்ட ஆட்சியாளர்களை நம்பிக் கொண்டிராமல், தாங்களே வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொண்டவர்கள். ஆண்டுக்கு பல கோடி ரூபாய் அளவுக்கு தரைக் கடை மூலம் வியாபாரம் செய்யும் இவர்கள், பொருளாதார வளர்ச்சிக்குத் துணையாக நிற்கிறார்கள். அதிகாலையிலேயே இட்லிக் கடை, இளநீர் கடை, பூ வியாபாரம் பின்னர் காய்கறி, பிளாஸ்டிக் பொருட்கள் என

**கிரிமினல் குற்றவாளிகளுக்கு சலாம் போடும் திருச்சி நகர போலீசு, தரைக்கடை வியாபாரிகளை மிரட்டி விரட்டுகிறது.**




படிப்பகம்

www.padippakam.com

உழைக்கும் மக்களது அன்றாட வாழ்வின் பிரிக்க முடியாத அங்கமாக உள்ள இவர்கள், சமுதாயத்தின் மிக அத்தியாவசியமான பணியைச் செய்கிறார்கள்.

ஆயிரமோ இரண்டாயிரமோ கைமாற்றாக வாங்கிக் கொண்டு, அல்லது நூறு ரூபாய்க்கு தினமும் 10 ரூபாய் என கந்து வட்டிக்குக் கடன் வாங்கிக் கொண்டு, அல்லது மனைவியின் காதிலும் கழுத்திலுமுள்ள சிறு நகைகளை அடகு வைத்து தினமும் குறைந்து 12 மணி நேரத்திற்கும் மேலாகப் பாடுபடும் இவர்களைத்தான் குற்றவாளிகள் என்கிறது போலீசும் மாநகராட்சியும். நடைபாதைகளிலும் நகராட்சிக் கால்வாய்களின் மீதும் இரண்டடி - மூன்றடிக்குக் கடை விரித்து வியாபாரம் செய்வதை ஆக்கிரமிப்பாகவும், போக்குவரத்துக்கு இடையூறாகவும் சித்தரிக்கிறது போலீசும் அதிகார வர்க்கமும். ஆனால் சாரதாஸ், ஆனந்தா, மங்கள் அண்டு மங்கள், ஜென்னி பிளாசா முதலான ஜவுளிக் கடைகளின் பெரு முதலாளிகள், சாலையை ஆக்கிரமித்து கண்ணாடி பெட்டகத்தினுள் பொம்மையை வைத்து பளபளப்பான விளம்பரம் செய்யவும், சாலையை ஆக்கிரமித்து நிழல் மாடத்தை நீட்டித்துக் கொள்ளவும் எவ்விதத் தடையுமில்லை. இக்கடைகளுக்கு வரும் வாடிக்கையாளர்கள் 15 அடி அகலமுள்ள சாலையில் ஏழு அடிகளை அக்கிரமித்துக் கொண்டு தமது வாகனங்களை நிறுத்திக் கொள்ளவும் தடையில்லை. இதுதான் திருச்சி மாநகராட்சியின் அறிவிக்கப்படாத நீதி!



நகரை 'அழகு'படுத்துவதற்காகத் தரைக்கடை வியாபாரிகளின் வியாபாரப் பொருட்களைப் பிடுங்கிச் செல்லும் திருச்சி மாநகராட்சி ஊழியர்கள்.

இந்த நீதியை நிலைநாட்ட காக்கிச் சட்டை காவலர்கள், தரைக்கடை வியாபாரிகளைத் தாக்குவதும் விற்பனைப் பொருட்களைப் பறிமுதல் செய்வதும், பொய் வழக்குப் போடுவதும் அல்லது மாமூல் கறப்பதும் வாடிக்கையாகிவிட்டது. கடந்த ஜனவரியில் என்.எஸ்.பி. ரோட்டில் கடை போட்ட வியாபாரிகளைக் கைது செய்த போலீசார், மாநகராட்சி. அதிகாரிகளைப் பணி செய்ய விடாமல் கத்தியைக் காட்டி மிரட்டியதாகப் பொய் வழக்குப் போட்டு சிறையில் அடைத்தனர். கடை போட்ட 'குற்றத்திற்காக' மட்டும் வழக்கு போட்டால் விரைவாக பிணை (ஜாமீன்) கிடைத்துவிடும் என்பதால், தரைக்கடை வியாபாரிகளை மிரட்டிப் பணிய வைத்துப் பாடம் புகட்டவே பிணையில் வெளிவர முடியாத பொய் வழக்கு போடப்பட்டது.

மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் வழிகாட்டுதலில் ''அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்க''த்தை நிறுவியுள்ள வியாபாரிகள் இப்பொய் வழக்கு — தாக்குதல்களை எதிர்த்து கடந்த ஜனவரி 30-ஆம் நாளன்று தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்தை நடத்தி, உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வருகின்றனர். தமது பிரச்சினைகளை விளக்கி பல வடிவங்களிலும் மக்களிடம் பிரச்சாரம் செய்து ஆதரவு திரட்டி வருகின்றனர். 'உழவர் சந்தை' திறக்க வந்த முதல்வரின் வாகனத்தை மறித்து, மனு கொடுக்க முயன்று கைதாகி, பின்னர் விடுவிக்கப்பட்டனர். பல கட்டங்களாக நடந்த இந்தப் போராட்டங்களுக்குப் பின்னர், பேச்சு வார்த்தைக்கு அழைத்து மாற்று இடம் தருகிறோம் என்று சுடுகாட்டுப் பாதையில் கடை போடச் சொல்கிறார் மாநகராட்சி ஆணையர். மக்கள் கூடும் நகரின் மையமான பகுதிகளிலிருந்து, தரைக்கடை வியாபாரிகளை வெளியேற்றிவிட்டு, விரல் விட்டு எண்ணக் கூடிய சில பெரும் வர்த்தகர்களுக்குச் சேவை செய்வதே மாநகராட்சியின் கொள்கையாக உள்ளது.

1989-ஆம் ஆண்டின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, எந்தவொரு குடிமகனும் தனது வாழ்வுக்காக தரைக்கடை வியாபாரம் செய்வது அடிப்படை உரிமையாகும். மாநில அரசுகளும் நகராட்சிகளும் தரைக்கடை வியாபாரத்தை முறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதி மன்றம் வழிகாட்டியுள்ளது. ஆனால் திருச்சி மாநகராட்சியோ நீதிமன்ற உத்தரவுக்கே எதிரான வகையில் செய்ல்படுகிறது. மாவட்ட நீதிமன்றமோ தரைக்கடை போட்டு அரை ஞாண் கயிறும் அந்துருண்டையும் விற்ற 'குற்றத்திற்காக' ரூ. 100 முதல் ரூ. 500 வரை அபராதம் விதிக்கிறது.

நகரை அழகுபடுத்துவது என்ற பெயரில், இந்நகரை உருவாக்கிய பெரும்பான்மை உழைக்கும் மக்களை வெளியேற்றுவதும் ஒரு சில மேட்டுக் குடியினர் மட்டுமே அனுபவிப்பதற்கானதாக நகரங்களை மாற்றுவதும்தான் முதலாளித்துவ ஆட்சியின் குரூரமான ஜனநாயகமாகும். உலகின் சொர்க்கபுரியாக முதலாளித்துவவாதிகளால் சித்தரிக்கப்படும் நியூயார்க், டோக்கியோ, பாரிஸ், லண்டன் முதலான நகரங்கள் மட்டுமல்ல; டெல்லி, மும்பை, சென்னை முதலான நகரங்களும் உழைக்கும் மக்களை வெளியேற்றிவிட்டு மேட்டுக் குடியினருக்கானதாக மாற்றப்பட்டு வருகிறது.

சாரதாஸின் ஆக்கிரமிப்பை அகற்றாமல் மாநகராட்சியும், போலீசும் மௌனம் சாதிப்பது ஏன்?




அதிலும் தனியார்மய - தாராளமயக் கொள்கையின் மூலம் நாட்டை மீண்டும் காலனியாக்கிவரும் துரோக ஆட்சியாளர்கள், நகரங்களை அழகுபடுத்துவது என்ற பெயரில் உழைக்கும் மக்களை புறநகருக்குத் துரத்தியடிப்பதில் தீவிரம் காட்டுகிறார்கள். கடந்த நவம்பரில், தலைநகர் டெல்லியிலுள்ள சிறு தொழில் - குடிசைத் தொழில் நிறுவனங்களை வெளியேற்று


படிப்பகம்

www.padippakam.com

# ''மேற்கு வங்கத்தைப் பார்!''
# நடைபாதை வியாபாரிகளின் வாழ்வைப் பறித்தது யார்?

மேற்கு வங்கத்தை 24 ஆண்டுகளாக ஆளும் 'இடது முன்னணி' அரசு தன்னை மக்கள் நல - ஏழைகள் நல அரசு என்று மார்தட்டிக் கொள்கிறது. ஆனால் நடைபாதை வியாபாரிகளான ஏழைகளுக்கு இது மிகக் கொடூரமான அடக்குமுறை அரசு என்பதை ஏற்கனவே நிரூபித்துக் காட்டிவிட்டது.

1996-ஆம் ஆண்டு நவம்பர் 23-24 தேதிகளில் 'இடது முன்னணி' அரசின் உத்தரவுப்படி, கல்கத்தா நகரில் பல்லாயிரக் கணக்கான நடைபாதை வியாபாரிகள் கட்டாயமாக போலீசாரால் வெளியேற்றப் பட்டனர். கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புடைய அவர்களது வியாபாரச் சரக்குகள் கைப்பற்றப்பட்டு முடக்கப்பட்டன. 'சூரிய ஒளி நடவடிக்கை' என்ற பெயரில் நடந்த இந்த அட்டூழியம், ஏழைகளான நடைபாதை வியாபாரிகளின் வாழ்வையே பறித்தது. அன்று 'இடது முன்னணி' அரசின் போக்குவரத்து அமைச்சராக இருந்த (இன்று சி.பி.எம். கட்சியிலிருந்து வெளியேறி ஜன நாயக சோசலிசக் கட்சியின் தலைவராகி விட்ட) சுபாஷ் சக்ரவர்த்தி, இந்த அட்டூழியத்துக்குத் தலைமையேற்று கல்கத்தா நகரின் காளிகாட், பவானிபூர் பகுதிகளில் போலீசாரை வழிநடத்தினார். அவர் முன்னிலையில் காளிகாட் பகுதியில் மட்டும் 1640 நடைபாதைக் கடைகள் இடித்துத் தள்ளப் பட்டு தீயிடப்பட்டன. சி.பி.எம். குண்டர்கள், கல்கத்தா மாநகராட்சி ஊழியர்களைப் போல அடையாள வில்லைகளை அணிந்து கொண்டு, போலீசாருடன் சேர்ந்து கொண்டு நடைபாதை வியாபாரிகளைத் தாக்கி அவர்களது உடைமைகளைச் சூறையாடினர். நூற்றுக்கும் மேற்பட்ட நடைபாதை வியாபாரிகளைக் கைது செய்து சிறையிலடைத்த 'இடது முன்னணி' அரசு, ''சூரிய ஒளி நடவடிக்கை மாபெரும் வெற்றி!'' என்று வெட்கமின்றி பீற்றிக் கொண்டது.

நாட்டில் எந்தவொரு நகராட்சியும் செய்திராத இக்கொடுஞ்செயலை எதிர்த்து, நவம்பர் 27-ஆம் தேதியன்று கல்கத்தா மாநகரில் நடைபாதை வியாபாரிகள் சாலை மறியலும் 12 மணி நேர கடையடைப்புப் போராட்டத்தையும் நடத்தினர். அமைப்பு சாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகளின் உரிமைக்குப் பாடுபடும் சங்கம் என்று கூறிக் கொள்ளும் சி.ஐ.டி.யு. சங்கம், இப்போராட்டத்தை வெளிப்படையாகவே எதிர்த்தது. அதன் துரோகத்தைப் புரிந்து கொண்ட நடைபாதை வியாபாரிகள், இச்சங்கத்தைப் புறக்கணித்துவிட்டு ''நடைபாதை வியாபாரிகளின் போராட்ட சங்கம்'' என்ற அமைப்பை நிறுவி தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடி வருகின்றனர்.

கல்கத்தாவில் நடைபாதை வியாபாரிகளைக் கட்டாயமாக வெளியேற்றி அட்டூழியம் புரிந்த 'இடது முன்னணி' அரசு, இதுவும் போதாதென்று 1997-ஆம் ஆண்டில் கல்கத்தா மாநகராட்சி சட்டத்தில் ஒரு புதிய விதியைச் சேர்த்து சட்டமாக்கியது. இச்சட்டப்படி, தெருக்களிலும் நடைபாதைகளிலும் 'ஆக்கிரமித்துக் கொண்டு' வியாபாரம் செய்வது கடுமையான குற்றமாகும்; இத்தகையோரை போலீசார் விசாரணையின்றி கைது செய்யலாம்; குற்றம் சாட்டப்பட்ட நடைபாதை வியாபாரி மீது பிணையில் வெளிவர முடியாதபடி வழக்கு தொடரப்படும்; மூன்று மாத சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பாலியல் வன்முறையில் ஈடுபட்ட ஒரு காம வெறியன் கூட பிணையில் விடுதலையாக சட்டத்தில் வாய்ப்புள்ளது. ஆனால் பிழைப்புக்காக ஒருவர் நடைபாதையில் வியாபாரம் செய்வது பாலியல் வன்முறையைவிட மிகக் கொடிய குற்றம் என்கிறது, 'இடது முன்னணி' அரசு. இருப்பினும், கல்கத்தா நகர நடைபாதை வியாபாரிகளின் ஒன்றுபட்ட தொடர்ச்சியான போராட்டத்தால், 'இடது முன்னணி' அரசினால் இச்சட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை.

மே. வங்கத்தில் ஏழைகளான நடைபாதை வியாபாரிகளின் வாழ்வைப் பறித்து அடக்குமுறையை ஏவிய இப்போலி கம்யூனிஸ்டுகள், இங்கே, தமிழகத்தில் ''நடைபாதை வியாபாரிகளின் உரிமைகளைக் காக்கப் போராடுவோம்'' என்று சங்கம் கட்டி சந்தா வசூலித்து மோசடி செய்து வருகின்றனர். இத்துரோகிகளைப் புறக்கணித்து, புரட்சிகர அமைப்புகளில் அணிதிரண்டு நடைபாதை வியாபாரிகள் தமது உரிமைக்காகப் போராடுவதே இன்று அவசியமாக உள்ளது.

மாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு, உழைக்கும் மக்களைப் புறநகருக்கு ஓடுமாறு விரட்டியடித்தது. டெல்லியின் 'அழகு'க்காக இப்படி அடக்குமுறை கட்டவிழ்த்து விடப் பட்டது.

மறுகாலனியாதிக்கத் தாக்குதலால் தரைக்கடை வியாபாரிகளுக்கு மட்டுமல்ல; சிறுதொழில் - குடிசைத் தொழில் செய்வோருக்கும் உழைக்கும் மக்களுக்கும் பேராபத்து வந்துள்ளது. உழைக்கும் மக்கள் நகரங்களிலிருந்து விரட்டியடிக்கப்படுவார்களா அல்லது உழைக்கும் மக்களால் உருவான நகரம் உரியவர்களின் கைகளில் நிலைநாட்டப்படுமா என்பதை உரிமைக்கான போராட்டங்களும் அரசியல் புரட்சிகளுமே தீர்மானிக்கும்.

**அதிகாரக் கும்பலை எதிர்த்து வாழ்வுரிமைக்காகப் போராடும் திருச்சி நகரத் தரைக்கடை வியாபாரிகள்.**




**தகவல்:**
**அனைத்து தரைக்கடை வியாபாரிகள் பாதுகாப்பு சங்கம், திருச்சி.**

## அறிவிப்பு

'தாராளமயத் தாசர்களும் நவீன எட்டப்பர்களும்' என்ற தொடர் கட்டுரை தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த இதழில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு.


படிப்பகம்

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

சோசலிசத்துக்கு ஏற்பட்ட பின்னடைவு, அதன் விளைவாக சர்வதேச சக்திகளின் அணிசேர்க்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், தேசிய நிலைமைகளில் அது ஏற்படுத்திய தாக்கம் ஆகியவை காரணமாக சி.பி.(எம்) கட்சி தனது திட்டத்தை மேம்படுத்த வேண்டியது அவசியமானது என்று அதன் பொதுச் செயலாளர் அரிகிஷன் சிங் சுர்ஜித் விளக்கமளிக்கிறார்.

சி.பி.(எம்) கட்சியின் மேம்படுத்தப்பட்ட திட்டம், ''நிகழ்கால உலகில் சோசலிசம்'' என்கிற தலைப்பில் ஒன்பது பத்திகளை உள்ளடக்கியிருக்கிறது. ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், 1917 அக்டோபர் புரட்சியின் வெற்றி, இரண்டாம் உலகப் போரில் பாசிசத்துக்கு எதிரான வெற்றி, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சீனா, வியத்நாம், கொரியா, கியூபா ஆகிய நாடுகளில் புரட்சி வெற்றி பெற்றது, சோசலிசக் கட்டுமானத்தின் சாதனை போன்றவற்றைப் பெருமையுடன் சுருக்கமாகத் தொகுத்தளிக்கிறது.

அதேசமயம், இந்த நாடுகளில் சோசலிசத்துக்கு ஏற்பட்ட பின்னடைவு குறித்த சி.பி.(எம்)-மின் நிலைப்பாடு நேர்மையற்றதாகவே உள்ளது. முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டதற்கான பின்னணி, காரணங்களை தொகுப்பதிலும், அனுபவங்களைக் கற்பதிலும் சி.பி.(எம்) கட்சி ஏற்கனவே மேற்கொண்டுள்ள திருத்தல்வாதப் பார்வைக்கும் நடைமுறைக்கும் பொருத்தமாகவே அணுகியிருக்கிறது.

முதலில், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் முதலாளித்துவம் மீட்கப்பட்டதையே சி.பி.(எம்) கட்சி தனது திட்டத்தில் எங்கேயும் குறிப்பிடவில்லை. அதற்கு மாறாக, அங்கு நடந்தவை வெறும் பின்னடைவுதான் என்பதாகச் சித்தரிக்கிறது. குருச்சேவ், கோர்பச்சேவ், கென்டி யானயேவ் போன்ற ருசிய கம்யூனிசத் திருத்தல்வாதிகளின் அடியொற்றி, ஏகாதிபத்திய வாதிகள் கம்யூனிசத்தின் மீது ஒவ்வொரு தாக்குதல் தொடுக்கும் போதும் எப்படிப் பின்வாங்கிக் கொண்டு, முதலாளித்துவக் கண்ணோட்டத்தை ஏற்று அரசு மற்றும் கட்சியின் நிலையை நீர்த்துப் போகச் செய்தார்களோ அதே நிலையை சி.பி.(எம்) எடுத்துள்ளது.

சோவியத் ஒன்றியம் மற்றும் பிற நாடுகளில் ஏற்பட்ட சோசலிசத்தின் சாதனைகளைத் தொகுத்து எழுதிய பிறகு, 1990-களில் அதற்கு ஏற்பட்ட பின்னடைவு மற்றும் காரணங்களாகப் பின்வருவனவற்றை சி.பி.(எம்) திட்டம் முன்வைக்கிறது.

''இருப்பினும், திட்டமிட்டு வரையறுக்காத பாதையில் சோசலிசத்தை நிர்மாணிக்கும் வளர்ச்சிப் போக்கில் சோவியத் ஒன்றியமும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பிற சோசலிச நாடுகளும் பாரிய தவறுகளைச் செய்தன. சோசலிச நிர்மாணத்தின் நீடித்த தன்மையைத் தவறாகப் புரிந்து கொண்டது; கட்சி மற்றும் அரசின் பாத்திரம் குறித்த தவறான கண்ணோட்டம்; பொருளாதாரம் மற்றும் அதன் நிர்வாகம் ஆகியவற்றில் உரிய நேரத்தில் மாற்றங்களைக் கொண்டுவரத் தவறியது; கட்சி, அரசு மற்றும் சமுதாயத்தில் சோசலிச ஜனநாயகத்தை ஆழப்படுத்தத் தவறியது; அதிகார வர்க்கத்தனத்தின் வளர்ச்சி; சித்தாந்த உணர்வு குறைந்து போனது ஆகியவற்றில் இருந்து உருவானவைதாம் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பாவிலுள்ள பிற சோசலிச நாடுகள் இழைத்த பாரிய தவறுகள். சோலிசத்தை சீர்குலைக்கும் ஏகாதிபத்தியத்தின் தொடர்ந்த முயற்சிகளுக்கு இவை வாய்ப்பாய் அமைந்தன. இந்தச் சீர்குலைவுகள் மார்க்சிய - லெனினியத்தின் பொருத்தப்பாட்டை மறுதலிக்கவில்லை; மாறாக, அவை புரட்சிகரக் கோட்பாடு மற்றும் நடைமுறையிலிருந்து விலகல்களைக் குறிக்கிறது. சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளின் கலைப்பும் கிழக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட பின்னடைவுகளும் ஒரு புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளன. 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோசலிச சக்திகள், மேலும் தைரியமடைந்த ஏகாதிபத்தியத்தின் சவாலை மீண்டுமொருமுறை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. பின்னடைவுகள் இருந்தபோதும் தவறுகளில் இருந்து கம்யூனிச இயக்கமும் புரட்சிகர சக்திகளும் பாடம் கற்றுக் கொண்டு, மறுபடியும் ஒருங்கிணைந்து ஏகாதிபத்தியம் மற்றும் பிற்போக்கு சக்திகளின் தாக்குதல்களை எதிர்த்துத் தாக்கும் என்று சி.பி.(எம்) நம்புகிறது.''

இவ்வாறு கட்சித் திட்டம் என்பதைச் சாக்கு வைத்து மிகவும் மேலெழுந்தவாரியாகவும், மிகவும் சுருக்கமாகவும், பொதுவாகவும் தொகுத்து முடித்திருக்கிறது, சி.பி.(எம்). சோவியத் ஒன்றியம் மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகளின் தவறுகளை மட்டுமல்லாது, சர்வதேச நிலைமைகள், முதலாளித்துவத்தின் வளர்ச்சி ஆகியவை பற்றியும் தவறான புரிதல் இருந்ததாக சி.பி.(எம்) கூறுகிறது. 1957 மற்றும் 1960-இல் சர்வதேச கம்யூனிச இயக்கம் நிறைவேற்றிய ஆவணத்திலேயே இந்தத் தவறான கண்ணோட்டம் இருந்ததாக சி.பி.(எம்) கூறுகிறது.

''சமுதாய வளர்ச்சியில் உலக சோசலிசக் கட்டமைப்பு தீர்மானமான சக்தியாக மாறிக் கொண்டிருக்கிறது என்பது நமது காலத்தின் முதன்மையான குணாம்சமாக இருக்கிறது.'' அதவாது, ''உலக முதலாளித்துவம் உருக்குலைந்தும் சிதைந்தும் போகும் தீவிரமான நிகழ்ச்சிப் போக்கில் இருக்கிறது'' என்று 60-ஆம் ஆண்டு ஆணவம் குறிப்பிடுகிறது. ''முதலாளித்துவப் பொருளாதார கட்டமைப்பு முழுவதிலும் நிலையற்ற தன்மை அதிகரித்து வருவது'' பற்றியும் பேசும் அந்த ஆவணம், ''சோவியத் ஒன்றியம் மட்டுமல்லாது, வேறு பிற சோசலிச நாடுகளிலும் முதலாளித்துவத்தை மீண்டும் நிலைநாட்டுவது சாத்தியமே இல்லை'' என்பதாக முடிகிறது!

சோவியத் சமூக ஏகாதிபத்திய பிரஷ்நேவ் - கோசிஜின் கும்பலுடன் அதன் நம்பகமான விசுவாசிகளான சி.பி.ஐ. தலைமை.



1960-ஆம் ஆண்டு ஆவணத்திலிருந்து மேற்கண்டவாறு மேற்கோள் காட்டும் சி.பி.(எம்) தலைவர் சுர்ஜித், இத்தவறான கண்ணோட்டத்தைத் தமது மேம்படுத்தப்பட்ட கட்சித் திட்டம் திருத்துவதாகப் பீற்றிக் கொள்கிறார்.

''இந்த ஆவனம் வரலாற்று ரீதியில் முதலாளித்துவத்தின் தவிர்க்க முடியாத நிலைகுலைவு மற்றும் அதன் நிச்சயமான வீழ்ச்சி குறித்துத் தவறான புரிதலைக் கொடுத்தது. முதலாளித்துவ நாடுகளில் ஏற்படும் மாறுதல்களையும்,



படிப்பகம்

www.padippakam.com

சோசலிச நாடுகளின் சவால்களை எதிர் கொள்வதற்கு அவர்கள் திட்டமிடும் வழிவகையையும் பற்றி ஒரு பருண்மையான ஆய்வு செய்வதை இந்தப் பாரிய தவறு தடுத்துவிட்டது. நமது தற்போதைய (கட்சித்) திட்டம் அந்தத் தவறான புரிதலை கலைந்து விடுகிறது. கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட பல பிழைகள் இந்த தவறான புரிதலால் எழுந்தவை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு முதலாளித்துவம் முன்னேறும் என்பதை குறை மதிப்பீடு செய்ததால்தான், நம்முடையது உட்பட உலகக் கம்யூனிச இயக்கம் தடமிறங்கி விட்டது'' என்று சுர்ஜித் விளக்கமளிக்கிறார்.

**சர்வதேசக் கம்யூனிச இயக்கம் செய்த பிழையான மதிப்பீடுகள் மற்றும் புரிதல்கள் மட்டுமல்ல; நடைமுறை பற்றியும், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகள் செய்த பாரிய தவறுகள் பற்றியும் ஒரு பொய்யான, திரிக்கப்பட்ட தொகுப்பையே சி.பி.[எம்] முன்வைக்கிறது.**

சர்வதேசக் கம்யூனிச இயக்கம் செய்த பிழையான மதிப்பீடுகள் மற்றும் புரிதல்கள் மட்டுமல்ல; நடைமுறை பற்றியும், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற முன்னாள் சோசலிச நாடுகள் செய்த பாரிய தவறுகள் பற்றியும் ஒரு பொய்யான, திரிக்கப்பட்ட தொகுப்பையே சி.பி.(எம்) முன்வைக்கிறது.

உலகக் கம்யூனிஸ்டு கட்சிகள் இரண்டாகப் பிரிந்து, சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் வலது திரிபுவாத நிலையெடுத்ததாகவும், சீனக் கம்யூனிசக் கட்சியின் தலைமையில் இடது குறுங்குழுவாத நிலையெடுத்ததாகவும், இரண்டு பிரிவுகளுக்கு மாறாகத் தாம் நடுநிலையான, சரியான நிலையெடுத்து, உலகக் கம்யூனிசஇயக்கம் ஐக்கியப்பட்டு ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதாகவும் சி.பி.(எம்) கட்சி சித்தரித்து வருகிறது. தம்மைப் போலவே, வியத்நாம், கியூபா, கொரிய கம்யூனிசக் கட்சிகள் எப்போதும் சரியான நிலையெடுத்து வந்ததாகவும் சி.பி.(எம்) கூறி வருகிறது. நமது நாட்டில் நக்சல்பாரி இயக்கம் பிளவு - பின்னடைவுக்குள்ளானதும், சீனத்தில் மாவோ சிந்தனையாளர்கள் வீழ்த்தப்பட்டு தெங் சியாவோபிங் தலைமை நிறுவப்பட்டதும் இடது குறுங்குழுவாதத்துக்கு எதிரான சி.பி.(எம்) கட்சியின் நிலை சரி என நிரூபிக்கப்பட்டதற்குச் சான்றாக கூறப்படுகிறது. பின்னடைவுக்குள்ளானதும், சோவியத் ஒன்றியம் மற்றும் பிற சோசலிச நாடுகளின் வீழ்ச்சியும் திரிபுவாதத்திற்கு எதிரான சி.பி.(எம்) கட்சியின் நிலை சரி என நிரூபிக்கப்பட்டதற்குச் சான்றாகக் கூறப்படுகிறது. இந்தச் சித்தரிப்பெல்லாம் உண்மையில், நடந்தவை அனைத்தையும் பற்றித் திரித்துச் சொல்லப்படும் கருத்துக்களாகும்.

சோவியத் ஒன்றியத்தின் மாபெரும் தலைவர் ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு, கம்யூனிஸ்டுத் தலைவர்கள் பலரையும் படுகொலை செய்துவிட்டு, அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் குருச்சேவ் கும்பல் தனது அதிகாரத்தை நிறுவியது. அந்நாட்டுப் பொதுவுடைமைக் கட்சியின் 20-ஆவது பேராயத்தில் ஸ்டாலின் மீது அவதூறுகள் பொழிந்து, மார்க்சிய - லெனினியத்தை நிராகரித்துவிட்டு, தனது நவீனத் திரிபுவாத சித்தாந்தத்தைப் பிரகடனப்படுத்தியது.

''சோவியத் ஒன்றியத்தில் முழுமையாகவும் இறுதியாகவும் சோசலிசம் வென்றுவிட்டது, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு அவசியமான நிலைமைகள் முடிவுக்கு வந்துவிட்டன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் உள்நாட்டுக் கடமைகள், தேவைகள் நிறைவேறிவிட்டன'' என்று அறிவித்தது, குருச்சேவ் கும்பல். ''சோவியத் ஒன்றியம் சோசலிசத்தைக் கடந்து கம்யூனிசத்தின் முதல் கட்டத்துக்குள் நுழைந்து விட்டது'' என்றும் அறிவித்தது.

''இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு பல நாடுகளில் புரட்சி வெற்றி பெற்று சோசலிச அமைப்புகள் உருவாகிவிட்டன, பல நாடுகள் சுதந்திரம் பெற்று காலனிய முறை முடிவுக்கு வந்துவிட்டது, இதனால் ஏகாதிபத்தியமும் வலுவிழந்துவிட்டது. சோசலிச முகாமுக்கும் ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகி, அதிலும் சோசலிசமே தீர்மானகரமான சக்தியாக மாறிவிட்டது. ஏகாதிபத்தியத்தின் சவால்களை எதிர்கொண்டு முறியடிக்கும் அளவுக்கு சோசலிச நாடுகளும் அணு ஆயுதங்களோடு வலுப் பெற்றுவிட்டன. எனவே, இன்னொரு உலகப் போருக்கு ஏகாதிபத்தியங்கள் துணிய மாட்டா; அப்படியே மீண்டுமொரு உலகப் போர் மூண்டால், அது அணு ஆயுதப் போராகவும், உலக மக்களினத்திற்கே பேரழிவு விளைவிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பதால், எப்படியாவது அதைத் தவிர்ப்பதற்காகப் பாடுபடுவதுதான் உலகக் கம்யூனிச இயக்கத்தின் ஒரே கடமை. புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளின் தேசிய முதலாளிகளுக்கு பொருளாதார, இராணுவ, அரசியல் ஆதரவு தருவதன் மூலம் அந்நாடுகளை முதலாளித்துவமற்ற பாதையில் வழி நடத்திச் சமாதான பூர்வமாகவே சோசலிசத்தை நோக்கி முன்னேற முடியும்'' என்றும் குருச்சேவ் கும்பல் அறிவித்தது.

சி.பி.(எம்) கட்சி சித்தரிப்பது போல மேற்கண்ட கருத்துக்கள் சர்வதேச நிலைமைகள் குறித்த தவறான மதிப்பீடுகள் மற்றும் சோசலிசக் கட்டுமானம் குறித்த தவறான புரிதல்கள் மட்டும் அல்ல; சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் வீழ்த்தப்பட்டு, அதிகார வர்க்க முதலாளித்துவம் நிறுவப்பட்டதற்கான பிரகடனம் அதைத் தொடர்ந்து அதிகார வர்க்க முதலாளித்துவ ஏகாதிபத்தியமாக சோவியத் ஒன்றியம் மாறிவிட்டது;

1957-இலும் 1960-இலும் கூடிய உலகக் கம்யூனிசக் கட்சிகள் குருச்சேவ் கும்பலின் கருத்துக்கள் மீது விவாதங்கள் நடத்தின. சீன மற்றும் அல்பேனியப் பொதுவுடைமைக் கட்சிகள் உட்பட சில கட்சிகள் குருச்சேவ் கும்பலின் கருத்துக்களை எதிர்த்தன. இந்தியா, கிழக்கு ஐரோப்பா உட்பட பெரும்பான்மையான நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகள் குருச்சேவ் கும்பலின் நிலையை ஆதரித்தன. இருந்தபோதும் உலகக் கம்யூனிச இயக்கத்தின் ஒற்றுமையைக் காப்பதன் அவசியம் கருதி, அந்த இரு சந்திப்புகளில் இரு தரப்பும் ஏற்கும் வகையில் பொதுவான - சமரசத்தன்மையுடைய தீர்மானங்கள்தாம் நிறைவேற்றப்பட்டன.

இதற்கிடையே குருச்சேவ் கும்பல் ஒருதலைப்பட்சமாகத் தனது நிலையை அமல்படுத்தத் தொடங்கிவிட்டது. ஸ்டாலின் மீதான குருச்சேவ் கும்பலின் அவதூறுகளை கையிலெடுத்துக் கொண்டு, அமெரிக்க ஏகாதிபத்தியம் உட்பட கம்யூனிச எதிரிகள் சித்தாந்த பூர்வமான தாக்குதல் தொடுப்பதற்குத் துணை போனது. அமெரிக்கக் கைக்கூலியாகிவிட்ட யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோவுடன் 1957 தீர்மானத்துக்கு மாறாக கட்சி மற்றும் அரசு உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது. சீன அணு ஆயுத சோதனை மற்றும் சோசலிசக் கட்டுமானப் பணிகளுக்கென அனுப்பப்பட்ட சோவியத் நிபுணர்களையும் எல்லா உதவிகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டது. இரு நாட்டு ஒப்பந்தங்களையும் ஒருதலைப் பட்சமாக குருச்சேவ் கும்பல் ரத்து செய்துவிட்டது. அப்போது வியத்நாம் நடத்தி வந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் போரில் அமெரிக்காவுடன் சமரசம் செய்து கொண்டு துரோகமிழைக்கும் நடவடிக்கையில் இறங்கியது.

நேரு போன்ற போலி முற்போக்குத் தலைவர்களைக் கொண்ட அரசுகளுடன் நெருக்கமான உறவு ஏற்படுத்திக் கொண்டு, அந்நாட்டு பொதுவுடைமைக் கட்சிகளை அவர்களின் கைக்கூலிகளாக செயல்படும்படி தூண்டிவிட்டது. 1960-இல் யூகோஸ்லாவியா சென்ற குருச்சேவ், தமது சித்தாந்த நிலையை எதிர்ப்பதால், சீனப் பொதுவு


படிப்பகம்

www.padippakam.com

டைமைக் கட்சிக்கு எதிராகப் பகிரங்கமான கண்டனத்தைத் தெரிவித்தார்.

சீன - அல்பேனியப் பொதுவுடைமைக் கட்சிகள் ஒருபுறமும், சோவியத் ஒன்றியம் - இத்தாலி முதலிய திருத்தல்வாத பொதுவுடைமைக் கட்சிகள் மறுபுறமும் நிற்க கடுமையான சித்தாந்தப் போராட்டம் நடந்தது. உலகக் கம்யூனிச இயக்கத்தில் மாபெரும் விவாதங்கள் நடந்தன. இதை தொடர்ந்து உலகக் கம்யூனிச இயக்கத்தில் பிளவு ஏற்பட்டது. இந்திய - சீனப் போரில், இந்தியாவின் நேரு அரசை ஆதரித்த குருச்சேவ் கும்பல் அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போலவே, சீனாவை ஆக்கிரமிப்பு நாடாகச் சித்தரித்தது.



சமூக ஏகாதிபத்திய - போர் வெறியர் பிரஷ்நேவுடன் ''அவசர நிலை'' பாசிச இந்திரா.

உலகக் கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு நமது நாட்டுக் கட்சியிலும் பிரதிபலித்தது. ஏற்கனவே இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தை காந்தி - நேரு காங்கிரசின் வாலாக மாற்றிவிட்ட டாங்கே - அஜாய் கோஷ் தலைமையிலான ஒரு பிரிவு குருச்சேவ் கும்பலை உறுதியாக ஆதரித்தது. அது, காங்கிரசின் தலைமையில் இந்தியாவை முதலாளித்துவமற்ற பாதையின் மூலம் சோசலிசத்தை அடைவதற்கான வழியைப் பின்பற்றி வந்தது.

''இந்திய - சீனப் போரை நிறுத்தி, சமாதானப் பூர்வமாக எல்லைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்'' என கோரிய இன்னொரு பிரிவை, 'தேச துரோகிகள்' என்று முத்திரை குத்திச் சிறையிலடைப்பதற்கு டாங்கே கும்பல் நேரு அரசின் மூலம் வழி செய்தது. அவ்வாறு சிறையிலடைக்கப்பட்ட பிரிவினர் ''சீன ஆதரவு இடதுசாரிகள்'' எனத் தவறுதலாக முத்திரை குத்தப்பட்டனர்; இவர்கள் இந்திய - சீனப் போரில் சீனத்தின் நிலையை ஆதரித்தவர்களும் அல்ல; அதேபோல உலகக் கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட பிளவில் சீன - அல்பேனிய நிலையை ஆதரித்தவர்களும் அல்ல. இந்திய - சீனப் போரில் அமைதி வழித் தீர்வு, சீன - சோவியத் கம்யூனிசக் கட்சிகளும் - அரசுகளும் பிளவுபடாது, ஐக்கியப்பட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலை எடுக்க வேண்டும் என்பதை மட்டுமே வலியுறுத்தியவர்கள். இவர்கள் தமக்கும் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களுக்கும் ஏற்பட்ட முரண்பாடு காரணமாகத்தான் பிளவுபட்டு, சி.பி.(எம்) என்ற தனிக் கட்சியை நிறுவிக் கொண்டார்கள். மற்றபடி சோவியத் ஒன்றியத்தின் திருத்தல்வாத குருச்சேவ் கும்பலுடன் அடிப்படையில் மாறுபட்ட நிலையை சி.பி.(எம்) எடுக்கவில்லை. 1964 கட்சித் திட்டத்திலோ, அரசியல் - அமைப்பு அறிக்கையிலோ அப்படிச் செய்ததற்கான தடயம் கிடையாது.

1967 நக்சல்பாரி உழவர் பேரெழுச்சிக்கு முன்னும் பின்னும் கம்யூனிசப் புரட்சியாளர்கள் சி.பி.(எம்) கட்சியானது, ஒன்றுபட்ட சி.பி.ஐ.யின் திருத்தல்வாத நிலையைத் தொடர்வதாகச் சித்தாந்தப் பிரச்சினைகளை எழுப்பினார்கள். அதன் பிறகுதான் குருச்சேவ் கும்பலின் நிலை பற்றி தமது கருத்தை சி.பி.(எம்) கட்சி விளக்க வேண்டி நேர்ந்தது. பின்னர்தான் சோவியத் ஒன்றிய குருச்சேவ் மற்றும் இந்திய டாங்கே கும்பல்களின் நவீனத் திருத்தல்வாதத்தை ஆரம்பம் முதல் எதிர்த்து வந்ததாகக் காட்டிக் கொண்டது.

சி.பி.(எம்) கட்சியின் 1964 திட்டம் அடிப்படையில் குருச்சேவ் கும்பலின் நிலைக்குப் பொருந்துவதாகவே இருந்தது. சர்வதேச நிலை பற்றிய அனைத்துக் கம்யூனிசக் கட்சிகளின் எந்த ஆவணம், தவறான மதிப்பீட்டை முன்வைத்து உலகக் கம்யூனிச இயக்கத்தின் சரிவுக்குக் காரணமாக அமைந்தது என்று இப்போது சி.பி.(எம்) கூறுகிறதோ, அதைப்பற்றி பின்வருமாறு அக்கட்சியின் 1964 திட்டம் கூறுகிறது.

''1960 நவம்பரில் 81 மார்க்சிய - லெனினியக் கட்சிகளின் பிரதிநிதிகள் மாஸ்கோவில் கூடி வெளியிட்ட அறிக்கை மற்றும் அதற்கு முந்தைய 1957 பிரகடனம் ஆகியவற்றை நமது கட்சி உறுதியாக உயர்த்திப் பிடிக்கிறது; அவை இன்றைய உலக நிலைமை பற்றிய புரட்சிகர ஆய்வை உட்கிடக்கையாகக் கொண்டிருக்கின்றன. இவ்விரண்டும் உலகம் முழுவதுமுள்ள கம்யூனிஸ்டுகள், பாட்டாளி வர்க்கம் மற்றும் புரட்சிகர சக்திகளுக்கு விலைமதிப்பற்ற வழிகாட்டுதல் தரும் மார்க்சிய - லெனினிய ஆவணங்கள். இவ்விரண்டு ஆவணங்களின் புரட்சிகரக் கோட்பாடுகளை சி.பி.(எம்) கட்சி உயர்த்திப் பிடித்து, மார்க்சிய - லெனினியத்தின் தூய்மையைப் பாதுகாத்து, எல்லா திருத்தல்வாத, வறட்டு வாத விலகல் ஆபத்துகளுக்கும் எதிராகத் தற்காத்துக் கொள்ளும்'' [சி.பி.(எம்) 1964 கட்சித் திட்டம், பக். 51].

எந்த வழிகாட்டு ஆவணத்தைக் கொண்டு திருத்தல்வாதம், வறட்டுவாதம் ஆகிய விலகல்களின் ஆபத்திலிருந்து காத்துக் கொள்வதாக சி.பி.(எம்) உறுதி கூறியதோ, அதே ஆவணத்தின் சர்வதேச நிலை பற்றிய ஆய்வை திருத்தல்வாத - வறட்டுவாதக் கலவையாக சி.பி.(எம்) புரிந்து கொண்டு விளக்கியது.

**சோவியத் ஒன்றியத்தின் திருத்தல்வாத குருச்சேவ் கும்பலுடன் அடிப்படையில் மாறுபட்ட நிலையை சி.பி.[எம்] எடுக்கவில்லை. 1964 கட்சித் திட்டத்திலோ, அரசியல் - அமைப்பு அறிக்கையிலோ அப்படிச் செய்ததற்கான தடயம் கிடையாது.**

சி.பி.(எம்) கட்சி 1969-இல் வெளியிட்ட சித்தாந்தத் தீர்மானங்கள் என்ற ஆவணத்தில் பின்வருமாறு எழுதியுள்ளது: ''ஒரு அரை நூற்றாண்டுக்கு முன்பு லெனின் ஏகாதிபத்தியம் பற்றிய வரையறை செய்தார். அதன் பிறகு மாபெரும் மாற்றங்கள் நடந்துவிட்டன. தற்போது நிலவக்கூடியவாறு வர்க்க சக்திகளின் சேர்க்கை முற்றிலும் மாறுபட்டுவிட்டது. இரண்டு உலகப் போர்கள், உலகின் மூன்றிலொரு பங்கு மக்கள் தொகை கொண்ட பல நாடுகளிலும் ஏற்பட்ட சோசலிசப் புரட்சிகள் மற்றும் ஒரு பிரமாண்டமான சோசலிச முகாமின் உருவாக்கம், பழைய காலனிய முறையின் விரைவான சிதைவு மற்றும் முன்னாள் காலனிய நாடுகளில் மிகமிகப் பெரும்


படிப்பகம்

பான்மையானவை அரசியல் சுதந்திரம் அடைந்தவை; பற்பல நாடுகளிலும் சக்தி வாய்ந்த கம்யூனிச மற்றும் தொழிலாளர் கட்சிகள் அடைந்த வளர்ச்சி இன்னும் பிற நடந்தேறின. இவையெல்லாம், 'சோசலிசப் புரட்சியின் சகாப்தம் தொடங்கிவிட்டது' என்று லெனினுடைய ஆய்வறிக்கைக்குப் பின்னர் நடந்தவை. பிரமிக்கத்தக்க இந்த மாற்றங்களின் ஒளியில் தற்போதைய சகாப்தம் குறித்து மறு ஆய்வு செய்வது நிச்சயம் தேவையாகிவிட்டது; அதோடு அது மார்க்சிய - லெனினிய ஆய்வுக்குப் பொருத்தமானதாக மறுவரையறுப்பும் செய்ய வேண்டியுள்ளது."

இப்படி எடுத்துக் கூறிய சி.பி.(எம்) தனது மறு ஆய்வு முடிவையும் மறுவரைய றைப்பையும் பின்வருமாறு வைக்கிறது.

''நம்முடையது நிச்சயம் ஒரு புதிய சகாப்தம்; முதலாளித்துவத்தில் இருந்து சோசலிசத்துக்கு மாறும் சகாப்தம்; உலகின் வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிக்கும் அறுதிக் காரணியாகச் சர்வதேச சோசலிசக் கட்டமைப்பு மாறிவரும் சமயத்திலான சகாப்தம்; தேசிய விடுதலை மற்றும் சோச லிசப் புரட்சிக்கான சகாப்தம்; காலனிய முறை விரைந்த நிலைகுலைவும் சிதைவும் அடையும் சகாப்தம்; அழிந்துவரும் முதலா ளித்துவ சக்திகளுக்கும் சோசலிசம் மற்றும் தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கும் இடை யிலான பூதாகரமான வர்க்கப் போர்கள் நடக்கும் சகாப்தம்; ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியும் சோசலிசம் மற்றும் கம்யூனி சத்தின் ஒரு உலகு தழுவிய இறுதி வெற்றியும் அடையும் சகாப்தம்'' [சி.பி.(எம்): சித்தாந்தத் தீர்மானங்கள் பக். 5 1969-].

இப்படியாக, ''சோசலிச முகாமுக்கும், ஏகாதிபத்திய முகாமுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகிவிட்டது; சோசலிச முகாம் வெல்லப்பட முடியாத தீர்மானகரமான சக்தியாகிவிட்டது; ஏகாதி பத்தியத்துடன் சமாதான சகவாழ்வு, அமை திவழிப் பொருளாதாரப் போட்டி மற்றும் அமைதி வழிமாற்றம்'' என்று குருச்சேவ் கும்பலின் திருத்தல்வாதத்தை சி.பி.(எம்) ஏற்பதைக் குறிக்கிறது.

அதேசமயம், சீனத்தின் லின்-பியாவோ, இந்திய சாருமஜும்தார் ஆகியோர் உயிர்த்திப் பிடித்த இடது குறுங்குழுவாத முழக்கமான ''ஏகாதிபத்தியத்தின் முற்றும் முழுதான வீழ்ச்சி மற்றும் சோசலிசத்தின் உலகு தழுவிய வெற்றியின் சகாப்தம்'' -

சரியான மார்க்சிய - லெனினிய நிலைப் பாடு என்கிற பெயரில் மேற்கண்டவாறு சந்தர்ப்பவாத நிலைப்பாடுதான் சி.பி.(எம்) எடுத்தது. விளக்கங்கள் - வியாக்கியா னங்கள் எப்படி இருந்தபோதும், நடை முறையில், குருச்சேவ் கும்பலின் நிலையை அடியொற்றியே இருந்தது.

— தொடரும்

### வரவு - செலவு அறிக்கை:

# நாட்டை அடகு வைப்பதில் நாலுகால் பாய்ச்சல்

**நா**ட்டை மீண்டும் காலனியாக்கும் நாலுகால் பாய்ச்சலில் 2001-02ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு அறிக்கையை பாரதீய ஜனதா கூட்டணி அரசு சமர்ப்பித் துள்ளது. இதன் மூலம் இந்திய நாட்டுக்கும் மக்களுக்கும் எதிரான ஒரு போர்ப் பிரகட னத்தை அறிவித்துள்ளது. இதுவரை கண்டி ராத வகையில் தொழிலாளி வர்க்கத்தின் உரி மைகள் பறிப்பு, உழைக்கும் மக்களின் வேலை வாய்ப்பு - வாழ்வுரிமை பறிப்பு, சிறுதொழில்களுக்கு மூடுவிழா, விவசாயத் துக்கான மானியங்கள் வெட்டு, வரலாறு காணாத அஞ்சல் கட்டண உயர்வு, உணவுப் பாதுகாப்பைக் கைவிடுவது, அரசுத்துறை நிறுவனங்கள் தனியார் - அந்நிய முதலாளி களுக்குத் தாரை வார்ப்பு - என ஏகாதிபத்தி யங்களும் தரகுப் பெருமுதலாளிகளும் நாட்டையும் மக்களையும் தடையின்றிச் சூறையாடும் வகையில் இந்த பட்ஜெட் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலனிய ஆட்சிக் காலத்தில் இருந் ததைப் போல, கொள்ளையடிக்கவும் அடக் கியாளவும் தமக்கும் தரகுப் பெருமுதலாளி களுக்கும் கட்டுப்பாடற்ற சுதந்திரத்தைக் கோரி ஏகாதிபத்திய வல்லரசுகள் நிர்பந் தித்து வருகின்றன. அவற்றுக்குப் பயபக்தி யோடு சேவை செய்யும் வகையிலே பட்ஜெட்டைத் தயாரித்துள்ள நிதியமைச்சர், புதிய கொள்கை முடிவுகளையும் அறிவித்து மக்களை மரணக் குழியில் தள்ளிவிட் டுள்ளார்.

நினைத்த நேரத்தில் தொழிலாளிகளை வேலையிலிருந்து விரட்டியடிக்கவும், தேவைப்படும்போது நியமித்துக் கொள்ளவும் முதலாளிகளுக்கு உரிமைய ளிக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப் படும் என்று நிதியமைச்சர் அறிவித் துள்ளார். 1000 தொழிலாளர்களுக்குக் குறை வாக உள்ள நிறுவனங்கள் ஆலை மூடல், ஆட்குறைப்பு, லே-ஆஃப் முதலானவற் றுக்கு இனிமேல் அரசாங்கத்திடம் முன் அனு மதி பெற வேண்டியதில்லை என்று முதலா ளிகளுக்கு எல்லையற்ற சுதந்திரத்தை வழங் கியுள்ளார். இதுமட்டுமின்றி நிரந்தரத் தொழிலாளர்களை ஒப்பந்தப் பணியாளர்க ளாக மாற்றியமைத்துக் கொள்ளவும் முதலா ளிகளுக்குத் தாராள அனுமதி அறித் துள்ளார்.

இதன்மூலம் பெருந்தொழில் நிறுவனங் களில் பணியாற்றும் இரண்டு கோடிக்கும் மேலான தொழிலாளர்கள் வேலை உத்திர வாதப் பாதுகாப்பிலிருந்து விரட்டியடிக்கப் பட்டுள்ளனர். தொழிலாளர் வர்க்கம் கடந்த பல தலைமுறைகளாகப் போராடிப் பெற்ற பணிப் பாதுகாப்பு, ஊதியம், வேலை நேரங்கள், பணி நிலைமைகள் அனைத்தும் ஒரே நொடியில் பறிக்கப்பட்டுள்ளது. தற்போது கிடைத்துவரும் சமூகப் பாது காப்பும் சமவேலைக்குச் சம ஊதியம் என்ற கொள்கையும் நிதியமைச்சரின் அறிவிப்

**தீப்பெட்டி இறக்குமதியையும், இயந்திரத் தீப்பெட்டி தொழிற்சாலைகளையும் தடை செய்யக் கோரி சிறு தீப்பெட்டித் தொழிலாளர்கள் நடத்திய ரயில் மறியல்.**



www.padippakam.com

பின்படி வேட்டு வைக்கப் பட்டுவிட்டது. இந்தியத் தொழிலாளி வர்க்கம் இதற்குமுன் சந்தித்திராத மிகக் கொடிய தாக்குதலாகும் இது.

இந்தியத் தரகு முதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் தொழிலாளர் சட்டங்களை மாற்றியமைக்க வேண்டும் என்று தொடர்ந்து நிர்பந்தித்து வருகின்றன. அவர்களின் கட்டளையை ஏற்று, தொழிலாளர் வர்க்கத்தை வீதியில் வீசியெறியத் துணிந்துள்ள நிதியமைச்சர் தரகுப் பெரு முதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் அவர்களே திக்குமுக்காடிப் போகும் அளவுக்குச் சலுகைகளை வாரியிறைத்துள்ளார்.



சிறு தொழில் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இந்திய தோல் பொருள் தயாரிப்புகள், பன்னாட்டு நிறுவனங்களின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்குமா?

சாலைகள், பாலங்கள், இருப்புப் பாதை, நீர்ப்பாசனம், சுகாதாரம், தொலைத் தொடர்பு முதலான அடிக்கட்டுமான துறைகளில் முதலீடு செய்யும் முதலாளிகளுக்கு வரி விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய முதலீடுகளுக்கான வட்டிக்கும் பங்கு வீதத்துக்கும், நீண்ட கால முதலீட்டு ஆதாயத்துக்கும் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உணவு தானிய ஏற்றுமதி - இறக்குமதியைக் கையாளுதல், கிடங்குகளில் சேமித்தல் முதலான தொழில்களில் ஈடுபடும் முதலாளிகளுக்கு முதல் ஐந்தாண்டுகளுக்கு வரி விதிப்பு கிடையாது என்றும் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு 30% வரித் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. பெருமுதலாளித்துவ நிறுவனங்களின் பங்கு வீத வரி 20%-லிருந்து 10% ஆகக் குறைக்கப்பட்டுள்ளதோடு, பங்கு வீதத்தைப் பிரித்துக் கொடுப்பதற்கு விதிக்கப்படும் வரியும் குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பெருந்தொழில் நிறுவனங்கள் பட்டியலில் உள்ள முதல் 50 நிறுவனங்கள் மட்டும் ஒரு ஆண்டில் ஏறத்தாழ ரூ. 800 கோடியை ஆதாயமாகப் பெறும் என்று ''எக்னாமிக் டைம்ஸ்'' நாளேடு மதிப்பிட்டுள்ளது. ஏழைகளின் நல்வாழ்வுத் திட்டங்களுக்குப் பணமில்லை என்று பாசாங்கு செய்யும் நிதியமைச்சர், இந்தக் குபேரக் கம்பெனிகளுக்குக் கோடி கோடியாய் சலுகை காட்டுகிறார்.

இது மட்டுமா? பெருந்தொழில் நிறுவனங்கள் மீது விதிக்கப்படும் உபரி வரியை 13%-லிருந்து 2% ஆக குறைத்துள்ளார். இந்த வகையில் மட்டும், முதல் 50 நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு ரூ. 1150 கோடிக்கு மேல் ஆதாயமாகக் கிடைக்கும். மொத்தத்தில், முதலாளிகள் மீது விதிக்கப்படும் பல்வேறு வகையான நேரடி வரிகளின் குறைப்பு - சலுகைகளின் விளைவாக நடப்பாண்டில் மட்டும் அரசாங்கத்துக்கு ரூ. 5500 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தவிர, கார் - ஸ்கூட்டர் முதலான மோட்டார் வாகனங்களுக்கான தனித் தீர்வையில் 8% குறைத்துத் தரகுப் பெருமுதலாளிகளை உச்சிகுளிரச் செய்துள்ளார். குளிர் பானங்கள் மீதான கலால் தீர்வையில் 16%-ஐக் குறைத்துள்ளதன் மூலம் கோக் - பெப்சி ஆகிய பன்னாட்டு ஏகபோகக் கம்பெனிகளின் இலாப வேட்டைக்குப் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

இவை மட்டுமா? உலக வர்த்தகக் கழகம் நிர்பந்தித்து வந்த வர்த்தக சுதந்திரத்துக்கு முழு அங்கீகாரமளித்து, ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து கட்டுப்பாடற்ற இறக்குமதிக்குத் தாராள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிகள் மீது போடப்பட்டிருந்த உபரி வரி நீக்கம், அடுத்த மூன்றாண்டுகளில் 20%-க்கு மேல் போகாமல் இறக்குமதி வரியின் மீது கட்டுப்பாடு, சுங்கத் தீர்வைக் குறைப்பு முதலானவற்றால் இந்த பட்ஜெட் மூலம் அந்நிய இறக்குமதிக்கு சிவப்புக் கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது.

இதுநாள் வரை சிறுதொழில் பட்டியலில் இருந்த காலணிகள், விளையாட்டுப் பொம்மைகள் தயாரிப்பு உள்ளிட்ட 14 வகை சிறு - குடிசைத் தொழில்களை நிதியமைச்சர் அப்பட்டியலிலிருந்து நீக்கி விட்டார். இவை உலகத்தரத்துடன் போட்டியிட, பெரும் மூலதன - தொழில்நுட்பச் சாதனங்களுடன் இயங்க வேண்டிய தேவை உள்ளதாகக் கூறி இவற்றை பெருந்தொழில் பட்டியலில் சேர்த்துள்ளார். வட்டார அளவிலான சிறுவீத செருப்பு, பொம்மை தயாரிப்பு நிறுவனங்கள் இதனால் நசிவடைவதோடு, அவற்றில் பணியாற்றும் தொழிலாளர்களும் வீதியில் வீசியெறியப்படுவர். நிதியமைச்சரின் இந்த முடிவின் மூலம் பாட்டா, ரீபோக், நிக், அடிடாஸ் முதலான அந்நிய - ஏகபோக நிறுவனங்களே செருப்பு தயாரிப்பிலும் விற்பனையிலும் ஆதிக்கம் செலுத்தும்.

இத்தனையும் போதாதென்று பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் தரகுப் பெரு முதலாளிகளும் தடையின்றிக் கொள்ளையடிக்க, அரசின் விலைக் கட்டுப்பாட்டுக் கொள்கையையும் நிதியமைச்சர் மாற்றியமைத்துள்ளார். இதன்படி பெட்ரோலியப் பொருட்களின் விலை நிர்ணய ஏற்பாடு வருமாண்டு மார்ச்சில் கலைக்கப்படும். யூரியா மீதான அரசின் கட்டுப்பாடு படிப்படியாகத் தளர்த்தப்பட்டு 2006-ஆம் ஆண்டில் முடிவுக்கு வரும். சர்க்கரையில் ஊக பேரம் புகுத்தப்பட்டு விலை கட்டுப்பாடு முற்றாக நீக்கப்படும். அத்தியாவசிய மருந்துகளின் விலை கட்டுப்பாடும் நீக்கப்பட்டுவிடும். இதன் விளைவாக, இப்பொருட்களைத் தரகுப் பெரு முதலாளிகளும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களும் தமது விருப்பத்துக்கேற்ப விலை நிர்ணயம் செய்து கொள்ளையடிக்கலாம். அரசு ஏன் என்று கேட்காது.

அந்நிய ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு பாரதீய ஜனதா செய்யும் பாதச் சேவை இதோடு நின்றுவிடவில்லை. எந்தவொரு துறையிலும் அந்நிய நிறுவனங்கள் 49% வரை முதலீடு செய்யவும், வங்கி அல்லாத நிதி நிறுவனங்களில் 100% வரை முதலீடு செய்யவும் தாராள அனுமதியளித்துள்ள நிதியமைச்சர், இதன் மூலம் இந்தியப் பொருளாதாரத்தை ஏகாதிபத்திய வல்லரசுகளின் இரும்புப் பிடியில் தள்ளியுள்ளார். மாநில மின்சார வாரியங்களைத் தனியார்மயமாக்க பட்ஜெட்டில் ஏற்பாடுகளையும் செய்துள்ளார். இத்தகைய தனியார்மய மின்திட்டங்களுக்கு மைய அரசு முன்னுரிமை தருவதோடு, ஊக்குவிப்புத் தொகையும் அளிக்கும். தனியார்மயமாக்கலை ஊழியர் போராட்டம் காரணமாக ஏற்க மறுக்கும் மாநில அரசுகள் கூட, வேறு வழியின்றி இணங்கிப் போகுமாறு நிர்பந்திக்கும் சூழ்ச்சியாகவே இக்கொள்கை அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநில மின் வாரியங்களை மட்டுமல்ல; 27 அரசுத் துறை நிறுவனங்களையும் தனியாருக்கு விற்க பாரதீய ஜனதா அரசு தீர்மானித்துள்ளது. வருமாண்டில் 12,000 கோடி ரூபாய் அளவுக்கு அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்றென இலக்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் எதிர்காலமும் கேள்விக் குறியாக்கப்பட்டுவிட்டது.

ஏற்கனவே அரசு ஊழியர் பணிக்குப் புதிதாக ஆளெடுப்பதை நிறுத்திவிட்ட மைய அரசு, இனி ஆண்டு தோறும் 2 சதவீத அளவுக்கு ஊழியர்களைக் குறைக்கவும் தீர்மானித்துள்ளது. அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் அளிப்பதை நிறுத்திவிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுபற்றி பரிசீ



படிப்பகம்

www.padippakam.com

லிக்க நிபுணர் குழு நியமிக்கப்பட்டு மூன்று மாதங்களில் இக்குழு பரிந்துரையைச் சமர்ப்பிக்க உள்ளது. தமிழகம் உள்ளிட்ட சில மாநிலங்களில் தேர்தல் நடைபெற உள்ளதாலேயே இந்த கால அவகாசம் தரப்பட்டுள்ளது. தேர்தலுக்குப் பின் ஒய்வூதியம் உள்ளிட்டுப் பல்வேறு சலுகைகளும் சமூகப் பாதுகாப்பும் முற்றாக ஒழிக்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது.

தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், சிறு தொழில் நிறுவனங்கள் மீது தாக்குதலை ஏவிவிட்டுள்ள நிதியமைச்சர், இந்நாட்டின் கோடானுகோடி விவசாயிகள் மீது மிகக் கொடூரமான வஞ்சகத் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார். உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, 1400-க்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்கியுள்ள பாரதீய ஜனதா அரசு, இப்போது உணவுப் பாதுகாப்புக்கான ஏற்பாட்டையும் கைகழுவி விட்டது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல், கோதுமை போன்ற உணவு தானியங்களைக் கொள்முதல் செய்யும் பொறுப்பை ஏற்றிருந்த அரசு, இனி அவ்வாறு செய்யாது. இந்திய உணவுக் கழகம் (FCI) இனிமேல் ஒரு கோடி டன் அளவுக்குத்தான் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்யும். இதனால், சந்தையில் கிடைக்கும் விலைக்குத் தானியங்களை விற்று இனிமேல் பிழைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். உணவு தானியங்களுக்கு ''குறைந்த பட்ச ஆதரவு விலை'' அளித்து வந்த அரசாங்கத்தின் பொறுப்பு கைவிடப்பட்டுள்ளதால், இனி விவசாயிகள் வர்த்தக சூதாடிகளின் கிடுக்கிப் பிடியில் நெரிக்கப்படுவர். உணவு தானியங்கள் மற்றும் விவசாய விளை பொருட்களின் கொள்முதல் - விற்பனையை முழுக்கவும் ஏகபோக மண்டி வர்த்தகர்களிடம் ஒப்படைக்கும் அரசின் இந்த முடிவானது, விவசாயத்தையும் விவசாயிகளையும் சூறையாடும் மிகக் கொடிய தாக்குதலாகும். விவசாயிகள் அற்ப விலைக்கு உணவு தானியங்களை வர்த்தக சூதாடிகளிடம் விற்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளதோடு, கடத்தலும் பதுக்கலும் பெருகி வர்த்தக சூதாடிகள் திடீர் விலையேற்றம் செய்து கொள்ளையடிக்கவும், உணவுக்காக மக்கள் ஏகாதிபத்தியங்களிடம் கையேந்தி நிற்கவும் இதன் மூலம் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கொள்முதல் ஏற்பாட்டைக் கைவிட்டு விவசாயிகளைத் தாக்கும் பாரதீய ஜனதா அரசு, மறுபுறம் பொது விநியோக முறையை - அதாவது ரேஷன் கடைகள் மூலம் மலிவு விலையில் உணவு தானியங்களை விநியோகிக்கும் முறையை முற்றாகக் குழி தோண்டிப் புதைத்து விட்டது. கடந்த ஆண்டில் ரேஷன் பொருட்களின் விலையை உயர்த்தியும், வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளதாகக் கூறி ஏழை மக்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்குவதை ரத்து செய்தும் குரூரமாகத் தாக்குதலை ஏவிய நிதியமைச்சர், இப்போது ரேஷன் கடை விநியோக முறையை மைய அரசு பொறுப்பேற்காது என்று அறிவித்து விட்டார். இவற்றுக்கு மாநில அரசுகளே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். ரேஷன் கடைகள் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதால் ஏற்படும் செலவுகளையும் இழப்புகளையும். இனி மாநில அரசுகளே தமது வருவாயிலிருந்து ஈடுகட்டிக் கொள்ள வேண்டும் என்று அறிவித்து ஏழை மக்களைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளி விட்டுள்ளார்.

நடுத்தர வர்க்கத்தினரையும் இந்த பட்ஜெட் விட்டு வைக்கவில்லை. ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், சாமானியர்கள் சிரமப்பட்டு சேர்த்து வைத்துள்ள சிறு சேமிப்புகளின் மீதான வட்டியைக் குறைத்து அவர்களின் வயிற்றிலடித்துள்ளது பா.ஜ.க. அரசு. கடந்த நான்காண்டுகளில் விலைவாசி உயர்வின் வேகமும் பணவீக்கமும் குறைந்து விட்டதாம்! அதனால்தான் சிறுசேமிப்புகளுக்கு வட்டியைக் குறைப்பதாக அரசு நியாயவாதம் பேசுகிறது. ஆனால், எந்த விதமான பொருளாதார ஏற்ற இறக்கங்கள் ஏற்பட்டாலும், அந்நியச் செலாவணி விகித மாற்றங்களால் இழப்பு ஏற்பட்டாலும் அமெரிக்க என்ரான் மின் நிறுவனத்துக்கு 16% இலாப உத்திரவாதத்தை பா.ஜ.க. அரசு வர்க்கப் பாசத்தோடு உறுதிப்படுத்தியுள்ளது.

இப்படி தரகுப் பெரு முதலாளிகளுக்கும் பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களுக்கும் எல்லையில்லாத சலுகைகள் அளித்து நாட்டைச் சூறையாட ஏற்பாடு செய்துள்ளதாலேயே அவர்கள் இந்த பட்ஜெட்டை வானளாவப் புகழ்ந்து போற்றுகின்றனர். ''இந்திய சுதந்திரத்துக்குப் பின் தயாரான பட்ஜெட்டுகளிலேயே இதுதான் மிகவும் துணிச்சலான பட்ஜெட்'', ''இரண்டாம் கட்ட சீர்திருத்தங்களை அக்கறையுடன் செயல்படுத்த விழையும் பட்ஜெட்'', ''பத்துக்கு எட்டு மதிப்பெண்களைப் பெறும் பழுதில்லாத பட்ஜெட்''; ''அப்னா பட்ஜெட் (நமது பட்ஜெட்)'' என்று இந்தியா டுடே, டைம்ஸ் ஆப் இந்தியா, அவுட்லுக், பிசினஸ் வேர்ல்டு முதலான முதலாளித்துவ எடுபிடி பத்திரிகைகள் குதூகலித்துப் பாராட்டுகின்றன. ''இந்த பட்ஜெட்டானது, பொருளாதார வளர்ச்சியில் புதிய பாய்ச்சலை எட்டும்'' என்று மகிழ்ச்சியில் பூரித்துப் போகிறார், தரகுப் பெருமுதலாளியான ராகுல் பஜாஜ். பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர்கள் நிதியமைச்சருக்குப் புகழாரம் சூட்டி மகிழ்கின்றனர். அரசியலில் எதிர்த்தரப்பைச் சேர்ந்த ப. சிதம்பரமும் மன்மோகன்சிங்கும் ''இது மிகச் சிறந்த பட்ஜெட்'' என்று வரவேற்று ஆதரிக்கின்றனர்.

இந்திய மக்கள் மீது கொடிய தாக்குதலை ஏவியுள்ள பட்ஜெட் என்று எதிர்ப்பு தெரிவிக்கும் போலி கம்யூனிஸ்டுகளான 'மார்க்சிஸ்டு' கட்சியினர், ''கிராமப்புற - நகர்ப்புற செல்வந்தர்கள் மீது கூடுதலாக வரி விதிக்க வேண்டும்; அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு பொதுத் துறை நிறுவனங்களை மேம்படுத்தி நாட்டு வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும்'' என்று கொக்கு தலையில் வெண்ணெயை வைத்து பிடிக்கக் கிளம்பியுள்ளனர்.

ஆனால், நடப்பாண்டின் பட்ஜெட்டானது உழைக்கும் மக்கள் மீது வரிச்சுமை - கட்டண உயர்வு - விலையேற்றத்தைத் திணிக்கும் வழக்கமான பொருளாதாரத் தாக்குதலோடு நின்றுவிடவில்லை. நாட்டையும் மக்களையும் ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு முற்றாக அடகு வைக்கும் அடிமைச் சாசனத்தின் அடையாளமாகவே உள்ளது. அடிமைத் தளையிலிருந்து இந்த நாட்டை விடுவிக்காமல் நமது தொழிலை, வேலையை, வாழ்க்கையை நாம் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

● பாலன்




**பொதுத்துறை வங்கிகள் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து இந்திய அரசு வங்கி ஊழியர்கள் கொல்கத்தாவில் நடத்திய ஆர்ப்பாட்டம்.**


படிப்பகம்

www.padippakam.com

# பன்னாட்டு நிறுவனங்களின்

# ஊழல் ஏற்றுமதி

இலஞ்சம் - ஊழல் பற்றி ஆய்வு நடத்திய ''டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனல்'' என்ற நிறுவனம், ஊழல் - இலஞ்சம் தலை விரித்தாடும் உலக நாடுகளின் வரிசையில் இந்தியா 22-ஆவது இடத்தில் இருப்பதாக அறிவித்துள்ளது. ஹாங்காங் நாட்டைச் சேர்ந்த மற்றொரு நிறுவனம், ஆசியா கண்டத்தைச் சேர்ந்த நாடுகளுள், இலஞ்சம் - ஊழல் - அதிகார முறைகேடுகள் விசயத்தில் இந்தியா மூன்றாவது இடத்தில் இருப்பதாகக் கூறுகிறது.

நேரு காலத்தில் நடந்த டி.டி. கிருஷ்ணமாச்சாரி ஊழல் தொடங்கி, தற்பொழுது பா.ஜ.க. தலைமையில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் அம்பலப்பட்டு நாறும் இராணுவ பேர ஊழல் வரை பார்த்து விட்ட நமக்கு, இந்தியாவைப் பற்றிய இந்தக் ''கண்டுபிடிப்புகள்'' கண்டிப்பாக அதிர்ச்சியாக இருக்கப் போவதில்லை. பல ஏழை நாடுகள் இந்த விசயத்தில் இந்தியாவைவிட மோசமாக இருப்பதாக இந்த நிறுவனங்கள் கூறுவது வேண்டுமானால் நமக்கு ஓரளவு அதிர்ச்சியைக் கொடுக்கலாம்.

ஏழை நாடுகளில் காணப்படும் வறுமையை தாராளமயத்தின் மூலம் ஒழித்துக் கட்டிவிடலாம் 'என தம்பட்டம் அடித்து வரும் ஏகாதிபத்திய நாடுகள், ஏழை நாடுகளில் காணப்படும் இலஞ்சம் - ஊழல் - அதிகார முறைகேடுகளை ஒழிப்பதற்கும் உதவப் போவதாகக் கூறி வருகின்றன. ஏகாதிபத்திய நாடுகளின் தலைமையில் இயங்கும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பு (OECD) இதற்காகவே ஒரு புதிய அமைப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது. இந்த அமைப்பில் இன்னும் இந்தியா உறுப்பினராகச் சேரவில்லையே என்ற ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உலக வங்கி, ஏழை நாடுகளில் நல்லாட்சியை அமைக்க உதவப் போவதாகக் கூறிக் கொண்டு, இலஞ்சம் - ஊழல் மலிந்து கிடக்கும் ஏழை நாடுகளுக்கு. தனது உதவியை நிறுத்தப் போவதாக மிரட்டியது. மேலும், 1997-ஆம் ஆண்டு உலக வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''வெளிநாட்டு வர்த்தகத்தில் இருக்கும் கட்டுப்பாடுகளை, தொழில்களில் தனியார் நுழைவதற்கு இருக்கும் தடைகளை நீக்கும் கொள்கைகள்தான்; அரசுத் துறைகள் தனியார்மயமாக்கப்படுவதுதான், பொருளாதாரத்தில் போட்டியை உத்தரவாதப்படுத்தி, அதன் மூலம் இலஞ்சத்தை ஒழிக்க உதவும்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

தாராளமயத்தைத் தீவிரமாக ஆதரித்து எழுதி வரும் அங்க்லேசரய்ய அய்யர் என்ற பத்திரிகையாளர் ''தெகல்கா இணையப் பத்திரிகை மூலம் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஊழல் அம்பலமானதற்கு வழிவகுத்ததே தாராளமயம்தான்'' என்று அடித்துக் கூறியிருக்கிறார். ''தாராளமயம் நடைமுறைக்கு வரவில்லையென்றால், தெகல்கா இணையப் பத்திரிகை நிருபர்களுக்கு இரகசிய புகைப்படக் கருவி கிடைத்திருக்குமா? முன்புபோல இப்பொழுதும் அரசு மட்டுமே தொலைக்காட்சி சேவையில் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்குமானால், தெகல்கா நிருபர்கள் இரகசியமாக எடுத்த ஒலிப்பேழை படம் ஒளிபரப்பப்பட்டிருக்குமா?'' இப்படி பல 'பொருள்' பொதிந்த கேள்விகளைத் தூக்கி போட்டு தாராளமயத்தை ஊழலை ஒழிக்க வந்த மாமருந்தாகக் குறிப்பிட்டுள்ளார்.

''அரசுத் துறை என்றாலே ஊழல்; தனியார்துறை என்றால் திறமை; நேர்மை'' என்ற கருத்து இந்திய நடுத்தர வர்க்கம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. மேலும், அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் ஊழலே கிடையாது; எல்லாம் சட்டப்படி 'டாண்டாண்னு' நடக்கும் என்றும் நம்மில் பலர் நம்பிக் கொண்டுள்ளனர். இந்நிலையில், நமது நாட்டில் ஊழலை ஒழிக்க ஏகாதிபத்திய அமைப்புகளையும், தாராளமயத்தையும் விட்டால் வேறுவழியில்லை என்ற முடிவுக்கு அமெரிக்க மோகத்தில் வீழ்ந்து கிடப்பவர்கள் வரவும் கூடும்.

இந்த முட்டாள்தனமான, பித்துக்குளித்தனமான எண்ணத்தைக் குழிதோண்டி புதைக்கும் வண்ணம் இங்கிலாந்து நாட்டில் இயங்கி வரும் ''கார்னர் ஹவுஸ்'' என்ற தன்னார்வக் குழு, இலஞ்சமும், ஊழலும் ஏகாதிபத்திய நாடுகளில் இருந்துதான் ஏழை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதை ஆணித்தரமாக நிருபித்துள்ளது. ''உலகில் இலஞ்சமும், ஊழலும்; அதிகார முறைகேடுகளும் கட்டுக்கடங்காமல் வளர்ந்து செல்வதற்கு உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏகாதிபத்திய அரசுகள் - இம்மூன்றும் தேசங்கடந்த தொழிற்கழகங்களின் இலாபத்திற்காக, ஏழை நாடுகளில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கி வருவதும்; ஏழை நாடுகளின் தேசிய அரசுகளை தங்களின் கைப்பாவைகளாக மாற்றி வருவதும்தான் காரணம்'' என இத்தன்னார்வக் குழு குறிப்பிடுகிறது.

இதற்கான ஆதாரங்களைத் தொகுத்து ''ஊழல் ஏற்றுமதி:` தனியார்மயம் - பன்னாட்டு நிறுவனங்கள் - இலஞ்சம்'' என்ற நூலை இக்குழு வெளியிட்டுள்ளது. அந்நூலில் ஏகாதிபத்திய நாடுகளைச் சேர்ந்த தொழிற்கழகங்கள் வருடமொன்றுக்கு அதிகாரிகள்-அரசியல்வாதிகளுக்கு கொடுக்கும் இலஞ்சம் 3,60,000 கோடி ரூபாய் என்ற உண்மையை ஆதாரத்தோடு அம்பலப்படுத்தியுள்ளது.

உலக வங்கி ஒவ்வொரு ஆண்டும் 1,12,500 கோடி ரூபாயைப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக ஏழை நாடுகளுக்குக் கொடுத்து உதவுவதாகக் கூறுகிறது. உண்மையில், இத்தொகையில் 55 சதவீதம்தான் ஏழை நாடுகளுக்குக் கடனாகவும், உதவியாகவும் வழங்கப்படுகிறது. மீதி 45 சதவீதத் தொகையை உலக வங்கித் திட்டங்களை நிறைவேற்ற ஏழை நாடுகளுக்கு ஆலோ

**அரசு வங்கிப் பணத்தை மோசடி செய்து பங்குச் சந்தையில் சூதாடிய கேதான் பாரேக் (இடது) மற்றும் அவனது வெளிநாட்டுத் தொழில் கூட்டாளி கெர்ரி பேக்கர் (நடுவில்): தாராளமயத்தில் அர்சத் மேத்தாக்களுக்கு அழிவே கிடையாது.**





படிப்பகம்

சனை வழங்குவதாகக் கூறிக் கொண்டு, ஏகாதிபத்திய நிறுவனங்கள் அதிகார முறைகேடுகள் மூலம் விழுங்கி விடுவதையும், 100 சதவீதத் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பெரும் சுமை ஏழை நாடுகளின் மீது திணிக்கப்படுவதையும் இத்தன்னார்வக் குழு வெளியிட்டுள்ள நூல் அம்பலப்படுத்தியுள்ளது.

ஏகாதிபத்திய நிறுவனங்கள் அடிக்கும் இந்த 45 சதவீதக் கொள்ளையில், அமெரிக்காவுக்கும், ஜெர்மனிக்கும் கிடைக்கும் பங்கு தலா 6 சதவீதம்; பிரிட்டனுக்கு கிடைப்பது 3 சதவீதம். பிரிட்டன் உலக வங்கிக்குச் செலுத்தும் பங்குத் தொகையைவிட, அந்நாட்டைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்களுக்குக் கிடைக்கும் ''ஆலோசனைக் கட்டணம்'' மிக் அதிகம். இப்படி தன் தலை மாட்டிலேயே ஊழலை வைத்துக் கொண்டு, ஏழை நாடுகளின் ஊழலைப் பற்றி உலக வங்கி எச்சரிப்பதுதான் வேடிக்கையானது.

தன்னார்வக் குழுக்கள் தாராளமயத்தை எதிர்க்கின்றன. அதனால், இந்தக் குற்றச்சாட்டு அவ்வமைப்புகள் அவிழ்த்துவிடும் அண்டப் புளுகாகக் கூட இருக்கலாம் என சந்தேகிப்பவர்கள், தயவு செய்து, தாராளமயத்தின் தலைமைப் பூசாரி அமெரிக்கா கூறியிருப்பதைக் காது கொடுத்துக் கேளுங்கள்.

அமெரிக்காவின் வர்த்தகத் துறை 1999-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் ''கடந்த ஐந்தாண்டுகளில் 6,52,500 கோடி ரூபாய் பெறுமான 294 வர்த்தக ஒப்பந்தங்கள் கையெழுத்தானதற்கு, இலஞ்சம் மிக முக்கிய காரணம்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்க அரசே உண்மையைப் போட்டு உடைத்திருப்பது ஒருபுறமிருக்கட்டும். நமது நாட்டில், பெரும்பாலான மக்களின் சொந்த அனுபவத்தை எடுத்துக் கொள்வோம். இந்தப் பத்தாண்டுகளில் ஒரு பத்து ரூபாய் கூட வெட்டாமல், அரசு அலுவலகங்களில் நமக்குத் தேவையான காரியம் நடந்து முடிந்திருக்கிறதா? போலீசுக்கு மாமூல் கொடுக்காமல், நடைபாதை வியாபாரிகள் பிழைக்க முடிந்திருக்கிறதா? உயர் அதிகாரிகள் - அமைச்சர்கள் மட்டத்தில் 10 கோடி, 100 கோடி கணக்கில் நடந்துவந்த ஊழல், தாராளமயத்தின் பின்புதான் ஐயாயிரம் கோடியை எட்டிப் பிடித்தது. 700 கோடி ரூபாய் பெறுமான சர்க்கரை ஊழல்; 133 கோடி ரூபாய் பெறுமான யூரியா இறக்குமதி ஊழல்; ''ஹவாலா'' ஊழல்; (சமீபத்தில்) மீண்டும் வெடித்துள்ள 180 கோடி ரூபாய் பெறுமான பங்குச் சந்தை ஊழல் - இவை அனைத்துமே தாராளமயத்தினால் நடந்தவை.

ஹவாலா ஊழலில் இரண்டு முன்னாள் மைய மின்துறை அமைச்சர்களும், அத்துறையைச் சேர்ந்த பல அதிகாரிகளும் சிக்கியிருந்தனர். மின்துறையில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு அவை கேட்டபடி சலுகைகள் காட்டப்படுவதையும், இதையும் முடிச்சுப் போட்டுக் கொள்ளுங்கள்.



**போஃபர்ஸ் பீரங்கி பேர ஊழலில் இடைத்தரகர்களாகச் செயல்பட்ட சிரீசந்த் இந்துஜா (இடது) மற்றும் கோபிசந்த் இந்துஜா.**

1994-ஆம் ஆண்டு மட்டும் இந்தியாவில் இயங்கும் அந்நிய வங்கிகள் 134 சட்டவிரோத முறைகேடுகளில் ஈடுபட்டிருந்தது, கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள், கடந்த பத்தாண்டுகளில் மட்டும் கிட்டதட்ட 500 கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பு மோசடிகள் செய்துள்ளன.

ஏகாதிபத்திய நிறுவனங்கள் ஊழல் - மோசடிகளுக்கு அப்பாற்பட்ட புனிதர்கள் அல்ல என்பதற்கு இன்னும் ஆதாரம் வேண்டும் என்றால், பாகிஸ்தான், சிங்கப்பூர் உதாரணங்களை எடுத்துக் கொள்வோம்.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த எஸ்.ஜி.எஸ். என்ற நிறுவனம் 1992-ஆம் ஆண்டு பாகிஸ்தான் அரசிடமிருந்து ஒரு திட்ட ஆய்வு ஒப்பந்தத்தைப் பெறுவதற்காகக் கணிசமாக இலஞ்சம் கொடுத்ததை மறைக்க முடியாமல்; அந்நிறுவனம் ஐந்தாண்டுகள் கழித்துத் தானே உண்மையை ஒப்புக் கொண்டது. அதே பாகிஸ்தானில் நடைபெறும் உலக வங்கித் திட்டங்களில் இலஞ்சம் புகுந்து விளையாடாமல் கண்காணிப்பதற்காக, இந்த எஸ்.ஜி.எஸ். நிறுவனத்தையே தேர்ந்தெடுத்திருக்கிறது உலக வங்கி. திருடன் கையிலேயே பெட்டிச் சாவியைக் கொடுக்கும் கதைதான் இது.

சிங்கப்பூர் அரசு சமீபத்தில் சீமென்ஸ், பிரெல்லி, பி.ஐ.சி.சி., டோமன், மருபெனி என்ற ஐந்து ஏகாதிபத்திய நிறுவனங்கள் ஐந்து ஆண்டுகளுக்குத் தனது நாட்டில் எந்தவொரு அரசு ஒப்பந்தத்தையும் பெற உரிமையில்லாதபடி தடை செய்தது. இந்த நிறுவனங்கள் சிங்கப்பூர் அரசால் தடை செய்யப்பட்டதற்கு காரணமே இவை வர்த்தக ஒப்பந்தங்களைப் பெற சிங்கப்பூர் அரசு அதிகாரிகளுக்கு 44 கோடி ரூபாய் இலஞ்சம் தந்த பேரம் அம்பலமாகிப் போனதுதான்.

இலஞ்சம் கொடுக்க முன்வந்தவை பன்னாட்டு நிறுவனங்கள்; சிங்கப்பூர் நாடோ, தாராளமயத்தை நடைமுறைப்படுத்துவதில் முன்னணியாக இருக்கும் ஒரு நாடு. இதை வைத்துப் பார்க்கும்பொழுது, இலஞ்சத்தின் வளர்ச்சியையும், பரிமாணத்தையும் பொருளாதாரக் கட்டுப்பாடுகள் தீர்மானிப்பதாக இல்லை; மாறாக, சந்தையை, வர்த்தக ஒப்பந்தங்களைக் கைப்பற்றிக் கொள்ள பன்னாட்டு நிறுவனங்களுக்கு இடையே நடக்கும் தொழிற் போட்டிதான் அடிப்படையாக அமைகிறது எனக் கூறலாம்.

ஏழை நாடுகளின் தொழில்களையும், வர்த்தக ஒப்பந்தங்களையும் எந்த வழியிலாவது முயன்று கைப்பற்றி விடுவதற்காகவே, பன்னாட்டு நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஏழை நாட்டிலும் பல இடைத்தரகர்களை அமர்த்தியுள்ளன. இவர்களின் வேலையே அமைச்சர்களையும், அதிகாரிகளையும் பணம், மது, மாதுவால் குளிப்பாட்டி, வர்த்தக - தொழில் ஒப்பந்தங்களைப் பெறுவதுதான்.

ஒரு வர்த்தக ஒப்பந்தம் வெற்றிகரமாகக் கையெழுத்தானால், அந்த ஒப்பந்த மதிப்பில் 10 சதவீதத் தொகை இடைத் தரகர்கள் மூலம் இலஞ்சமாகத் தரப்படுகிறது. நூறு கோடி, ஆயிரம் கோடி பெறுமான இந்த இலஞ்சப் பணத்தையும் பன்னாட்டு நிறுவனங்கள், தங்களின் சொந்த பாக்கெட்டில் இருந்து எடுத்து விடுவதில்லை. மாறாக, கொடுக்கும் இலஞ்சத்தை வர்த்தக பேரத்தின் மதிப்போடு சேர்த்துக் கூட்டி, மோசடித்தனம் செய்கின்றன. மேலும், இப்படி தரப்படும் இலஞ்சத்திற்கு ''தரகுக் கட்டணம்'' எனப் பெயரிட்டு, இந்த சட்ட விரோத மோசடியைச் சட்டபூர்வமாக்கி விடுகின்றன.

பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகள் தங்கள் நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் இப்படி இலஞ்சம் கொடுப்பதை, தவிர்க்க முடியாத, தேவையான வியாபார செலவு என ஏற்றுக் கொள்கின்றன. மேலும், இலாபத்தின் மீது விதிக்கப்படும் வரியைக் குறைக்க இந்தச் செலவைக் காட்டலாம் என்று சலுகையும் வழங்கியுள்ளன. இலஞ்சம் கொடுப்பதைச் சட்டபூர்வமானதாகக் கருதும் ஏகாதிபத்திய நாடுகளுக்கு, ஏழை நாடுகளின் இலஞ்சம் பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்க முடியும்?

உலகில் இருந்து இலஞ்சத்தை ஒழிக்க முன் வந்திருக்கும் பொருளாதார ஒத்து

www.padippakam.com

லைப்பு மற்றும் வளர்ச்சிக்கான கூட்டமைப்பு, ''கட்டுமானம், மின்சாரம், தொலைதொடர்பு, ஆயத பேரம் - இந்த நான்கு துறைகளில்தான் இலஞ்சப் பணம் நினைத்துப் பார்க்க முடியாதபடி புரள்வதாகக் குறிப்பிட்டுள்ளது. உலக வங்கியின் கணிப்புப்படி, ஒவ்வொரு ஆண்டும், 2,25,000 கோடி ரூபாய் இலஞ்சப் பணம், உலக வர்த்தகத்தில் புரள்கிறது. இந்தச் சட்டவிரோத பணத்தை, ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டிற்கு, ஒரு சந்தையில் இருந்து இன்னொரு சந்தைக்குக் கடத்தி வரும் திருப்பணியைப் பெரும்பாலும் தனியார் வங்கிகள்தான் செய்கின்றன.

நரசிம்மராவ் ஆட்சியில் தொலை தொடர்புத் துறை அமைச்சராக இருந்த சுக்ராம் வீட்டில் மூன்று கோடி ரூபாய் இலஞ்சப் பணம் கண்டெடுக்கப்பட்டதையும்; அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனமான என்ரான், இந்தியர்களுக்குக் கல்வி அளிப்பதற்காக 60 கோடி ரூபாய் செலவு செய்ததாக கணக்கு எழுதியதையும்; போஃபர்ஸ் ஊழலில் ராஜீவ் அடித்த கொள்ளை இரகசிய வங்கி வலைப் பின்னலின் மூலம் ஐரோப்பாவில் சுற்றி வந்ததையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

இலஞ்சம் பெறும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் அம்பலப்படும் அளவிற்குக் கூட, இலஞ்சம் கொடுக்கும் பன்னாட்டு நிறுவனங்களின், தரகு முதலாளிகளின் பெயர்கள் அம்பலத்திற்கு வருவதில்லை. முதலாளித்துவ பத்திரிகைகளுக்கு இவர்கள் மீது இருக்கும் கரிசனம் புரிந்து கொள்ளக் கூடியதுதான். ஆனால், நீதிமன்றங்கள் கூட பன்னாட்டு நிறுவனங்களின், தரகு முதலாளிகளின் முறைகேடுகள் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

பன்னா - முக்தா எண்ணெய் வயல்கள் விற்பனையிலும், என்ரான் மின் நிலையம் அமைக்கப்பட்டதிலும், கோஜெண்டிரிக்ஸ் மின் நிலைய துவக்கத் திட்டத்திலும் நடந்த ஊழல் முறைகேடுகள் பற்றி விசாரித்த இந்திய உச்ச நீதிமன்றம், அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனங்களான என்ரான், கோஜெண்டிரிக்சுக்கும், இந்தியத் தரகு முதலாளி அம்பானிக்கும் சாதகமாகத்தான் தீர்ப்பளித்தது.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் நிதி மூலதனம் மிகச் சுதந்திரமாக இலஞ்சம் கொடுத்து, எந்தவொரு அரசாங்கத்தையும், எந்தவொரு அதிகாரியையும் விலைக்கு வாங்கி விடும் என எழுதினார் லெனின். இலஞ்சம் - ஊழல் - அதிகார முறைகேடுகளை வரலாறு காணாத அளவில் வளர்த்து விடும் பன்னாட்டு நிறுவனங்கள் அம்பலப்படாமல் தப்பித்துக் கொள்வதற்கு, இது தவிர வேறென்ன காரணம் இருந்துவிட முடியும்!

● ரஹீம்

**''பால்கோ'' விற்பனை**

# பா.ஜ.க.வின் துரோகமும் காங்கிரசின் பித்தலாட்டமும்

உங்களுக்குச் சொந்தமான ஒரு வயலை, அல்லது தோட்டத்தை, அல்லது ஏதாவதொரு சொத்தை நீங்கள் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறி, நம்பி ஒருவனிடம் விட்டுச் செல்கின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அவனோ உங்களது சொத்தைப் பாதுகாக்காமல், கூறு போட்டு விற்கத் தொடங்கினால், அந்த நம்பிக்கை துரோகியை சும்மா விட்டு விடுவீர்களா? இப்படிபட்ட அயோக்கிய கும்பலிடம் நமது நாடு சிக்கிக் கொண்டால்.... பொதுத்துறை நிறுவனமான ''பால்கோ'' விற்கப்பட்ட விவகாரம், மேலேயுள்ள கேள்வியைதான் நம் முன் நிறுத்தியுள்ளது.

★ ★ ★

''பால்கோ'' என்று அழைக்கப்படும் பாரத அலுமினிய நிறுவனம், இன்றைய சட்டீஸ்கர் மாநிலத்திலுள்ள கோர்பா எனும் பகுதியில் 1965-ஆம் ஆண்டு மைய அரசினால், பொதுத்துறை நிறுவனமாகத் துவங்கப்பட்டது. அலுமினியத் தகடு உற்பத்தியிலும், விற்பனையிலும் பால்கோ இன்று (இந்தியாவில்) மூன்றாவது இடத்தில் இருக்கிறது. இலாபத்தில் இயங்கி வரும் பொதுத் துறை நிறுவனங்களுள் ''பால்கோ''வும் ஒன்று என்பதால், அந்நிறுவனம் அதிகார வட்டத்தில் ''மினி நவரத்னா'' என்றே அழைக்கப்படுகிறது. கடந்த பனிரெண்டு ஆண்டுகளாகவே இலாபத்தில் இயங்கி வரும் பால்கோ, கடந்த ஆண்டில் 55.89 கோடி ரூபாய் இலாபமீட்டியதாகவும், மைய அரசுக்கு மூலதன ஈவுத் தொகையாக, வரியாக இருநூறு கோடி ரூபாய்க்கு மேல் கொடுத்திருக்கிறது என்றும் ''பால்கோ'' தொழிலாளர்கள் கூறுகின்றனர். இப்படிபட்ட பின்னணி கொண்ட நிறுவனத்தைத் தனியாருக்கு ஏன் தாரைவார்க்க வேண்டும் என்று கேட்டால், ''இதுதாண்டா, இரண்டாம் கட்ட சீர்திருத்தம்'' என்று பதில் சொல்கிறார்கள், பாரதீய ஜனதா ஆட்சியாளர்கள்.

பொதுத்துறை நிறுவனங்களை விரைவாகத் தனியாரிடம் விற்பதற்காக, ''ஒரு பொதுத்துறை நிறுவனத்தின் 26 சதவீதப் பங்குகளை வாங்கிக் கொள்ளும் தனியாரிடம் அப்பொதுத்துறை நிறுவனத்தின் நிர்வாகத்தையே ஒப்படைத்துவிடும்'' அதிரடித் திட்டமொன்றை மைய அரசு அறிவித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. இதன்படி விற்கப்பட்ட இரண்டாவது பெரிய, இலாபமீட்டும் நிறுவனம் பால்கோ. மேலும், ''பால்கோ'' இந்திய இராணுவத்துக்கும், விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கும் அலுமினியத் தகடுகளை வழங்கி வரும் பொறுப்பில் இருந்தாலும், பாதுகாப்பு இரகசியம் பற்றியெல்லாம் அலட்டிக் கொள்ளாமல், ''பால்கோ''வின் 51 சதவீதப் பங்குகளை, ஒரே தவணையில் அனில் அகர்வால் என்ற வெளிநாட்டு இந்தியருக்குச் சொந்தமான ''ஸ்டெர்லைட்'' நிறுவனத்துக்கு 551.5 கோடி ரூபாய்க்கு விற்று, அதன் நிர்வாகத்தையும் ஸ்டெர்லைட்டிடம் மைய அரசு ஒப்படைத்துவிட்டது.

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள துறையின் அமைச்சர் அருண் ஷோரி, ''பால்கோ நிறுவனம் இலாபத்தில் இயங்கி வந்தாலும், அதன் இலாபம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது; மேலும், பால்கோவை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் அரசிடம் மூலதனம் கிடையாது. அதனால்தான் பால்கோவை விற்று விட்டோம்'' என்று கூறி வருகிறார்.

**தொழிலாளர் போராட்டத்தின் மையமாக விளங்கும் பால்கோவின் கோர்பா ஆலை.**



''பால்கோவின் சொத்து மதிப்பை மதிப்பீடு செய்த நிறுவனம், இதன் 51 சதவீதப் பங்குகளை 332 கோடி ரூபாய் முதல் 507 கோடி ரூபாய்க்குள் விற்கலாம் எனப் பரிந்துரை செய்தது. ஸ்டெர்லைட் பால்கோவின் 51 சதவீதப் பங்குகளை 551.5 கோடி ரூபாய்க்கு வாங்க முன் வந்தது. இதைவிட வேறு யாரும் பால்கோவை நல்ல விலைக்கு வாங்க மாட்டார்கள் என்பதால், ஸ்டெர்லைட்டுக்கே விற்று விட்டோம்'' என்றும் கூறியிருக்கிறார், அருண் ஷோரி. அவரின் இந்த வாதங்கள் அனைத்தும் பால்கோ விற்பனையை நியாயப்படுத்துவதற்காகவும், அதில் எந்தவித ஊழலோ, முறைகேடோ நடக்கவில்லை என்று காட்டுவதற்காகவும் வலிந்து உருவாக்கப்பட்டவை.



இந்தியாவில் அலுமினிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முதல் நான்கு இடத்திலுள்ள நிறுவனங்களின் இலாபத்தோடு ஒப்பீடும் பொழுது, பால்கோவின் இலாபம் குறைவானதுதான். பால்கோ முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தைய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வருவதால், அதன் உற்பத்திச் செலவு அதிகமாகி, இலாபம் குறைந்து விடுகிறது. பால்கோவின் இலாபத்தை அதிகரிப்பதற்காக, தொழில்நுட்பத்தை நவீனப்படுத்தவும், அதன் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் பால்கோ நிர்வாகம் முயன்றதற்கு, கடந்த எட்டு ஆண்டுகளாகவே அனுமதிக்காமல் மைய அரசு முட்டுக்கட்டை போட்டு வந்தது. பால்கோவை நவீனப்படுத்த மைய அரசிடம் மூலதனம் இல்லை என்பது இன்னொரு கடைந்தெடுத்த பொய். பால்கோவிடமே கிட்டதட்ட 460 கோடி ரூபாய் பின்புல சேமிப்பாக இருக்கிறது. இந்த மூலதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் பால்கோ நிர்வாகத்திற்கு மைய அரசு அனுமதி அளிக்கவில்லை.




பால்கோவை 'விலைக்கு வாங்கிய' ஸ்டெர்லைட் அதிபர் அனில் அகர்வால் (மேலே); ''ஸ்டெர்லைட்டே, திரும்பிப் போ'' எனப் போராடும் பால்கோ தொழிலாளர்கள்.

மைய அரசு, பால்கோவை பழைய தொழில்நுட்பத்திலேயே முடக்கிப் போட்டதற்குக் காரணம், ஏதாவது ஒரு நொண்டிச் சாக்கு சொல்லி பால்கோவைத் தனியாருக்கு விற்றுவிட வேண்டும் என்பது தவிர வேறில்லை. அலுமினிய உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பிர்லா நிறுவனமும், வேறு சில பன்னாட்டு நிறுவனங்களும் எப்படியாவது பால்கோவை வளைத்துப் போட்டுக் கொள்ளக் காத்துக் கிடந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

பால்கோ நிறுவனத்திற்கு, சட்டீஸ்கர் மாநிலம் கோர்பாவில் அமைந்துள்ள தொழிற்சாலையைத் தவிர்த்து, மேற்கு வங்க மாநிலத்தில் பிதான்பாக் என்ற இடத்திலும் ஒரு தொழிற்சாலை உள்ளது. முன்பு தனியாரின் நிர்வாகத்தில் நலிந்து கிடந்த இந்த ஆலையை விலைக்கு வாங்கி, இலாபத்தோடு நடத்தி வருகிறது, பால்கோ. இந்நிறுவனத்திற்கு சட்டீஸ்கர் மாநிலத்திலும், ஒரிசாவிலும் பல பாக்சைட் சுரங்கங்கள் சொந்தமாக இருப்பதோடு, அதன் கோர்பா ஆலை, மூலப் பொருளான பாக்சைட்டில் இருந்து அலுமினியத்தைப் பிரித்தெடுத்து, அதனை உருக்கி, அலுமினியத் தகடாக்கும் அனைத்து வசதிகளையும் கொண்டது. மேற்கு வங்க ஆலையில் அலுமினியத் தகடுகளும், கம்பிகளும், திருகு சுருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

**பால்கோ விற்பனையில் 100 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாகக் குற்றஞ் சுமத்தும் காங்கிரசு, அதில் உரிய பங்கு தனக்கும் கிடைத்திருந்தால் ''பால்கோ'' விற்பனையை எதிர்த்திருக்காது.**

கோர்பா ஆலைக்குத் தேவையான மின்சாரத்தைத் தயாரிக்க, ஆலையினுள்ளேயே 270 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் உள்ளது. இந்தத் திறன் கொண்ட மின் நிலையத்தைப் புதிதாக அமைக்க வேண்டும் என்றால், அதற்காக மட்டுமே 1000 கோடி ரூபாய் வரை செலவாகும். மேலும், கோர்பா ஆலைத் தொழிலாளர்களின் குடியிருப்பு மட்டும் 15,000 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இந்த நிலங்களைப் பழங்குடி இன மக்கள், ஏக்கர் ஒன்றை வெறும் இருபது ரூபாய்க்கு அரசிடம் விற்றார்கள். இன்று இதனின் மதிப்பு 70 கோடி ரூபாய். சென்னை, மும்பய், புது தில்லி, கல்கத்தா ஆகிய நகரங்களில் பால்கோவின் அலுவலகங்கள் அமைந்துள்ள நிலங்களின் மதிப்பு 100 கோடி ரூபாய். மேலும், கோர்பா ஆலையில் கொட்டிக் கிடக்கும் மூலப் பொருட்கள், தேவையற்ற தளவாடங்களின் மொத்த மதிப்பு 310 கோடி ரூபாய். அலுமினியச் சந்தையில் பால்கோவின் பங்கு, அதன் மூலதன மதிப்பு, இலாப விகிதம், அதனின் இயந்திரத் தளவாடங்கள், நிலத்தின் மதிப்பு - இவை எல்லாவற்றையும் தோராயமாகக் கூட்டினாலே, பால்கோவை 5000 கோடி ரூபாய்க்கு மதிப்பிடலாம்.

ஆனால், அருண் ஷோரியோ, ''பால்கோவின் உண்மையான மதிப்பு 1072 கோடி ரூபாய்தான். நாங்கள் ஜார்டைன் ஃப்ளெமிங் என்ற பன்னாட்டு நிறுவனத்தைக் கொண்டு மதிப்பீடு செய்திருக்கிறோம்'' எனப் புள்ளி விவரங்களைத் தூக்கிப் போடுகிறார். இப்பன்னாட்டு நிறுவனம் பால்கோவின் கடந்த ஆண்டு இலாபத்தை எடுத்துக் கொண்டு, அதன் எதிர்கால இலாபம் எப்படி அமையும் என்பதை அனுமானித்து, அதன் அடிப்படையில் அதன் மதிப்பை தீர்மானித்

தது. இதற்காகவே பால்கோவில் கடந்த ஆண்டு இலாபம் வெறும் 25 கோடி ரூபாயாகக் காட்டப்பட்டது. மேலும், பால்கோவின் இலாபத்தை குறைக்க வேண்டும் என்பதற்காகவே கடந்த ஆண்டு மைய அரசு, தனது மூலதனத்தில் (489 கோடி ரூபாய்) பாதியை (244 கோடி ரூபாய்) திரும்ப எடுத்துக் கொண்டது. பால்கோவை, ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு அடிமாட்டு விலைக்கு விற்க வேண்டும் என்பதற்காகவே பின்னப்பட்ட முதல் மோசடி இது.

இரண்டாவது, பால்கோவை விற்க அரசு விளம்பரம் செய்தவுடன், அதனை வாங்கிக் கொள்ள ''டெண்டர்'' போட்ட நிறுவனங்களுள் முக்கியமானவை இரண்டேதான். ஒன்று, ஸ்டெர்லைட்; மற்றொன்று, இந்தியாவின் அலுமினிய உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் இருக்கும் பிர்லாவுக்குச் சொந்தமான ஹிண்டால்கோ. பிர்லா நிறுவனம் கிட்டதட்ட 250 கோடி ரூபாய்க்கு பால்கோவை விலை பேசியது. பிர்லா நிறுவனம், 'பால்கோ'வை கோட்டை விட்டதற்குக் காரணம், அது, இந்திய அரசுக்குச் சொந்தமான, அலுமினிய உற்பத்தியில் முதல் இடத்தில் இருக்கும் 'நால்கோ' (தேசிய அலுமினிய நிறுவனம்)வின் மீது கண் வைத்திருப்பதுதான். ஸ்டெர்லைட்டுக்கும், பிர்லா நிறுவனத்துக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பு இது. பால்கோவை ஸ்டெர்லைட் கைப்பற்றியதைப் போல, நால்கோவை பிர்லா நிறுவனம் கைப்பற்றிவிட்டால், பின்னர் இந்திய அலுமினியச் சந்தையில் இந்த இரு தனியார் நிறுவனங்கள் வைத்ததுதான் சட்டமாகும்.



**ஸ்டெர்லைட்டிடம் இருந்து ஆலையை மீட்பதற்காகப் பொது மக்களிடம் நிதியுதவி கேட்டு ஊர்வலம் செல்லும் ''பால்கோ''வின் பெண் தொழிலாளர்கள்.**

பால்கோவை வாங்கியிருக்கும் ஸ்டெர்லைட் நிர்வாகம், ஏற்கனவே மெட்ராஸ் அலுமினிய நிறுவனத்தை (மால்கோ) வாங்கி நடத்தி வருகிறது. அலுமினியச் சந்தையில் அதன் பங்கு கிட்டதட்ட 3-லிருந்து 6 சதவீதம்தான். மால்கோவின் விற்பனையை உயர்த்த முடியாத ஸ்டெர்லைட், பால்கோவைக் கைப்பற்றிக் கொண்டதன் மூலம், குறுக்கு வழியில் அலுமினியச் சந்தையில் 20 சதவீத பங்கைப் பிடித்துக் கொண்டுள்ளது. இந்தக் குறுக்குப் புத்திகாரர்கள், ''பால்கோவை உலகத் தரத்துக்கு உயர்த்தப் போவதாக'' நம்மை நம்பச் சொல்கிறார்கள். கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன், வானம் ஏறி வைகுண்டம் போன கதைதான் இது!

ஸ்டெர்லைட்டுக்கும் உலகத் தரத்துக்கும் உள்ள உறவை தூத்துக்குடியில் அமைந்துள்ள அதன் தாமிர உருக்காலையைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம். சிலி நாட்டில் காயலாங்கடைக்குப் போக வேண்டிய நிலையில் இருந்த ஒரு தாமிர ஆலையின் இயந்திரங்களைத் தூக்கிக் கொண்டு வந்து தமிழ்நாட்டில் அமைத்து, அதனை மிக நவீன ஆலையாகக் காட்டித் திரிகிறது ஸ்டெர்லைட். அந்த ஆலையின் கொதிகலன் வெடித்து இரண்டு தொழிலாளர்கள் மாண்டுபோன பொழுது, தனது தொழிற்சாலையில் யாரோ குண்டு வைத்து விட்டதாகப் புரளியைக் கிளப்பிவிட்டது, ஸ்டெர்லைட். தூத்துக்குடியின் சுற்றுச் சூழலையும், கடல் வளத்தையும் நஞ்சாக்கி வரும் ஸ்டெர்லைட் நிறுவனத்திற்குத் தரம் பற்றிப் பேசுவதற்கு எந்தத் தகுதியும் கிடையாது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரை தொலைபேசி நிறுவனத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் தொலைபேசிக் கம்பிகளை விற்றுவந்த ஸ்டெர்லைட் நிறுவனத்தின் இன்றைய சொத்து மதிப்பு 1695 கோடி ரூபாய். பத்தாண்டுகளுக்கு முன்பு 10.29 கோடி ரூபாயாக இருந்த ஸ்டெர்லைட்டின் இலாபம், இன்று 337.63 கோடி ரூபாய். ஸ்டெர்லைட்டின் இந்தக் கிடுகிடு வளர்ச்சி பற்றி விசாரணை நடத்தினால் பல மர்மங்கள் உடையலாம். குறிப்பாக, இலாபத்துடன் இயங்கி வரும் நிறுவங்களை அது திடீரெனக் கைப்பற்றிவிடும் வியாபாரத் 'திறமை' உடைபடலாம்.

★ ★ ★

'பால்கோ'வின் பங்குகள் ஸ்டெர்லைட்டுக்கு விற்கப்பட்டதை எதிர்த்து, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானம் தோல்வியடைந்த அன்றே, பால்கோ தொழிலாளர்கள்,வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். பால்கோவின் உயர் அதிகாரிகள் தவிர, கிட்டதட்ட 6500 தொழிலாளர்கள், கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடந்து வரும் வேலை நிறுத்தத்தில் குடும்பம் குடும்பமாக பங்கெடுத்து வருகின்றனர். இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை சி.ஐ.டி.யு., 'ஏ.ஐ.டி.யு.சி., ஐ.என்.டி.யு.சி., பி.எம்.எஸ்., உள்ளிட்டு ஏழு தொழிற்சங்கங்கள் இணைந்து, ''பால்கோ பாதுகாப்பு இயக்கம்'' எனும் அமைப்பை உருவாக்கி நடத்தி வருகின்றன. வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கிய நாளன்றே, கோர்பா பகுதியைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள், பால்கோ தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் தீப்பந்தப் போராட்டம் நடத்தினர். கோர்பா பகுதியைச் சேர்ந்த அரசு ஊழியர்கள், வியாபாரிகள், சிறுதொழில் அதிபர்கள் எனப் பலதரப்பட்ட மக்களும், பால்கோ தனியாருக்கு விற்கப்பட்டதை எதிர்ப்பதால், அப்பகுதியில் ''தனியார்மய எதிர்ப்பு முன்னணி'' கட்டப்பட்டுள்ளது. பா.ஜ.க.வைத் தவிர்த்த பிற கட்சிகள் இம்முன்னணிக்குத் தலைமையேற்றுள்ளன.

பால்கோவின் நிர்வாகத்தை கடந்த மார்ச் 2 அன்றே பா.ஜ.க. கூட்டணி அரசு ஸ்டெர்லைட்டிடம் ஒப்படைத்துவிட்டாலும், தொழிலாளர்களின் போராட்டம் காரணமாக, ஸ்டெர்லைட்டால் தொழிற்சாலை அமைந்துள்ள பால்கோ நகருக்குள் மட்டுமல்ல, கோர்பா நகருக்குள்ளேயும் கூட நுழைய முடியவில்லை. மார்ச் 4-ந் தேதியன்று, சட்டீஸ்கர் தலைநகர் ராய்பூர் விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய பால்கோவின் காரினுள் ஸ்டெர்லைட் அதிகாரிகள் இருக்கலாம் எனச் சந்தேகப்பட்ட இளைஞர்கள், அக்காரை வழிமறித்துத் திருப்பியனுப்பினர்.

சட்டீஸ்கர் மாநிலமெங்குமே, போராடும் தொழிலாளர்களுக்கு ஆதரவு பெருகுவதைக் கண்ட பா.ஜ.க. அரசும், ஸ்டெர்லைட்டும் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, ''பால்கோ ஆலையினுள் உள்ள உலை குளிர்ந்து போனால், 200 கோடி நட்டமேற்படும்; அதற்குத் தொழிலாளர்கள்தான் பொறுப்பு'' என்று அவதூறை நாடெங்கும் பரப்பத் தொடங்கின; இரகசியமாகக் கதவடைப்பு செய்துவிட்டு, அச்சதியை நிறை

www.padippakam.com

வேற்றவும் தயாராயின. தொழிலாளர்கள் இச்சதியை முறியடிக்கும் வண்ணம் 60 தொழிலாளர்களை ஆலைக்குள் அனுப்பி, உலை குளிர்ந்து போகாத வண்ணம் தொடர்ந்து கண்காணிக்கத் தொடங்கினர். ''எங்களுக்கு உணவளிக்கும் கைகள் நாச மாக்கப்படுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்'' என எச்சரிக்கவும் செய்தனர்.

பால்கோ விற்கப்பட்டதை எதிர்த்து இப்படி ஒன்றுபட்ட போராட்டம் வெடிக்கும் என எதிர்பாராத பா.ஜ.க., போராடும் தொழி லாளர்களை குண்டர்கள் என்றும், சமூ கத்தின் சட்டம் - ஒழுங்கைக் கெடுக்கிறார்கள் என்றும் அவதூறுகளை அள்ளி வீசி திட்டித் தீர்த்தது. பா.ஜ.க. கூட்டணி அரசு, ஸ்டெர்லைட் முதலாளிக்காக, உச்சநீதி மன்றத்திடம் மனு கொடுத்து, தொழிலாளர் களின் வேலை நிறுத்தப் போராட்டத்தைத் தடை செய்யக் கோரியது. உச்சநீதி மன்றம் ''வேலைக்குப் போக விரும்பும் தொழிலா ளர்களை யாரும் தடுத்தால், நடப்பதே வேறு'' என்று தொழிலாளர்களை மிரட்டி யது. இதைத் தொடர்ந்து கோர்பா பகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர், வேலைக் குப் போக விரும்பும் தொழிலாளர்களை போலீசு பாதுகாப்போடு அனுப்பி வைக்க, வேன்களை ஏற்பாடு செய்து கொண்டு வந்தார். அவரைத் தொழிலாளர்கள் அடித்துத் துரத்தியதன் மூலம் உச்சநீதி மன்றத்தின் முகத்திலும் கரியைப் பூசினர்.

பா.ஜ.க. கூட்டணி அரசு ஸ்டெர்லைட் முதலாளிக்காக உச்சநீதி மன்றப் படிக்கட்டு களில் மட்டும் ஏறி இறங்கவில்லை. அர சியல் சாசன சட்டத்தையும் வளைத்திருக்கி றது. அரசியல் சாசனத்தின் ஐந்தாவது அட்ட வணையில், ''பழங்குடியின மக்களுக்குச் சொந்தமான நிலங்களைத் தனியாருக்கு விற்கக் கூடாது'' எனக் கூறப்பட்டிருப்பதை அப்பட்டமாகவே மீறி, ''பால்கோ''வை ஸ்டெர்லைட்டிடம் விற்றுள்ளது பா.ஜ.க. கூட்டணி அரசு.

நல்ல இலாபத்துடன் இயங்கும் பெரிய நிறுவனங்கள்தான், சிறிய நிறுவனங்களை விழுங்கும். இதுதான் முதலாளித்துவ பொருளாதார நடைமுறை. ஆனால், பால்கோ விவகாரத்திலோ, பா.ஜ.க. கூட்டணி அரசு நாணயமான முதலாளித் துவவாதிகளைப் போலக் கூட நடக்காமல், நாணயமற்ற தரகனாக நடந்து கொண்டுள்ளது.

★ ★ ★

கடந்த பத்தாண்டுகளில் எத்தனையோ பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன. ''மாடர்ன் ஃபுட்ஸ்'' நிறு வனம் லீவர் நிறுவனத்திற்குத் தாரை வார்க்கப்பட்டதை எதிர்த்து அத்தொழிலா ளர்கள் ஒரு சிறு முணுமுணுப்பைக் கூட வெளியிடவில்லை. சேலம் உருக்கா லையைத் தனியாருக்கு விற்கப் போவதாக அரசு எடுத்துள்ள முடிவை எதிர்த்து, அத்தொழிலாளர்கள் மனிதச் சங்கலி

**தாராளமயத்தைத் தொடங்கி வைத்து ஆதரித்து வரும் காங்கிரசு கட்சி, தாராளமய எதிர்ப் பிலும் ஒட்டிக் கொண்டு விடு வதற்கு, 'மார்க்சிஸ்டு'கள் மதவாத எதிர்ப்பு என்ற போர்வையில் காங்கிரசைத் தூக்கிக் கொண்டு திரிவதுதான் காரணம்.**

போராட்டம் நடத்திவிட்டு முடங்கிப் போயினர். இந்த தைரியத்தில்தான், பால்கோவை ஒரே மாதத்திற்குள் ஸ்டெர் லைட்டுக்கு விற்றது, பா.ஜ.க. கூட்டணி அரசு; அதை எதிர்த்துத் தொழிலாளர்கள் நடத்திவரும் போராட்டம், ஆளுங்கும்ப லுக்கு எதிர்பாராத அச்சுறுத்தல்தான். பால்கோவிற்கு அடுத்து, வீ.எஸ்.என்.எல்., இந்தியன் ஏர்லைன்ஸ் நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றுவிட முடிவெடுக்கப்பட் டுள்ள நிலையில், அந்நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு இப்போராட்டம் நல்ல முன்னுதாரணமாகும்.

6500 தொழிலாளர்கள், குடும்பத் தோடும், பகுதி மக்களின் ஆதரவோடும் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக நடத்தி வரும் இப்போராட்டத்தின் முடிவு எப்படி அமையும்? பால்கோ தொழிலாளர்களுக்கு இது வாழ்க்கை பிரச்சனை. அதனால் அவர்கள் இறுதிவரைப் போராடக்கூடத் தயாராக இருக்கலாம். ஆனால், இப்போராட் டத்திற்குத் தலைமையேற்றுள்ள ஓட்டுக் கட்சிகளை நம்ப முடியுமா?

எந்த பா.ஜ.க. ஆட்சி பால்கோவை ஸ்டெர்லைட்டுக்கு விற்றதோ, அதே பா.ஜ.க.வின் தொழிற்சங்கமான பி.எம்.எஸ்., தொழிலாளர்களின் போராட் டத்தை ஆதரிப்பதாகக் கூறுகிறது. பா.ஜ.க.வின் இந்த குள்ள நரித்தனத்தை பால்கோ தொழிலாளர்கள் புரிந்து கொள்ள வில்லை என்பதோடு, 'மார்க்சிஸ்டு' கட்சியின் தொழிற்சங்கமான சி.ஐ.டி.யு. கூட அம்பலப்படுத்த முன்வரவில்லை.

இப்போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து வரும் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த சட்டீஸ்கர் மாநில முதல்வர் அஜித் ஜோகி, ''பால்கோவை வாங்கியுள்ளஸ்டெர் லைட்டுக்கு சட்டீஸ்கர் மாநிலச் சுரங்கங் களில் இருந்து அலுமினிய மூலப்பொரு ளான பாக்சைட்டை வழங்க மாட்டோம்'' என வீராப்புப் பேசினார். ஆனால், உச்சநீதி மன்றம் பால்கோவிற்கு தண்ணீர் வழங்கு வதைக் கூட நிறுத்தக் கூடாது என உத்தரவு போட்டவுடனேயே பணிந்து போனார்.

மேலும், ''நாங்கள் ஒரு போதும் தனி யார்மயமாக்கலை எதிர்க்க மாட்டோம்; நாங்கள் பொருளாதார சீர்திருத்தத்தை ஆத ரிப்பவர்கள்தான். ஆனால், காங்கிரசின் வழியில் பால்கோ நிறுவனம் தனியார்மய மாக்கப்படவில்லை'' என்கிறார். அதாவது, காங்கிரசு விரும்பியபடி பா.ஜ.க. அரசு பால்கோவைத் தனியாருக்கு விற்றிருந்தால், எதிர்த்திருக்க மாட்டோம் என்கிறார். இதை வேறு மாதிரியாகச் சொன்னால், பால்கோ விற்பனையில் 100 கோடி ரூபாய் அள விற்கு ஊழல் நடந்திருப்பதாகக் குற்றஞ் சுமத்துகிறாரே அஜித் ஜோகி, அதில் உரிய பங்கு காங்கிரசு கட்சிக்கும் கிடைத்தி ருந்தால், எதிர்த்திருக்க மாட்டார்கள்.

பால்கோ நிறுவனத் தொழிலாளர்கள், பால்கோ, பொதுத்துறை நிறுவனமாகத்தான் இயங்க வேண்டும் எனக் கோரிப் போராடி வருகிறார்கள். ஆனால், போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் ஐ.என்.டி.யு.சி., ''ஸ்டெர்லைட் தன் கைவசமுள்ள 51 சதவீ தப் பங்குகளை 40 சதவீதமாக், அல்லது 49 சதவீதமாகக் குறைத்துக் கொண்டால்கூட, நாங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விடுவோம்'' எனக் கூறி, போராட்டத்திற்கு குழிபறிக்கும் வேலையில் இறங்கியிருக்கிறது.

நமது நாட்டில் தனியார்மயம் - தாராள மயத்தைத் தொடங்கி வைத்த காங்கிரசு கட்சி, தாராளமய எதிர்ப்பிலும் ஒட்டிக் கொண்டு விடுவதற்குக் காரணமே, 'மார்க்சிஸ்டு'கள் மதவாத எதிர்ப்பு என்ற போர்வையில் காங்கிரசுக்கு முட்டுக் கொடுத்து வருவதுதான். மேலும், 'மார்க்சிஸ்டு'களும், தாங்கள் ஆளும் மாநி லங்களில் தாராளமயத்தை நடைமுறைப்ப டுத்திக் கொண்டே, தாராளமயத்தை எதிர்ப் பதாக இரட்டை வேடம் போட்டு வருகின் றனர். பால்கோ விற்பனையை எதிர்க்கும் எல்லா ஓட்டுக் கட்சிகளும், அவ்விற் பனையில் ஊழல் நடந்துவிட்டதாகக் கூறி எதிர்க்கிறார்களே தவிர, தாராளமயம் என்பதே மக்கள் விரோதமானது; அதிகார முறைகேடுகளும், ஊழலும் நிறைந்ததுதான் என்ற அடிப்படையில் எதிர்க்கவில்லை.

இந்நிலையில் பால்கோ தொழிலா ளர்கள் தாராளமயத்தை ஆதரித்து வரும் காங்கிரசு, பா.ஜ.க. தலைமையில் உள்ள துரோக தொழிற்சங்கத் தலைமையையும், இத்துரோகிகளோடு சமரசம் செய்து கொண்டு வரும் இடது, வலது போலிகளின் தொழிற்சங்கத் தலைமையையும் புறக் கணிக்க வேண்டும். தாராளமயம் - தனியார் மயம் எனும் பெயரில் நாடு மறுகாலனியாக் கப்படுவதன் அடிப்படையில்தான் பால்கோ, வெளிநாட்டு இந்தியருக்குச் சொந்தமான ஸ்டெர்லைட் நிறுவனத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இதனைப் புரிந்து கொண்டு, ஓட்டுக் கட்சிகளைப் புறக் கணித்து, புரட்சிகர அமைப்புகளின் தலைமையில் பரந்துபட்ட மக்களின் ஆதர வோடு போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதன் மூலம் மட்டுமே வெற்றியை ஈட்ட முடியும்.

● செல்வம்

படிப்பகம்

www.padippakam.com



## கிரிமினலுக்கு உதவும் நாடாளுமன்றக் கவசம்

பீகாரிலுள்ள சிவான் தொகுதி நாளொரு கொலைக்கும், பொழுதொரு கடத்தலுக்கும் 'புகழ்'பெற்ற இடம். அதன் சூத்திரதாரியாக இருப்பவர் ராஷ்டிரிய ஜனதா தள நாடாளுமன்ற உறுப்பினர் முகமது ஷகாபுதின். போலீசு பதிவேடுகளில் ஷகாபுதின் மீது முப்பதுக்கும் மேற்பட்ட கொலை, கடத்தல் தொடர்பான கிரிமினல் வழக்குகள் இருந்தபோதும் அவரையோ, அவரது குண்டர் படையையோ யாரும் எதுவும் செய்ய முடியாத அளவுக்கு அரசியல் செல்வாக்கும் பெற்றிருக்கிறார். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிடக் கூட யாரும் முன்வரவில்லை. இவர் மீது நடவடிக்கை எடுக்க முயற்சி செய்த போலீசு கண்காணிப்பாளர் எஸ்.கே. சிங்கால் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டதும், சென்ற ஜனவரி மாதம் பொது மக்கள் முன்னிலையிலேயே போலீசு உதவி ஆய்வாளர் அஸ்வினி குமார் தாக்கப்பட்டதும் ஷகாபுதினின் 'பலத்'துக்கு ஒரு சில உதாரணங்கள்.

சென்ற மாதம் பீகாரில் நடந்த உயர்நிலைப் பள்ளி அரசு பொதுத் தேர்வு மையத்தில் தனக்குத் தெரிந்த மாணவர்கள் தேர்வெழுத வசதியாக ஷகாபுதினின் ஆட்கள் 'மேற்பார்வையிட'ச் சென்றனர். அங்கு பணியிலிருந்த போலீசு அதிகாரி சஞ்சீவ் குமார் அவர்களைத் தடுக்க முயற்சி செய்ததால், அவரை நையப் புடைத்தனர். ஏற்கனவே நடந்துள்ள பல்வேறு தாக்குதல்களால் கசப்போடு இருந்த போலீசுத் துறை, இச்சம்பவத்தால் மேலும் ஆத்திரமடைந்தது. மாவட்ட நீதிபதியின் அனுமதியோடு எஸ்.பி. பாச்சுசிங் மீனா தலைமையில் பிரதாப்பூரிலுள்ள ஷகாபுதினின் வீட்டைச் சுற்றி வளைத்தது. தொடர்ந்து ஆறு மணி நேரம் நடந்த துப்பாக்கி சண்டையில் இரண்டு போலீசு உட்பட பதினான்கு பேர் இறந்தனர். ஷகாபுதினின் வீட்டிலிருந்து ஒரு ஏ.கே. 47 இரக துப்பாக்கியும், 9 கைத்துப்பாக்கிகளும், வெடி மருந்துகளும் கைப்பற்றப்பட்டன.



**ஆயுதம் ஏந்திய அடியாள் படையுடன் சிவான் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் ஷகாபுதின்: கிரிமினல் ராஜ்ஜியம்.**

இச்சம்பவத்துக்குப் பிறகாவது ஷகாபுதினின் கொட்டம் அடங்கிவிடும் என்று எதிர்பார்த்தால், அதுதான் நடக்கவில்லை. அத்துப்பாக்கி சண்டையில் பங்கேற்ற போலீசார், உயரதிகாரி பாச்சுசிங் மீனா, மாவட்ட நீதிபதி அனைவரும் மறுநாளே மாநில அரசால் இடமாற்றம் செய்யப்பட்டனர். சம்பவத்தன்று தலைமறைவான ஷகாபுதின் ஒரு வாரம் கழித்து, ''பாச்சுசிங் மீனா எங்கே போனாலும் அவரைக் கொன்றே தீருவேன்'' என்று வெளிப்படையாகவே சபதமிட்டுள்ளார்.

ஷகாபுதின் பின்னால் சில சிறுபான்மை முஸ்லிம் சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பதால் அவரைப் பகைத்துக் கொள்ள எந்த ஓட்டுக் கட்சியும் தயாராக இல்லை. ஆளும் ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தலைவரான லல்லு பிரசாத் யாதவ், ''ஷகாபுதின் ஒரு மதிப்புக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்; அவரால் ராஷ்டிரிய ஜனதாதளம் பெருமிதம் கொள்கிறது'' என்று நற்சான்றிதழ் வழங்கியுள்ளார். அதோடு ஓர் அமைச்சர் குழுவை ஷகாபுதினைச் சமாதானப்படுத்த அனுப்பினார். சிவான் தொகுதி மக்கள் ஒன்று திரண்டு, அக்குழுவையும் லல்லுவையும் எதிர்த்து முழக்கமிட்டு விரட்டியடித்தனர். ஆனாலும், அமைச்சர் குழு துப்பாக்கிச் சண்டையில் வீர மரணம் அடைந்த ரவுடிகளின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்துள்ளது.

ஒருபுறம் காங்கிரசு, பா.ஜ.க. கும்பலின் ஆதரவு பெற்ற ரன்வீர் சேனா குண்டர்படை; இன்னொருபுறம் லல்லுவின் ஆசி பெற்ற ஷகாபுதின் போன்ற கிரிமினல் கும்பல் என பீகார் மாநிலமே அரசியல் கிரிமினல்கள் பிடியில் சிக்கித் தவிக்கும்பொழுது, அங்கே எந்தவொரு ஓட்டுக் கட்சிக்கும் சட்டம் - ஒழுங்குச் சமூக நீதி பற்றிப் பேசும் தகுதியே கிடையாது.

## இந்து மத வெறியர்களின் காட்டுமிராண்டித்தனம்

ஆப்கானிஸ்தானிலுள்ள தாலிபான் அரசு புத்தர் சிலைகளை இடிக்க உத்தரவிட்டதும், அதைக் காட்டுமிராண்டித்தனம் என்று கண்டித்திருக்கிறார் பிரதமர் வாஜ்பாய். பஜ்ரங் தள், விசுவ இந்து பரிஷத் முதலிய இந்து மதவெறி அமைப்புகள் ஒருபடி மேலே போய் தாலிபான் அரசைக் கண்டித்துப் பேரணி நடத்தப் போவதாக அறிவித்தன. டெல்லியில் மார்ச் ஐந்தாம் தேதி நடந்த அப்பேரணியில் முஸ்லீம்களின் புனித நூலான குரானைத் தீயிட்டுக் கொளுத்தின.

இச்சம்பவத்தின் எதிர்வினை கான்பூரில் அரங்கேறத் தொடங்கியது. குரானை எரிக்கும் புகைப்படங்கள் இணையத்திலிருந்து (இண்டர்நெட்) பிரதியெடுக்கப்பட்டு முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பகுதிகளில் சுவரொட்டிகளாக ஒட்டப்பட்டன. அதோடு 'இந்திய முஸ்லீம் மாணவர் இயக்கம்' என்ற முஸ்லீம் மத அடிப்படைவாத அமைப்பு அப்படங்களோடு 'புனிதப் போர்' (ஜிகாத்) முழக்கங்களை இணைத்து நகரெங்கும் ஆயிரக்கணக்கில் விநியோகித்தது.

இதனையொட்டி நகரின் அனைத்து மசூதிகளிலும் உள்ள முஸ்லீம்கள் கறுப்புத் துணியை அடையாளமாகக் குத்திக் கொண்டு ஒரு ஊர்வலம் நடத்தித் தங்கள் எதிர்ப்பைக் காட்டத் தீர்மானித்தனர். கடந்த மார்ச் பதினாறாம் தேதி வெள்ளிக்கிழமை வழிபாடு முடிந்த கையோடு தொடங்கிய அவ்வூர்வலத்தில் வாஜ்பாயின் உருவ பொம்மையை எரிக்க முயற்சி செய்தனர்.

குரானை எரித்ததை வேடிக்கை பார்த்த போலீசு, அதை எதிர்த்துத் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தும் மிகக் குறைந்த ஜனநாயக உரிமையைக் கூடத் தராமல் ஒடுக்க தடியடி நடத்த தொடங்கியது. அதன் விளைவாக எதிர்த் தரப்பிலிருந்து சோடா புட்டிகள், கற்களும் வீசப்பட்டன. கடைகள் எரிக்கப்பட்டன. இச்சம்பவத்தை உள்ளூர் தொலைக்காட்சி படம் பிடித்து ஒளிபரப்பியதும் கான்பூர் மூன்று நாட்களாய் ரணகளமானது. இதில் கூடுதல் மாவட்ட நீதிபதி உட்பட 19 பேர் உயிரிழந்தனர்.

குரானை எரித்தவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முஸ்லீம் மதத் தலைவர்கள் பிரதமரை நேரில் பார்த்துக் கேட்டுக் கொண்ட பிறகும், பெயருக்கு இரண்டு பஜ்ரங் தள் உறுப்பினர்களைக் கைது செய்ததோடு முடித்துக் கொண்டது டெல்லி போலீசு. அதேசமயம், கான்பூரில் 1700-க்கும் மேற்பட்ட போலீசு மற்றும் அதிரடிப் படையினரைக் குவித்து, அணிவகுப்பு நடத்திப் பீதியைக் கட்டவிழ்த்து விட்டது அரசு.

தாலிபான் அரசின் காட்டுமிராண்டித்தனம் கண்டிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், இந்து மதவெறி அமைப்புகளின் பாபர் மசூதி இடிப்பும், குரான் எதிர்ப்பும் அக்காட்டுமிராண்டித்தனத்துக்குச் சற்றும் குறைந்ததல்ல. குரான் எரிப்பு இந்து மதவெறியை ஜனநாயக நடவடிக்கையாக, தேசபக்த நடவடிக்கையாகக் காட்டும் பா.ஜ.க. அரசு, அதன் எதிர் விளைவாக நடந்த கான்பூர் சம்பவத்தைச் சிறுபான்மையினர் செய்த கலவரமாகவும், போலீசின் ஒடுக்குமுறையைக் கலகத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாகவும் சித்தரிக்கிறது. கண்ணெதிரே நடக்கும் இரண்டு சம்பவங்களில் பாரபட்சமாகவும், திரித்தும் புரட்டியும், உண்மைகளை இருட்டடிப்புச் செய்யும் இந்து மதவெறிக் காட்டுமிராண்டிகளுக்கு தாலிபான் அரசைக் கண்டிக்க என்ன அருகதை இருக்கிறது?

## நெசவாளருக்கு மரணக்குழி இராமனுக்குப் பட்டுத் துணி

ஆந்திர மாநிலம், கரீம்நகர் மாவட்டத்தில் கைத்தறி - விசைத்தறித் தொழிலுக்குப் பேர்போன சிர்சில்லா நகரத்தில் இன்று எங்கும் மரண ஓலம் எதிரொலிக்கிறது. கடந்த ஏப்ரல் முதல் நாளன்று மைய வர்த்தக அமைச்சர் முரசொலி மாறன், ஜவுளித் துணிகள் உள்ளிட்டு 715 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கி, அந்நிய ஏகாதிபத்திய கொள்ளைக்குக் கதவுகளை அகலத் திறந்து விட்டார். அதேநாளில், சிர்சில்லாவின் ராஜீவ் நகரைச் சேர்ந்த கிஷ்டையா என்ற விசைத்தறி தொழிலாளி, இனிமேலும் பட்டினிக் கொடுமையைத் தாங்க முடியாமல் தனது வயதான பெற்றோர், இளங்குழந்தைகளுடன் சேர்ந்து பூச்சி மருந்து குடித்துக் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்டார். அடுத்த நான்கு நாட்களுக்குள் சிர்சில்லாவின் காந்தி நகரைச் சேர்ந்த விசுவநாதம் என்ற விசைத்தறி தொழிலாளி, கடன் சுமை தாளாமல் உடலெங்கும் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கொண்டு மாண்டார்.



குரானை எரித்த இந்து மதவெறிக் கும்பலை எதிர்த்து ஊர்வலம் நடத்திய முசுலீம்கள் மீது ஏவி விடப்பட்ட அரசு பயங்கரவாதம்.

இவ்வாண்டு ஜனவரியிலிருந்து இதுவரை 32 விசைத்தறி தொழிலாளர்கள் சிர்சில்லா நகரில் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். கடந்த ஆண்டு ஜனவரியிலிருந்து இதுவரை தற்கொலை செய்து கொண்டோரின் எண்ணிக்கை 300-க்கும் மேலாகும் என்று வலது கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் ஆந்திர சட்டமன்றத்தில் தெரிவித்துள்ளனர். அடுத்தடுத்துத் தொடரும் தற்கொலைகளால் அதிர்ச்சியும் பீதியும் அடைந்த சிர்சில்லா நகர மக்கள், நெசவாளர்களின் துயர் துடைக்க வக்கற்ற சந்திரபாபு நாயுடு அரசாங்கத்தைக் கண்டித்து கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதியன்று கடையடைப்பு போராட்டத்தை நடத்தினர். ஜவுளித்துறை அமைச்சர் பூமண்ணாவை "கெரோ" செய்து விரட்டியடித்துள்ளனர்.

கடந்த பத்தாண்டுகளாகப் பின்பற்றப்படும் புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாக கைத்தறியும் விசைத்தறியும் நலிவடைந்து பாதாளத்தில் தள்ளப்பட்டுவிட்டது. பஞ்சு, நூல், சாய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைக் கேடுகெட்ட ஆட்சியாளர்கள் தொடர்ந்து நீக்கியதால், நூல் விலையேற்றமும் தட்டுப்பாடும் பெருகி நெருக்கடி முற்றியது. இது மட்டுமின்றி, கைத்தறி - விசைத்தறிகளுக்கான மானியங்களைக் குறைத்தும், மின்சார சலுகைக் கட்டணத்தை ரத்து செய்தும், கைத்தறி - விசைத்தறிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஜவுளி வகைகளை நவீன மில்களுக்கு ஒதுக்கியும் ஆட்சியாளர்கள் தனியார்மய - தாராளமயக் கொள்கையைத் தீவிரப்படுத்தினர்.

இந்நிலையில் 1998-ஆம் ஆண்டில் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் கைத்தறி - விசைத்தறி துணிகளின் ஏற்றுமதியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, தறிக்கூடங்கள் முடங்கிப் போயின. நலிவடைந்த கைத்தறித் துறையை ஆராய்ந்த சத்யம் கமிட்டியைப் போலவே, விசைத்தறித் துறையைப் பரிசீலித்த நரசிம்மம் கமிட்டியும் நெசவாளர்களுக்கான எல்லா மானியங்களையும் சலுகைகளையும் ரத்து செய்யுமாறு அரசுக்குப் பரிந்துரைத்தது. உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, உள்நாட்டில் மட்டுமின்றி உலகச் சந்தையிலும் போட்டியிட நெசவாளர்கள் தயாராக வேண்டும் என்று உபதேசித்து, அந்நிய ஜவுளி இறக்குமதிக்குத் தாராள அனுமதி அளித்தது.

இக்கொடிய தாக்குதலின் விளைவுதான் சிர்சில்லாவில் தொடரும் தற்கொலைகள்.

சிர்சில்லா நகரமே வேதனையில் தத்தளித்துக் கொண்டிருக்கும்போது, "ஹைடெக்" முதல்வரான சந்திரபாபு பாதிக்கப்பட்ட நெசவாளர் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லக்கூட முன்வரவில்லை. நெசவாளர்களின் தற்கொலைச் சாவுகளைத் தடுக்கவோ, கைத்தறி - விசைத்தறித் துறையை உலகமயத் தாக்குதலிலிருந்து பாதுகாக்கவோ அவர் உருப்படியாக எந்த நடவடிக்கையும் எடுக்கவுமில்லை. தற்கொலைச் சாவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, அவர் பத்ராசலத்தில் உள்ள கோயிலில் சீதாராம கல்யாணத்தை தம்பதி சமேதராக தலைமையேற்று நடத்தியதோடு, கடவுள் ராமனுக்கும் சீதைக்கும் உயர்ரக பட்டாடை அணிவித்து அருள் வேண்டினார். பத்ராசலத்தை பக்தர்கள் திரளும் "மாதிரி புனிதத்தலமாக" மாற்றுவேன் என்று சூளுரைத்த அவர், இச்சிறுநகரை அழகுபடுத்தி, இராமாயணக் காட்சிப் பூங்கா, சுற்றுலாக் குடில், ரயில் பாதை இணைப்பு வசதி முதலானவற்றுக்கு உடனடி ஏற்பாடுகளைச் செய்ய உத்தரவிட்டுள்ளார். பத்ராசலம் மட்டுமின்றி மாநிலத்தின் அனைத்துக் கோயில்களையும் புனரமைத்து, சாலை - குடிநீர் - பேருந்து வசதிகளை மேம்படுத்தப் போவதாக உறுதியளித்துள்ளார்.

தனியார்மய - தாராளமய - உலகமயக் கொள்கையை விசுவாசமாகச் செயல்படுத்திவரும் சந்திரபாபுவை "அற்புத முதல்வர்" என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் புகழ் பாடுகின்றன. நெசவாளர்களை மரணக் குழியில் தள்ளிவிட்டு, கடவுளுக்குப் பட்டாடை அணிவித்து மகிழும் அவரை வக்கிரமான பாசிஸ்டு என்று ஆந்திர மக்கள் வெறுத்து ஒதுக்கி வருகின்றனர்.

## பதவி உயர்வுக்காகப் பயங்கரவாதப் படுகொலைகள்

தமிழகத்தில் வீரப்ப வேட்டை என்ற பெயரில் அப்பாவி மக்களை வதைத்து வருகிறது அதிரடிப்படை. உத்திரப் பிரதேசத்

படிப்பகம்

www.padippakam.com



திலோ நக்சல்பாரி வேட்டை என்ற பெயரில் 16 அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக் கொன்று வெறியாட்டம் போட்டுள்ளது, உ.பி. மாநிலப் போலீசுப் படை.

இந்து வெறியர்கள் ஆளும் உ.பி.யின் வாரணாசி மாவட்டத்தில் மீர்சாபூர் அருகிலுள்ளது பவானிபூர் எனும் கிராமம். தாழ்த்தப்பட்டோரும் ''கோல்'' பழங்குடியினரும் நிறைந்துள்ள கிராமம் அது. கடந்த மார்ச் 19-ந் தேதியன்று 150-க்கும் மேற்பட்ட போலீசார் அக்கிராமத்தைச் சூழ்ந்து கொண்டு கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதைக் கண்டு பீதியடைந்து ஓடி ஒளிந்தவர்களைச் சரணடையுமாறு உத்தரவிட்டனர். பயந்து நடுங்கியபடியே கையை உயர்த்திக் கொண்டு வெளியே வந்த தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் 16 பேரை கேள்வி முறையின்றிச் சுட்டுக் கொன்றனர். இக்கொலை வெறியாட்டத்தை நேரில் கண்ட பவானிபூர் கிராம மக்கள் அந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளவேயில்லை.

பவானிபூரில் அன்று திருமண நிகழ்ச்சியொன்று நடந்து கொண்டிருந்தது. அத்திருமணத்திற்கு வெளியூர்களிலிருந்து உறவினர்களும் நண்பர்களும் திரண்டிருந்தனர். ஆனால், அவர்கள் நக்சல்பாரிகள் என்றும் இரகசியமாகக் கூடி சதித் திட்டம் போடுகிறார்கள் என்றும் தமக்குத் தகவல் வந்ததாகக் கூறிக் கொண்டு, திருமணத்திற்குத் திரண்டவர்கள் மீது பயங்கரவாதக் கொலை வெறியாட்டத்தை போலீசு குண்டர்கள் நடத்தியுள்ளனர்.

திருமண நிகழ்ச்சிக்கு வந்த 12 வயதான கல்லூ என்ற சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தபோது, அவனை சுற்றி வளைத்தது போலீசு. அவனது பாட்டி போலீசாரின் காலில் விழுந்து அவன் ஒரு அப்பாவி, விட்டு விடுங்கள் என்று கதறிய போதிலும் வெறிபிடித்த போலீசார் அதை ஒரு பொருட்டாக மதிக்காமல், அச்சிறுவனை ஓட விட்டு நாயைப் போல விரட்டிச் சுட்டுக் கொன்றனர். அச்சிறுவன் உள்ளிட்டு 16 பேரைச் சுட்டுக் கொன்ற கொலைகார போலீசார், இவர்கள் அனைவரும் மாவோயிசக் கம்யூனிச மையம் எனும் நக்சல்பாரிக் குழுவின் வட்டார ஆயுதப் படைத் தளபதிகள் என்று கதை கட்டினர். அதிலும் கொல்லப்பட்டவர்களில் 4 பேரை மட்டுமே தீவிரவாதிகள் என்று பொய்க் குற்றம் சாட்ட முடிந்ததே தவிர, மீதி 12 பேர் என்ன குற்றம் செய்தார்கள் என்று போலீசாரால் இன்றுவரை விளக்கமளிக்க முடியவில்லை.

''பீகாரிலிருந்து ஊடுருவும் நக்சல்பாரி தீவிரவாதத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டோம்'' என்று கொக்கரிக்கும் போலீசார், ''இப்போது நாங்கள் விரைவான பதவி உயர்வுக்காகக் காத்திருக்கிறோம்'' என்கின்றனர். போலீசாரின் இந்த வாக்குமூலமே, இது பதவி உயர்வுக்கான எதிர்பார்ப்போடு நடத்தப்பட்ட படுகொலை என்பதை நிரூபித்துக் காட்டுகிறது. பவானிபூர் கிராமத்துக்கு நேரில் சென்று உண்மைகளை அறிந்த பல்வேறு மனித உரிமை அமைப்புகளும் போலீசு வெறியர்களின் உள்நோக்கத்தை அம்பலப்படுத்தியுள்ளதோடு, இக்கொலைகாரர்களைத் தண்டிக்குமாறு அறிக்கை வெளியிட்டுள்ளன.

நக்சல்பாரிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள் என்று முத்திரை குத்தி போலீசார் யாரையும் கைது செய்து வதைக்கலாம்; சுட்டுக் கொல்லலாம், யாரும் கேள்வி கேட்க முடியாது; தீவிரவாத ஒழிப்பு வேட்டையில் ஈடுபட்ட போலீசாருக்குப் பதவி உயர்வும் பதக்கங்களும் பரிசுகளும் கிடைக்கும் - இதுதான் ஆட்சியாளர்களின் அறிவிக்கப்படாத அரசு பயங்கரவாதக் கொள்கை.

ஆட்சியதிகாரத்தில் அரசு பயங்கரவாதிகள் நீடிக்கும் வரை, போலீசு வெறியர்கள் பதவி உயர்வுக்காக அப்பாவி மக்கள் மீது நடத்தும் படுகொலை வெறியாட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியாது; மனித உரிமைகளை நிலைநாட்டவும் முடியாது.

பதவி உயர்வுக்காக அப்பாவி மக்களைச் சுட்டுக் கொன்ற உ.பி. போலீசார்.



## பிரிட்டிஷ் இராணுவத்தில் சிப்பாய்களாகச் சிறுவர்கள்

ஜனநாயகத்தின் தொட்டில், மனித உரிமைகளின் சொர்க்க பூமி என்றெல்லாம் முதலாளித்துவவாதிகளால் பீற்றிக் கொள்ளப்படும் இங்கிலாந்து நாட்டின் இராணுவத்தில், 18 வயதுக்கும் கீழான சிறுவர்கள் போர் வீரர்களாக பெருமளவில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். 1998-ஆம் ஆண்டு அந்நாட்டு இராணுவத்தில் 18 வயதுக்கும் குறைவான சிப்பாய்கள் 9466 பேர் இருந்தனர். அவ்வாண்டில் புதிதாக இராணுவத்துக்குச் சேர்க்கப்பட்டோரில் இவர்கள் மூன்றில் ஒரு பங்கினராவர். கடந்த ஈராண்டுகளில் இந்த எண்ணிக்கை மேலும் 8% அதிகரித்துள்ளது. இராணுவ அமைச்சகப் பதிவேடுகளின்படியே 1992-லிருந்து 1999 வரை பயிற்சி காலத்திலேயே 12 சிறுவர்கள் மரணமடைந்துள்ளனர். 1996-லிருந்து 1999 வரையிலான மூன்றாண்டுகளில் படுகாயமடைந்து உடல் ஊனமுற்ற போர் வீரர்களில் சிறுவர்கள் மட்டும் 407 பேராவர்.

அட்ரியாட்ரிக் கடல், கொசாவோ போர்களில் பிரிட்டிஷ் இராணுவம் ஈடுபட்டபோது, அப்போர்களில் 18 வயதுக்கும் குறைவான சிறுவர்களே முன்னணியில் நிறுத்தப்பட்டனர். மாசிடோனியாவில் போரின்போது ஒரு பிரிட்டிஷ் சிறுவன் கவச வண்டி ஓட்டுநராக இருந்ததை முதலாளித்துவப் பத்திரிகைகளே புகைப்படத்துடன் அம்பலப்படுத்தின. ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பாக்லாந்து போரில் ''பாரசூட்'' சிப்பாயாகச் செயல்பட்ட ஜேசன் பார்ட் எனும் 16 வயதுச் சிறுவன் போரில் கொல்லப்பட்டான். பார்ட்டின் பெற்றோர்கள், பயிற்சி முடியாத தமது அன்பு மகனை போருக்கு அனுப்பி பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் கொலை செய்து விட்டதாகக் குற்றம் சாட்டினர். இதேபோல, வளைகுடாப் போரின்போது தமது மகனை முன்னணிக்கு அனுப்பிக் கொன்றது எந்த வகையில் நியாயம் என்று கேட்டு, மகனை இழந்த ஒரு தாய் பிரிட்டிஷ் பேரரசிக்கே பகிரங்கக் கடிதம் எழுதினார்.

இந்த உண்மைகளை அண்மையில் தனது அறிக்கையில் அம்பலப்படுத்தியுள்ள அனைத்துலகப் பொது மன்னிப்புக் கழகம், நாகரீகமிக்க ஐரோப்பிய கண்டத்திலேயே, போர் முனைக்குச் சிறுவர்களை அனுப்பும் ஒரே நாடு இங்கிலாந்துதான் என்று குற்றம் சாட்டியுள்ளது. குழந்தைகளின் உரிமைகளைக் காப்பது, அவர்களைப் போர் முனைக்கு அனுப்பும் செயலைத் தடுப்பது முதலானவற்றை உள்ளடக்கிய ஒப்பந்தத்தில் அனைத்து நாடுகளுடன் கடந்த செப்டம்பரில் கையெழுத்திட்டுள்ள பிரிட்டிஷ் அரசு, அதற்கு எதிராகச் செயல்பட்டு வருவதை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இளஞ்சிறுவர்களை இராணுவத்தில் சேர்க்கும் இந்த ஏகாதிபத்திய அநாகரீகவாதிகளுக்கு, சிறு தொழில்களில் சிறுவர்கள் ஈடுபடுத்தப்படுவதைக் குற்றம் சாட்டி ஏழை நாடுகளின் மீது வர்த்தகத் தடை விதிக்க என்ன யோக்கியதை இருக்கிறது?

●●●

www.padippakam.com

# சாதி - தீண்டாமை வெறி சி.பி.எம். ஊழியர் பலி

கோவில்பட்டி வட்டாரம் மந்தித் தோப்பைச் சேர்ந்தவர் அமல்ராஜ். நெல்லை சட்டக்கல்லூரி மாணவரான இவர் 'மார்க்சிஸ்டு' கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினராகவும், இந்திய ஜன நாயக வாலிபர் சங்கத்தின் செயலாளரா கவும் இருந்து வந்துள்ளார்.

இதே ஊரைச்சேர்ந்த அலங்காரம் பிள்ளை என்பவர், கணேஷ் நகரில் உள்ள தன் தோட்டத்திற்கு சுற்றுச் சுவர் எழுப்பும் போது அரசுக்குச் சொந்தமான புறம் போக்கு நிலத்தையும் சேர்த்துக் கொண்டார். இது காலனிக்குச் செல்லும் நடைபாதைக்கு இடையூறாக இருப்பதால் அமல்ராஜும் அவர் நண்பர் பாலமுரு கனும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இவர்கள் கொடுத்த புகாரின் பேரில் வரு வாய்துறை அதிகாரிகள் புறம்போக்கு இடத்தில் கட்டப்பட்ட சுற்றுச் சுவரை மார்ச் 12-ஆம் தேதி இடித்துள்ளனர். இப்பிரச்சனையை ஒட்டி எழுந்த வாய் சண்டையில் அலங்காரம் பிள்ளையின் மனைவி, அமல்ராஜை சாதி பெயரைச் சொல்லி இழிவாகத் திட்டியுள்ளார். இதை எதிர்த்து தீண்டாமை ஒழிப்புச் சட்டப்படி வழக்குப் போடப் போவதாக எச்சரித் துள்ளர் அமல்ராஜ். எனவே அவரைக் கொல்ல தருணம் பார்த்திருந்தனர் அலங் காரம் பிள்ளை குடும்பத்தார்.

அமல்ராஜ் சி.பி.எம். கட்சியில் இருந்த போதும் அக்கட்சி நடவடிக்கைகளால் அதிருப்தியுற்று மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் செயல்பாடுகளை ஆதரித்து, உதவி வந்துள்ளார். பிரசுரங்கள், புத்த கங்கள் படிப்பதிலிருந்து மார்ச் 17-ஆம் தேதி கோவில்பட்டியில் நடந்த ம.க.இ.க. வின் பொதுக் கூட்ட ஏற்பாடுகள் வரை



கொலை செய்யப்பட்ட
தோழர் அமல்ராஜ்

ஆர்வத்துடன் கலந்து கொண்டு பங்காற்றி உள்ளார். பொதுக்கூட்டம் முடிந்த அன்று இரவு அவரும் அவரது நண்பர்கள் இரு வரும் வீட்டிற்கு செல்லும் வழியில் அலங் காரம் பிள்ளை, அவரது மகன் களால் அமல்ராஜ் படுகொலை செய்யப் பட்டுள்ளார். மற்ற இருவரும் படுகாய முற்றனர். இப்படுகொலையைக் கண்டித்து ம.க.இ.க. சார்பில் கோவில்பட்டி, சாத்தூர் பகுதிகளில் சுவரொட்டி ஒட்டப்பட்டது.

சாதி - தீண்டாமையை எதிர்த்த போரில் சி.பி.ஐ., சி.பி.எம். அணிகள் உயிர் துறப்பது இது முதல்முறையல்ல. அக் கட்சிகளின் தலைமையோ இத்தியாகத் திற்கு ஒருபுறம் கண்டனமும், நிவாரணம் கோரி ஆர்ப்பாட்டமும் நடத்திக் கொண்டே, மறுபுறம் தி.மு.க. அ.தி.மு.க. தலைமையிலான சாதிவெறி கூட்டணிக ளோடு மாறி, மாறி குலாவிக் கொண்டு திரிகின்றன.

சமூக அக்கறையும், போர்க் குணமும் உடைய இளைஞர்கள் போலி கம்யூ னிஸ்டு கட்சிகளின் இந்த இரட்டை வேடத்தைப் புரிந்து கொண்டு புரட்சிகர அமைப்புகளில் அணிதிரள வேண்டும். அதுவே அமல்ராஜ் போன்றவர்களின் இழப்பை ஈடுசெய்யும்.

ம.க.இ.க., சாத்தூர்.

## வாசகர் கடிதம்

★ அழுகி நாறும் கூட்டணி அரசியல் - தலையங்கம் அருமை. தமிழக அரசியலில் காலை வாரும் இலக்கணத்தை அருமை யாக கற்று தேர்ந்து இருக்கிறார் இராமதாஸ். போலி கம்யூனினிஸ்டுகளின் நிலையை எண்ணிப் பார்க்கும் போது நெஞ்சம் பொறுக்குதில்லையே!

– கே. ஷபியுல்லா,
ஏரிப்புதூர் (வேலூர்)

★ ஆர்.எஸ்.எஸ்.ஸின் சுதேசி பீற்றல் இந்திய ஆளும் வர்க்க மற்றும் தரகு முத லாளிகளின் நலனை முதன்மையாகக் கொண்டதே என்பதை அம்பலப்படுத்தியி ருந்தது பு.ஜ. கட்டுரை.

சமாதானம், போர் நிறுத்தம், அமைதி பேச்சு வார்த்தை - இந்தப் பின்னணியில் - குறைந்த பட்ச ஜனநாயக உரிமைகளைக் கூட அளிக்க முன்வராத இந்திய அரசுக்கு நாடாளுமன்றம் ஒரு கேடா?

– இராஜாஜி, திருவள்ளூர்




★ எந்த சாக்கடை அரசியல்வாதிகளும், யாருடனும் கூட்டணி வைத்துக் கொள்ளலாம். சோ போன்ற சூத்திரதாரிகள் தேவைக்குத் தகுந்தாற் போல் தூது சென்று அயோக்கியத்தனத்தைக் காட்டலாம். இதற்கு எல்லாம் தமிழக மக்கள் பலிகடா ஆக வேண்டுமென்பது வேதனைக்குரிய செயலாகும்.

– துரை. பிரசாத்,
சென்னை.

★ தலித் தலைவர்கள் ஆளும் வர்க்க அரசி யலில் கூட்டுச் சேர்வதும், ஓட்டுப் பொறுக்க சமரசம் செய்து கொள்வதும் தலித் மக்களுக்கு விடுதலையை வாங்கித் தராது. அவர்கள் பாட்டாளி வர்க்க அரசி யலில் சேர வேண்டும். அப்போதுதான் முழு விடுதலை கிடைக்கும்.

– சி. அசோக் குமார்,
அம்பத்தூர்.

●●●

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY)

REGISTERED WITH THE REGISTRAAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85

Regd. No. TN/Chief.PMG- 544

# இதுதான் இன்றைய இந்தியா



இந்தப் படத்தைப் பார்க்கும்பொழுது, "யாரோ, குஜராத் பூகம்பத்தில் மண்ணுக்குள் புதைந்து போய் இறந்து போனவர்" என்ற எண்ணம் நமக்குள் சட்டெனத் தோன்றலாம். ஆனால், உண்மையோ இதற்கு நேர்மாறானது. அவர் இன்னும் உயிரோடுதான் இருக்கிறார்; தனது தலையை மண்ணுக்குள் புதைத்துக்கொண்டு வித்தை காட்டுகிறார். பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் சிறுவன், இந்த வித்தையை வேடிக்கை பார்ப்பவர்கள் இரக்கப்பட்டு ஏதாவது ஒன்றிரண்டு காசு தரமாட்டார்களா என்ற எதிர்பார்ப்போடு கையை நீட்டிக் கொண்டிருக்கிறான். இப்படி இவர் அன்றாடம், ஒரே நாளில் பல முறை மண்ணுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டால் தான், இவரது குடும்பத்தின் அரை வயிறாவது நிரம்பும்.

இந்தியப் பொருளாதாரம் ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம், 6 சதவீதம் என வளர்ச்சியடைந்து கொண்டே செல்வதாகக் கூறுகிறார்கள். ஆனால், இவருக்கோ நிரந்தரமானஒருவேலைகிடைக்கவழியில்லை. அரசாங்கத்தின் உணவுக் கிடங்குகளில் அரிசியும், கோதுமையும் நிரம்பி வழிகிறது. ஆனால், இவரோ அரை வயிற்றுக் கஞ்சிக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராட வேண்டியிருக்கிறது.

கண்ணில் தப்பித் தவறி தூசி விழுந்து விட்டாலோ, அல்லது சாப்பிடும்பொழுது பொடிக்கல்லைக் கடிக்க நேர்ந்து விட்டாலோ நம் அனைவருக்கும் பதட்டமும், எரிச்சலும் ஏற்படும். ஆனால், இங்கே ஒரு மனிதன், அன்றாடம் தனது தலையை மண்ணுக்குள் புதைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் வாழ்கிறான் என்றால், குப்பையைக் கிளறித் தின்னும் மிருகங்களின் வாழ்க்கையைவிடக் கேவலமானதில்லையா, இது? இவர் ஒருவர் மட்டுமல்ல; ஒரிசாவைச் சேர்ந்த முண்டா போட்டா கேலா என்ற பழங்குடியின மக்களில் பெரும்பாலோர் இப்படி வித்தை காட்டிதான் வாழ்க்கையை ஓட்டுகிறார்கள்.



இதோ இந்தப் படத்தில் நாம் பார்ப்பது தில்லியில் உள்ள "சூப்பர் ஸ்டோர்". அந்தக் கடையின் முன் அடுக்கி வைக்கப் பட்டிருப்பதெல்லாம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் பழ ரசங்கள். படத்தில் நாம் காணும் பெண்ணும், தனக்குத் தேவையான அஞ்சறைப் பெட்டி சாமான் தொடங்கி அரிசி, கோதுமை வரை அனைத்தையும் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டதா எனப் பார்த்து, கேட்டு வாங்குகிறார். இந்த மேட்டுக்குடி இந்தியர்களுக்கெல்லாம் "ஆகஸ்டு 15"-ஐ விட, கடந்து போன ஏப்ரல் 1, 2001 தான் உண்மையிலேயே சுதந்திர நாள்! ஏனென்றால், அன்றுதான், இவர்கள் ஆசைப்பட்ட பொருட்களையெல்லாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ளுவதற்கு இனி எந்தத் தடையும் கிடையாது என அரசு அறிவித்தது.

கஞ்சிக்கு அல்லல்படுபவனைப் பாதுகாப்பதைவிட, பணக் கொழுப்பெடுத்துத் திரிபவர்களின் ஆசைகளை நிறைவேற்றுவதுதான் தனது கடமை எனக் காட்டிக் கொண்டது.

அரை வயிறு கஞ்சிக்காக முகத்தை மண்ணுக்குள் புதைக்கும் உழைக்கும் மக்கள் ஒருபுறம்; தங்களது முகத்திற்கு எந்த வெளிநாட்டு கிரீமைப் பூசிக் கொள்ளலாம் எனத் 'திணறும்' மேட்டுக்குடி கும்பல் மறுபுறம்; இவர்கள் வாழ்க்கையை ஓட்டத் தங்களின் உயிரைப் பணயம் வைக்கிறார்கள்; அவர்களோ, தங்களின் ஆசைகளை, ஆடம்பரத்தை நிறைவேற்றிக் கொள்ள இந்தியாவையே பணயம் வைக்கிறார்கள். நாம் மானமும், மரியாதையும் கொண்ட குடிமக்களா? இல்லை, மேட்டுக்குடி கும்பலின் பலிகிடாக்களா என்பதை முடிவு செய்ய வேண்டிய தருணம் இது!